இயேசுக் கிறிஸ்து

# நித்திய பலி




பெட்டி பர்டன் சோட்

CHURCH OF CHRIST
7, DAVIS ROAD,
P. BOX No.: 8405,
RICHARDS TOWN,
BANGALORE - 560 084.

சத்திய வழி இலக்கிய சேவை

தபால் பெட்டி எண் : 8405. 7, டேவிஸ்ரோடு,

ரிச்சர்ட்ஸ் டவுன், பெங்களூர் - 560084.

# முகவுரை

இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள், பிரசங்கங்களிலும் வேறு விரிவுரைகளிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கூறப்பட்டிருக்கின்றன. நமது இரட்சகரைப் பற்றிய விவரங்களை முறையாகத் தொகுத்தளிக்க வேண்டும் என்ற விருப்பம் நீண்ட காலமாக எனக்குள் இருந்து வந்தது. எனது எண்ணங்களில் இருந்த தனித்தனியான வெவ்வேறு விவரங்களை ஒன்றுக்கொன்று முரண்படாமல் ஒரேயொரு முழுக்காட்சியாக அமைத்துத் தொகுக்க ஆர்வம் மேலிட்டது; அதன் விளைவாக உருவானது இந்நூல்.

தெய்வத்துவத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்வது என்பது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதுதான். அதனுடைய ஒரு சிறு பகுதியை மட்டுமே நம்மால் காணமுடியும். ஆனால், வேத ஆராய்ச்சியாளர்கள் இந்தச் சிறு பகுதியைக் குறித்துக் கூட மாறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். தமது கருத்தில் பிடிவாதமான ஒரு எண்ணம் இருந்துவிடுமானால் அது தெளிவாகவும் ஆழமாகவும் ஆய்வு செய்ய இடையூறாகவே இருந்து வரும்.

இந்தப் புத்தகத்தில் உள்ள பல்வேறு பாடங்களின் கருத்துக்கள் ஒன்றித்து நிற்பதையும், ஒவ்வொன்றும் தனித்தனி இடங்களில் பொருந்தி வருவதையும் காணும்போது, ''நாம் செய்தது சரியே'' என்று எண்ணத் தோன்றுகிறது. இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் இருக்கவும், ஒன்றுக்கொன்று இன்னும் ஆழமானதாக அமையும்வரை இந்நூலை அச்சிடுவதில்லை என்று முடிவு செய்து இருந்தேன். வேதாகமத்திலுள்ள எந்த ஒரு தலைப்பை எடுத்து ஆராயும்போதும், நான் பின்பற்றிய இந்த

முறையானது சத்தியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வதில் தவறு ஏற்படாமல் இருக்க உதவி செய்யும் என்றே நம்புகிறேன். தெய்வத்துவத்தைப்பற்றி ஆராய்ச்சியிலும் இம்முறையே நம்பத் தகுந்ததாயுள்ளது.

வாசகர்களாகிய நீங்கள், இங்கே கூறப்பட்டுள்ள கருத்துக் களைப் பற்றி மாற்றுக் கருத்துடையவர்களாகக் கூட இருக்கலாம். அல்லது, எல்லாவற்றிலேயும் ஒத்துக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கலாம். வாசகர்கள் ஒவ்வொருவரும் திறந்த மனதுடன் வாசித்து, இது வரை நீங்கள் வாசித்திராத புதிய காரியங்களை இதில் வாசிக்கும்போது எதையும் அவசரக்கோலத்தில் ஏற்றுக்கொள்ளா மலும், முடிவுக்கு வராமலும் நிதானமாய் இருக்க உங்களை நான் வேண்டிக்கொள்கிறேன். பதினைந்து ஆண்டுக் காலமாக இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்தபோது இதற்கு ஆதாரமாக பற்பல வேத வசனங்கள் ஒன்று சேர்ந்தன. எனது ஆராய்ச்சியை முன்வைத்துக் கொண்டபோதிலும், இந்த ஆராய்ச்சிக்கு துணை செய்யும் வசனங்களையும், மாறுபடும் கருத்துக்களையும் ஒன்று திரட்டிக் கொண்டேன். எனவே, வேத வசனங்களே எனது ஆராய்ச்சி பாதையை அமைத்து, முடிவுகளைத் தீர்மானிக்கத் துணை புரிந்து, இப்புத்தகமாக அமைந்துவிட்டது. இப்புத்தகத்தில் வேத வசனங்களை முழுவதுமாகப் சேர்த்துள்ளேன். இப்புத்தகத்தை வாசிப்போர் ஒரு வேளை தம்மிடம் வேதாகமம் இல்லாவிட்டாலும், வசனங்கள் இருந்தால் விஷயங்களைப் புரிந்துகொள்ள வசதியாக இருக்குமே என்று, வசனங்களை முழுமையாகக் கொடுத்து இருக்கிறேன்.

எத்தனையோ ஆராய்ச்சியாளர்களின் நூல்களை நான் வாசித் திருந்தாலும், வேதத்தைப் பற்றிய செய்திகள் மனித யோசனை களின்படி அல்ல, வேத வசனங்களை வைத்தே புரிந்துகொள்ள

வேண்டும் என்பது எனது திட்டமான முடிவாகும். அதனால், இங்கே கருத்துக்களைக் கூறும்போதும் வேறு ஆராய்ச்சியாளர்களின் கூற்றைக் குறிப்பிடாமல் வேத வசனங்களையே குறிப்பிட்டுள்ளேன்.

இந்தப் பாடங்களைக் கற்போர், ஒரு முறைக்கு இரண்டுமுறை மூன்றுமுறை புரிந்து கற்பது நல்லது. முதலாவது வாசிக்கும் போது ஒரு முழுத்தோற்றத்தையும் மனதில் பெற்றுக்கொண்டு, இரண்டாம் முறை வாசிக்கும் போது விரிவாக ஆராய்வதும் பயனுள்ளதாக அமையும். 2 கொரிந்தியர் 3:18–ஆம் வசனம் கூறுகிறபடி ''நாமெல்லாரும், திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமை மேல் மகிமையடைந்து மறு ரூபப்படுகிறோம்''. நாம் அவரைப் போலாகவேண்டுமெனில், நமது ஆராய்ச்சியின் போது, அவரது சாயலை கண்ணாடியில் அதிக நேரம் தரிசித்துக் கொள்ள வேண்டும்.

கர்த்தர்மேல் நான் கொண்ட அன்பும், அவருடன் நான் கொண்ட நெருக்கமான உறவும்தான் இந்த ஆய்வின் முடிவுகளைக் கூறக் காரணமாயிற்று. இதனை நான் ''விலையேறப் பெற்ற முத்து'' என்று போற்றிப் பேணுகிறேன். அன்பே உருவான அவரை என்னுடன் சேர்ந்து இன்னும் அதிகமாக அறிந்து கொள்ளும்படி உங்களுக்கு தேவன் தம் கிருபையை வழங்க வேண்டுகிறேன்.

*- பெட்டி பர்டன் சோட்.*

# பொருளடக்கம்


I. முகவுரை

II. அறிமுகவுரை

1. இயேசுக்கிறிஸ்து

2. அநாதிமுதல் அவர் இருந்ததும் தேவத்துவத்தில் உள்ள உறவும்

3. வெறுமையாக்குதல்

4. மனிதனின் சகோதரன்

5. பிதாவினால் அனுப்பப்படுதல்

6. இறுதிப் பொறுப்பு

7. அவரின் மரணம்

8. சரீர மரணம் மட்டும் போதுமானதா?

9. மரணத்திற்குப் பின்னர்

10. நமது மறுமொழி

11. நினைவுச் சின்னம்

12. ஆளுகை செய்யும் தேவன்

13. நித்திய குமாரன்

14. நிறைவுரை

# அறிமுகவுரை



இந்த நூலை மக்களுக்கு அறிமுகப் படுத்துவதை ஒரு சிலாக்கியமாகவும் ஒரு பெருமையாகவும் உணர்கிறேன். இதன் ஆசிரியர் எனது மனைவியாகையால் அவரை நான் நன்கு அறிவேன். இவர் கிறிஸ்துவின் தியாகத்தையும், அந்தத் தியாகத்தால் அவரது ஊழியத்தில் ஏற்பட்ட விளைவையும், அவரது மரணம் உலகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களையும், காரியங்களையும் சீர்தூக்கிவைத்து மேற்கூரிய காரியங்களெல்லாம் எவ்வாறு நமது மனித வாழ்வுக்குச் சம்பந்தப்படுகிறது என்பன போன்ற மிக மேலானவற்றை பல ஆண்டுகள் ஆய்வு செய்து வந்தார்.

கிறிஸ்துவின் தியாகத்தைக் குறித்து பலரிடம் கலந்துரையாடியதைக் கண்டிருக்கிறேன். எங்களைச் சந்திக்க வந்தவர்களிடமும், நாங்கள் சந்திக்கச் சென்றவர்களிடமும் இதைப்பற்றி கலந்துரையாடியதையும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதையும் கவனித்திருக்கிறேன். இயேசுக் கிறிஸ்துவின் உன்னத தியாகத்தின் முழுப் பொருளையும் அவர்கள் அறியா திருந்தாலும், இவர் கூறிய கருத்துக்களை அவர்கள் வரவேற்கவே செய்தனர்.

இயேசுக் கிறிஸ்துவின் தியாகத்தைக் குறித்த இவரது கருத்து, வேதாகமத்தில் முழுவிபரமாகக் காணப்பட்ட போதிலும், எனக்குப் புதிதாகவே இருந்தது. இப்பேர்ப்பட்ட ஆழமான பொருளை ஜெபத்துடன் உய்த்துணரவேண்டியது அவசியம்.

ஏறக்குறைய 15 ஆண்டுகள் இந்தப் பொருளைக் குறித்து தீர ஆராய்ந்த பின்னரே இந்தப் புத்தகத்தை எழுதப் புகுந்தார். எழுதி முடித்த பின்னர் புகழ்பெற்ற எழுத்தாளர்களிடமும் செய்தியாளர் களிடமும், நண்பர்கள், குடும்ப உறவினர்களிடமும் இப்புத்தகத்தைப் பற்றி ஆலோசனைகள், திருத்தங்கள், யோசனைகள் வழங்கும்படி கேட்டு அனுப்பிவைத்தார். கிளை வில்கர்சன் இலக்கண யோசனை களையும், பாப், நைனா ஸ்டீவார்ட் ஆகியோர் இறுதியாக அச்சுப் பிழைகளையும் சரிபார்த்துத் தந்தனர்.

இது குறித்து நூலாசிரியரின் பேச்சுக்களைக் கேட்ட பலர் எதிர்பார்த்த படியே இப்பொழுது பூர்த்தி செய்யப்பட்டு புத்தக வடிவில் உருப்பெற்றிருக்கிறது. நமது சகோதரர்களின் மத்தியில் இது எவ்வாறு வரவேற்பைப் பெறப்போகிறது என்பதையும், எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படக் போகிறது, என்பதையும் அறிய ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். எல்லாம் சரிவர அமையுமானால் இதனை நாங்கள் இறைப்பணியாற்றும் நாடுகளிலெல்லாம் அச்சிடவுள்ளோம். அங்கெல்லாம் இந்தப் பொருள்பற்றிய இத்தகைய ஆய்வு நூல்கள் இல்லையென்றே சொல்லலாம்.

இதை நன்கு வாசித்து, இதிலுள்ள கருத்துக்களை அவசரப்பட்டு ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ செய்யும் முன், தீர சிந்தித்துச் செய்ய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

இதனாசிரியர் இதை எழுதும்போது ஏதோ மாறுபட்ட கருத்தை எழுதவேண்டும் என்ற எண்ணத்தில் எழுதவில்லை. தான் ஆழமாக ஆராய்ந்து நம்பினதை எழுதியிருக்கிறார். கிறிஸ்துவைப் பற்றியும், நமது இரட்சிப்பைக் குறித்தும் வேத வசனங்கள் என்ன

கூறியிருக்கிறது என்பதைத்தான் எழுதியுள்ளார். நாம் வேத வசனமாகிய பாலைப் பருகுகிறவர்களாக இருந்தால் மட்டும் ஆவிக்குரிய வகையில் பூரண வளர்ச்சி பெற முடியாது. இந்தப் புத்தகம் சபையில் புதிய ஆர்வத்தைத் தூண்டி மேலும் வேதம் என்ன கூறுகிறது என்று ஆராய்ந்து அதனை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம்.

உண்மையிலேயே கிறிஸ்துவின் தியாகத்தை, நாம் இரட்சிப்பைப் பெற அவர் செலுத்திய மாபெரும் கிரயத்தை நாம் புரிந்துகொள்ளும்போது, நமது கிறிஸ்தவ வாழ்க்கை இன்னும் நன்முறையில் வளர்ந்திட உதவி செய்யும். இந்த நோக்கத்திற் காகவே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. அதற்காகவே நானும் வாசகர்களுக்கு இதனை அறிமுகம் செய்து வைக்கிறேன்.

*- J.C. சோட்*

# இயேசுக் கிறிஸ்து

எல்லா மனித இதயங்களிலும் ஒரு மதம் உண்டு; ஒரு இறைவனும் உண்டு. இவைகளின் மீது நம்பிக்கை வைக்காதவன் பெருமைக்காரன், மேட்டிமைக்காரன். கடவுள் என்று ஒன்றை நம்பாவிட்டாலும் தன்னையே நம்புகிறான். இதுவே அவனது மார்க்கமாகவும் ஆகிவிடுகிறது. நாம் மற்றொரு எல்லையைப் பார்த்தால், உலகத்தில் சொல்லப்படுகிற எல்லாக் கடவுள்களையும் ஒன்று விடாமல் அறியாமையால் வணங்கி, வழிபடுகிறவர்களையும் காணலாம். அவ்வாறு வணங்கத்தவறினால் அந்தத் தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்று அஞ்சுவோரும் உண்டு.

தொன்று தொட்டே மனிதன் மாறாமல்தான் இருந்து வருகிறான்.

மன மேட்டிமையை அறிந்த தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாக கீழ்க்கண்டவாறு கூறுகிறார். [எசேக்கியேல் 28:2-10] ''மனுப்புத்திரனே, நீ தீருவின் அதிபதியை நோக்கி; கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்ன வென்றால், உன் இருதயம் மேட்டிமை கொண்டு நான் தேவன், நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன், என்று நீ சொல்லி, உன் இருதயத்தை தேவனுடைய இருதயத்தைப் போலாக்கினாலும், நீ மனுஷனேயல்லாமல் தேவனல்ல.

இதோ, தானியேலைப் பார்க்கிலும் நீ ஞானவான். இரகசியமான தொன்றும் உனக்கு மறை பொருளல்ல. நீ உன் ஞானத்தினாலும் புத்தியினாலும் பொருள் சம்பாதித்து பொன்னையும் வெள்ளை யையும் உன் பொக்கிஷத்தில் சேர்த்துக் கொண்டாய். உன் வியபாரத்தினாலும், உன் மகா ஞானத்தினாலும் உன் பொருளைப் பெருகப்பண்ணினாய். உன் இருதயம் உன் செல்வத்தினால் மேட்டிமையாயிற்று. ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லு கிறது என்னவென்றால், நீ உன் இருதயத்தை தேவனுடைய

இருதயத்தைப் போல் ஆக்குகிறபடியினால் இதோ ஜாதிகளில் மகா பலவான்களாகிய மறு தேசத்தாரை உனக்கு விரோதமாக வரப்பண்ணு வேன்; அவர்கள் உன் ஞானத்தின் அழகுக்கு விரோதமாய்த் தங்கள் பட்டயங்களை உருவி, உன் மினுக்கைக் குலைத்துப் போடுவார்கள். உன்னைக் குழியிலே விழத்தள்ளுவார்கள். நீ சமுத்திரங்களின் நடுவே கொலையுண்டு சாகிறவர்களைப்போல் சாவாய். உன்னைக் கொல்லுகிறவனுக்கு முன்பாக நான் தேவன் என்று நீ சொல்லு வாயோ? உன்னைக் குத்திப் போடுகிறவன் கைக்கு நீ மனுஷனே யல்லாமல் தேவனல்லவே. மறு தேசத்தானின் கையினால் நீ விருத்தசேதன மில்லாதவர்கள் சாவதுபோல் சாவாய். நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்''.

அத்தேனே பட்டணத்தின் வீதிகளிலே இவற்றிற்கெல்லாம் வேறுபட்ட கருத்தை அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறதைப் பார்க்கிறோம்.

''நான் சுற்றித்திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவ ராயிருக்கிறபடியால், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் சுவாசத்தையும் சகலத் தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்றும் தேவையானது போல மனுஷர் கைகளினால் பணிவிடை கொள்கிறதுமில்லை. மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர் குடியிருப்பின் எல்லை களையும் குறித்திருக்கிறார்.

கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும் படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புதல்வர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன் வெள்ளிகள் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமை யுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார், இப் பொழுதோ மனம் திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல் லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக்குறித் திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்''. [அப். 17:23-31].

மிகவும் வேறுபட்ட இந்த இரண்டு எல்லைகளுக்கு இடையே தான் மக்கள் திரள் காணப்படுகிறது. இவர்கள் சாதாரணமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு மார்க்கக் காரியங்களைக் குறித்த ஆழமான அக்கறை இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் வாழ்க்கையில் முடிந்த அளவுக்கு ''நல்லவர்''களாக வாழவே முயற்சி செய்கிறார்கள். எந்தக் கடவுளானாலும் சரி நாம் நல்லவர் களாக மட்டும் இருந்தால் போதும். நாம் மரிக்கும்போது கடவுள் நம் மீது பிரியப்படுவார். எல்லா மதங்களும் ''நல்லவர்களாக இரு''ங்கள் என்று தானே போதிக்கின்றன என்று தர்க்கவாதம் புரிவார்கள்.

இது உண்மையே! எல்லாமதங்களும் தனிமனித வாழ்விலும், சமுதாய வாழ்விலும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று கற்பிக்கத்தான் செய்கின்றன. அப்படியானால் தனி மனிதன் நல்லவனாக இருந்து விட்டால் மட்டும் போதுமா? தேவனுக்கு

ஏற்றவர்களாகி விட முடியுமா என்பது சிந்திக்கவேண்டிய கேள்வி. எந்த மதமும் இதற்கு பதில் சொல்வதில்லை.

எல்லா மதங்களும் தங்கள் போதனைகளின்படி கடவுளின் மன்னிப்பையும் பெறவேண்டுமானால் ஏதோ ஒரு வகையான காணிக்கையாகவும், உயிர் பலியாகவும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகின்றன.

சில மதங்கள் காணிக்கை செலுத்தி மன்னிப்பைப் பெறலாம் என்றும், விலங்குகளை பலி செலுத்தியும், தவம் செய்வதன் மூலமாகவும், தங்கள் உடலையே வதைத்துக்கொள்வதின் மூலமும் மன்னிப்பைப் பெற முடியும் என்று போதிக்கின்றன. பல பிறவிகள் உண்டு என்று சில மதங்களும், தான் செய்த தீய செயல்களுக்கு மேலாக புண்ணியங்கள் செய்து மன்னிப்பைப் பெறலாம் என்று சில மதங்களும் போதிக்கின்றன. இந்த மதங்கள் கூறும் சாராம்சம் ஒன்று தான். அதாவது, மனிதன் தனது சுயமுயற்சியினால் தன்னை இரட்சித்தக்கொள்ள வேண்டும், பாவ விமோசனம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் போதிக்கின்றன.

ஒரே ஒரு மதம் மட்டுமே மனிதன் தன் சுயமுயற்சியினால் இரட்சிப்பைப்பெற முடியாது என்று போதிக்கிறது. இரட்சிப்பைப்பெற வேண்டுமானால், அந்த இரட்சிப்பைத் தரக்கூடிய ஒரு இரட்சகர் வேண்டும். அவர் தான் பாவங்களை மன்னித்து இரட்சிப்பை அருளுபவர். ஒரே ஒரு மதம் மட்டுமே தான் அவரை நமக்குத் தருகிறது. இயேசுக் கிறிஸ்து இந்த உலகத்திற்குக் கொண்டு வந்த ஒரே ஒரு மார்க்கம் மட்டும் தான் அப்படிக் கூறுகிறது.

எல்லா மதங்களுக்கும் ஒரு ஸ்தாபகர், ஒரு பரிசுத்த புருஷர் உண்டு என்றும், அவர்கள் தாங்கள் கூறிய கருத்துக்களுக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்றும், அவற்றிற்காகவே மரிக்கவும் செய்தனர் என்றும் கூறலாம்.

அவர்களின் கூற்றுப்படி ''மதங்கள் எல்லாம் நல்லனவே'', மதங்களின் தலைவர்கள் புண்ணிய புருஷர்கள்- நல்லவர்கள். புத்தர் கிருஷ்ணர் போன்றே ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவும் ஒருவர் என்பது அவர்களின் வாதம்.

இது மெய்யான கூற்றுத்தானா? இயேசுக் கிறிஸ்துவும் மற்ற மதத்தலைவர்கள் போன்ற புண்ணிய புருஷர்தானா? கிறிஸ்து தமது மரணத்தின் வாயிலாக உலகத்திற்குத் தந்த மார்க்கமானது மற்ற மதங்களில் கூறியிருப்பதைப் போன்ற ஒரு மதம் தானா? மற்றவற்றைப் போல இதுவும் ஒன்றா? ''இல்லை'' என்றால், இயேசுக் கிறிஸ்து மற்றெல்லாரிலும் எவ்வாறு வேறுபட்டவர்? மற்ற புனிதர்களும், மதங்களும் கொடுத்திராத வேறு என்ன காரியத்தை இயேசுக் கிறிஸ்து கொடுத்தார், அல்லது செய்தார்?

''நானே சத்தியமும் வழியும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்''. என்று இயேசு கூறினார். [யோவான் 14:6] இந்த சத்திய வசனத்தின் மூலம் பிதாவாகிய தேவனைச் சேர்வதற்கு தாமே வழி என்று இயேசு உரிமையுடன் உறுதிபடக் கூறியிருக்கிறார். எந்த ஒரு அதிகாரத் தினால் அவர் அவ்வாறு கூறினார். அவர் கூறுவது மெய்தானா? மெய்தானென்றால், இவ்வுலகில் வந்த மற்ற புண்ணிய புருஷர் பலரில் கிறிஸ்துவும் ஒருவர் அல்லர். ''அவரே ஆண்டவர்'' இந்தப் பொருளைக் குறித்துத்தான் நாம் மேலும் விளக்கமாகவும் விரிவாகவும் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

# அநாதிமுதல் அவர் இருந்ததும், தேவத்துவத்தில் உறவும்.

தேவத்துவத்தில் இயேசுக் கிறிஸ்துவின் பங்கும் அதிகாரமும் என்ன என்று அறிந்து கொள்ள வேண்டுமானால் அவரைக்குறித்த முழுவிவரம் என்ன? அவர் யார்? அவரது துவக்கம் என்ன? எவ்வளவு காலமாக அவர் இருக்கிறார் என்பனவற்றையெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அவர் மனிதனாகப் பிறந்து ஜீவித்த அந்தச் சிறிய காலம் மட்டும் தான் கிறிஸ்துவின் காலம் என்றும், அவர் ஓர் நல்ல மனிதராக வாழ்ந்தார். பிதாவிற்குக் கீழ்ப்படிந்தவராக வாழ்ந்தார். ஆகவே தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். அதனால் அவரை தேவ குமாரன் என்று அறிந்து கொள்ளலாம் என்று சிலர் கருதுகிறார்கள்

வேறு சிலர் இயேசுக் கிறிஸ்து அநாதிகாலம் முதல் தேவ குமாரனாக தேவனாகிய பிதாவுடன் இருந்தார் என்று கூறுகின்றனர். அவரது மனிதப் பிறப்புக்காரணமாக அவர் மனித சரீரத்தைத் தரித்துக் கொண்டார் என்ற ஒன்றினால் தான் வேறுபடுகிறார் என்று நம்புகின்றனர்.

இவ்வுலகில் தேவன் தீர்க்கதரிசனங்களின் மூலம் அறிவிக்கப்பட்டார் என்றும், அவர் பற்பல மனிதப் பிறவிகள் எடுத்ததன் மூலமாகவும் அறியப்பட்டார் எனவும் பலர் நம்புகின்றனர். அதேபோல், இயேசுக்கிறிஸ்துவும் கடவுளின் வழிகாட்டுதல் உலகிற்குத் தேவைப்படும் போது வெளிப்பட்டார் என்றும் கூட நம்புகின்றனர்.

மக்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களையும், பிறர் சொற்களையும் வைத்துக்கொண்டு முடிவு செய்வதால் தான் இத்தகைய முரண்பாடான கருத்தக்களைக் கொள்கிறார்கள்.

இயேசுக் கிறிஸ்துவைப்பற்றி மெய்யானதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் நாம், மூல ஆதாரமான வேதாகமத்திலிருந்து தான் அவரைத் தெரிந்து கொள்ள முடியும். வேதம் அவர் யார் என்பதைத் திட்ட வட்டமாக உரைக்கிறது; அவரின் துவக்கம் என்ன என்பதையும் உரைக்கிறது. அவர் யார்? அவரின் துவக்கம் என்ன?

யோவான் எழுதின சுவிசேஷம் 1:1-3 வசனங்கள் நம்மை அநாதிக்கு அழைத்துச் செல்கிறது. தேவத்துவத்தின் துவக்கத்திற்கல்ல, உலகத்திற்கும், அதில் வாழும் மக்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு குறித்த விவரங்களை நமக்களிக்கிறது.

ஆதியிலே [ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்] [ஆதி 1:1] என்ற வார்த்தைகள் இங்கே எதிரொலிப்பதைக் காண்கிறோம் வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனோடிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாயுண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

எபிரெயர் 1:2-ம் வசனத்தின் பிற்பகுதியில் ''இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்!! என்று வாசிக்கிறோம்.

''அவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்தில் உள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்

படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும், அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது''.

இவ்வசனங்கள் தேவத்துவத்தில் ஒருவராகிய ''வார்த்தை''யை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த ஆதி விவரங்களை காணும் போது, பிதாவுக்கு கீழ்ப்படிந்தவரான ஒரு குமாரனை காணாமல் தேவத்துவத்தில் ஒருவராகிய ''வார்த்தை''யாய் பூரண சமத்துவமுடையவராகவே அறிந்து கொள்கிறோம்.

## வார்த்தை

அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அந்த வார்த்தை தேவனோடிருந்தது. சிருஷ்டிப்பில் அவருடன் இணைந்து செயலாற்றினார். அவருக்குள் [வார்த்தைக்குள்] ஜீவனிருந்தது. மனிதன் கடவுளிடம் பெற்றிருக்கும் உயிர் [ஜீவன்] போன்றதல்ல. ஆனால் தம்மில் தாமே பெற்ற ஜீவன். அந்த ''வார்த்தைக்குள்ளாக தேவத்துவத்தின் குணப் பண்புகள் அடங்கியுள்ளன. தம்மில் தாமே ஜீவன் உள்ளவராக தனித்தும், வேறுபட்டும், வெளியாதாரங் களற்றதாயும் இருக்கிறது. மேலும் வேத வசனங்களில் வார்த்தையானவரைக் கொண்டும் அவருக்கென்று சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன என்றும் அறிந்து கொள்கிறோம்.

''இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்தார்''. என்று எபிரெயர் 1:3ல் வாசிக்கிறோம்.

சாதாரணமாக வேதத்தை வாசிக்கும் ஒருவன், தேவன் பழைய ஏற்பாட்டின் மையப்பொருளாகவும், அவருடைய குமாரனாகிய

இயேசுக் கிறிஸ்து, புதிய ஏற்பாட்டின்கருப்பொருளாகவும் விளங்குகின்றனர் என்று எண்ணிக் கொள்வார்கள். ஆனால் ஊன்றிக்கவனித்தால் முற்றிலும் வேறுபட்ட முடிவுக்கேவர வேண்டியவர்களாக இருப்பார்கள்.

## "ஏல்" "ஏலோகிம்"

### (EL and Elohim)

பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரெயு மொழியில் 'தேவன்' என்ற சொல் ஒருமையிலும், பன்மையிலும் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. 'ஏல்' என்று ஒருமையில் கூறப்பட்ட சொல் பழைய ஏற்பாட்டில் 500 முறையும், "ஏலோகிம்" என்று பன்மையில் கூறப்பட்ட சொல் 3000 முறையும் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். ஆங்கில வேதாகமத்தை வாசிக்கும் ஒருவர் 'தேவன்' என்று எங்கெல்லாம் ஒருமையில் நினைக்கிறாரோ அங்கெல்லாம் பன்மையில் [பிதா, குமாரன், பரிசுத்தாவி] அர்த்தம் கொள்கிறார் எனலாம். இதற்கு சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

"ஆதியிலே தேவன் [ஏலோகிம்-பன்மை] வானத்தையும் பூமியையும் படைத்தார்". [ஆதி 1:1] "பின்பு தேவன்", நமது [பன்மை] சாயலாகவும், நமது [பன்மை] இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் [பன்மை] ஒருவரைப் போலானான் [ஆதி 3:22].

"இஸ்ரவேலே,கேள். நம்முடைய தேவனாகிய [யெகோவா] கர்த்தர் 'ஏலோகிம்' [பன்மை] [உபா 6:4] தேவன் [யெகோவா -ஒருமை] ஒருவரே!! எபிரெய Archid ஒன்றித்தது, தனித்தது அல்ல] இந்த வசனம் தேவன் முற்றிலும் ஒன்றானவர் என்ற பொருளிலும், நோக்கத்திலும் விளக்குவதுடன், தேவத்துவத்தின் பன்மைத் தன்மையையும் தெளிவாக்குகிறது.

''நான் முந்தினவரும் நான் பிந்தினவரும் தானே என்னைத் தவிர தேவன் [ஏலோகிம்–பன்மை ] இல்லையென்று இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும் [யெகோவா] சேனைகளின் கர்த்தருமாகிய [யெகோவா] அவனுடைய மீட்பர் சொல்லுகிறார்''. [ஏசாயா 44.6]

''நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய [யெகோவா] கர்த்தர்'' [ஏலோகிம்–பன்மை] [ஏசாயா 43:3]

''ஏலோகிம்'' என்ற சொல் திரும்பத்திரும்ப ஒருமை வினைச் சொல்லுடன் கூறப்படுகிறது. இதுவும் தேவத்துவத்தின் ஒருமைப் பாட்டைக் கூறுகிறது. உதாரணமாக ஆதி 1:1. 'ஏலோகிம்' என்ற சொல் 'படைத்தார்' என்ற ஒருமை வினையுடன் வருகிறது. [படைத்தார் என்ற சொல்லுக்கு Bara என்ற சொல் வருகிறது].

இவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் தேவத்துவம் செயலாற்றிக் கொண்டிருந்தது என்பதே. இங்கே ''வார்த்தை'' யானவரின் பங்கு என்ன என்பதை புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். யோவான் 1:1ல். ''அவர் தேவனாயிருந்தார் என்றும் அவர் தேவனோடிருந்தார் என்றும் அறிகிறோம். பிதாவாகிய தேவனை உள்ளடக்கியது தேவத்துவம் என்று வேதாகமத்தில் பற்பல இடங்களில் காண்கிறோம். அது பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் எல்லாம் இணைந்தது. தேவத்துவத்தில் ஒருவராகிய ''வார்த்தை''யானவர் தம்மில் தேவனுக்குரிய எல்லா அம்சங்களையும் கொண்டவராகவே இருக்கவேண்டும். ஜீவன் சர்வவல்லமை, சர்வவியாபி பூரணத்துவம் ஆகிய அனைத்தையும் பெற்றவராகவே இருத்தல் வேண்டும். அவர் சமத்துவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். இல்லையென்றால் அவர் தனிப்பெரும் பொருளாய் இருக்க முடியாது.

அவரது பெரும்பங்கு என்ன என்பதை யோவான் 1:14ல் தெளிவாகக்காண்கிறோம். ''அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள் வாசம் பண்ணினார்; இது மகிமை யாகவே இருந்தது''.

இவ்விதமாகவே ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் அறிமுகப் படுத்தப்படுகிறார். பிதாவுக்கு ஒரே பேறானவராகிய இவரைக்குறித்து நாம் செய்யும் ஆராய்ச்சிக்கு முன் ''ஆதியிலே'' என்ற வார்த்தைக்கும் ''அந்த வார்த்தை மாம்சமாகி'' என்ற இவ்விருதொடர்களுக்கும் இடையிலே உள்ள விஷயங் களைக் காண்போம். ''வார்த்தை''யானவரின் பங்கு பழைய ஏற்பாட்டில் என்னவாக இருந்தது என்றும் பகுத்தாய்வோம்.

## பழைய ஏற்பாட்டுப் பகுதிகளும் அவரது செயல்பாடுகளும்.

வார்த்தையானவர் [காலம் நிறைவேறினபோது மாம்சமான இயேசுக் கிறிஸ்து] மனிதனாக பிறப்பதற்குமுன் உலகச் செயல்பாடுகளில் இயங்கி வந்தாரா? அல்லது புதிய ஏற்பாட்டுக் காலத்தில்தான் தன் பங்களிப்பைச் செய்யும் வரை தேவனாகிய பிதாவிற்கு கீழ்ப்படிந்த குமாரனாக அவரது வலது பாரிசத்தில் வீற்றிருப்பதாக மட்டும் இருந்தாரா?

இக்கேள்விகளுக்கு கீழ்க்காணும் வசனங்களே விளக்கம் தருவதைக் காணலாம்.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| ஏசாயா-44:6 | வெளி-1:8 |
| ''நான் முந்தினவரும், நான் பிந்தினவரும்தானே; என்னைத் தவிரத் தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின்கர்த்தராகிய அவருடைய மீட்பரும் சொல் லுகிறார்.'' | ''இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமை யுள்ள கர்த்தர் : நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமு மாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார். |

மேற்குறித்த இரண்டு வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, புதிய ஏற்பாட்டில் காணும் இயேசுக்கிறிஸ்துவும், பழைய ஏற்பாட்டில் பூரண அதிகாரத்துடன் கூறுபவரும் ஒருவரே என்று அறிகிறோம்.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| ஏசாயா 48:20,21 | 1கொரி 10:1-4 |
| தம்தாசனாகிய யாக்கோபை மீட்டுக் கொண்டார் என்று சொல்லுங்கள்.. அவர் அவர்களை வனாந்திரங்களில் நடத்தும்போதும் அவர்களுக்கு தாகவிடாயிருந்ததில்லை கன்மலையிலிருந்து தண்ணீரை அவர்களுக்குச் சுரக்கப்பண்ணினார். கன்மலையைப் பிளந்தார், தண்ணீர் ஓடி வந்தது. | நம்முடைய பிதாக்கள் எல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள். எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள். ஞானபானத்தைக் குடித்தார்கள், ஏனெனில் அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே. |

# தேவ தூதன்

யாத்திராகமம் 3ம் அதிகாரத்தையும் 1 கொரிந்தியர் 10:1-4 வசனங்களையும், யோவான் 8:51-59 வசனங்களையும் அருகருகே வைத்துப் பார்ப்போமானால் ''வார்த்தை'' யானவரின் பங்கு பழைய ஏற்பாட்டில் என்னவாக இருந்தது என்று புரிந்துகொள்ள உதவியாக இருக்கும். யாக் 3:2ல் கர்த்தருடைய தூதனானவர் எரிகிற முட்செடியில் தரிசனமானார் என்று காண்கிறோம். படைக்கப்பட்டவர்களாகிய தேவதூதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தத்தூதன் கர்த்தருடைய தூதன் என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும் அவர் படைக்கப்பட்ட மற்ற தூதர்களைப் போல் ஒருவர் அல்ல. யாத் 3:4ல் அவர் ''கர்த்தர்'' என்றும் ''தேவன்'' என்றும், வசனம் 6ல் ''நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களின் தேவன்'' என்றார். வசனம் 8ல் ''அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலை

யாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி....'' என்று வாசிக்கிறோம்.

1கொரி 10:1-4 ல் இஸ்ரவேலருடன் இடைப்பட்டவர் ''வார்த்தையானவர் ''தான் என்றும் பிற்காலத்தில் மனுஷ சாய லாகிய - ரூபமாக - கிறிஸ்துவாகப் பிறந்தார் என்றும் காண்கிறோம்.

'' அப்பொழுது மோசே தேவனை நோக்கி நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களின் தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால் நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்குத் தேவன் : இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, '' இருக்கிறேன்'' என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்''. [யாத் 3:13,14]

யோவான் 8ம் அதிகாரத்தில் இயேசு யூதர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் ''ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னே நான் இருக்கிறேன்''. என்று கூறுகிறார். இவ்விதமான தேவனுக்கு உரியனவற்றைத் தன்னதாகக் கூறும் போது அவர் அநாதிகாலமுதல் இருக்கிறவர் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. மோசேயுடன் பேசிய ''இருக்கிறேன்'' என்பவருடன் இணைத்துப் பேசுகிறார். அவரது உரையாடலைக் கேட்டவர்கள் அவர் என்ன உரிமையுடன் பேசுகிறார் என்பதைப்புரிந்து கொண்டார்கள். எனவே அவரை கல்லெறிந்து கொல்லும் பொருட்டு கற்களை எடுத்துக் கொண்டார் கள். ஏனெனில் இயேசு இப்படிப்பேசுவது அவர்களுக்கு தேவதூஷ ணமாக இருந்தது.

'கர்த்தர்' என்று தனிப்படுத்திக்காட்டும் சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதால், இவர் மற்ற படைக்கப்பட்ட தேவ தூதர்களிலும்

வேறுபட்டவர் என்று அறிந்து கொள்ளலாம். மற்ற அந்தத்தூதர்களெல்லாம் தேவனுக்குப்பணிவிடை செய்யும் வேலைக்காரர்களே. இதற்குச்சான்றாக பல்வேறு வசனங்கள் உண்டு. யாத் 32:4,14:19 நியாயாதிபதி: 2:1, 13:6, 2 சாமு 14:17,20 ஏசாயா 63:9 ஆகிய வசனங்களை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம். யாத்திராகமம் 32:34 தொடங்கி அதிகாரம் 33 முடிய உள்ள பகுதிகளில் கர்த்தர் தமது ''தூதனை'' இஸ்ரவேலருக்கு முன்பாக அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார்.

யாத்திராகமம் இரண்டாம் அதிகாரத்திலும், யோவான் எட்டாம் அதிகாரத்திலும் தேவத்துவத்தில் தூதர் ஒருவர் என்று இணைத்துக் கூறுவதாலும், 1 கொரிந்தியர் 10:1-4 வசனங்கள் இஸ்ரவேலருடன் கிடைப்பவர் ஞானக்கன்மலையான இயேசுக்கிறிஸ்து என்று தெரிவு செய்வதாலும், யாத்திராகமம் 32ம் அதிகாரத்தில் கூறப்பட்ட அனுப்புகிறவரானவர் பிதாவாகிய தேவன் என்றும் அனுப்பப்பட்டவர் 'வார்த்தை'யானவராகிய தூதன் என்றும் அவர்தான் இயேசுக் கிறிஸ்து என்றும் அறிந்து கொள்ளலாம்.

நியாயாதிபதிகள் 2:1ல் தூதனானவரை ''உங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தவர்'' என்று கூறுகிறது. யாத்திராகமம் 13ல் மனோவா, கர்த்தருடைய தூதனை அனுப்பும்படியாக கேட்கிறான். வசனம் 9ல் கர்த்தருடைய தூதன் வந்த சம்பவத்தைக் காண்கிறோம். மனோவாவின் சத்தத்துக்கு தேவன் செவி கொடுத்த தூதனை அனுப்பிவைத்தார் என்று பார்க்கிறோம்.

அனுப்புகிறவர் கர்த்தர் என்றும் அனுப்பப்பட்டவர் அவரது தூதன் என்றும் மீண்டும் இங்கே காண்கிறோம்

ஏசாயா 63:7-10ல் கர்த்தர், இஸ்ரவேலரை இரட்சித்த தூதர், பரிசுத்த ஆவியானவர் என்றும் தேவத்துவத்தில் மூவரையும் காண்கிறோம்.

கிறிஸ்துவைச் சுட்டிக் காட்டும் பழைய ஏற்பாட்டுப் புத்தகங் களில் முழுவதிலும் தேவனைக் குறித்த தீர்க்கதரிசனங்களும், வாக்குகளும் கூறப்படுகின்றன. அவை யாவும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவில் நிறைவேறுகிறது என்று பார்க்கிறோம்.

[கீழே கொடுக்கப்பட்டவற்றில் தடித்த எழுத்தில் அச்சிடப் பட்டவை உறுதிபடக் கூறுவதற்காக என்னுடைய சேர்ப்புகள்]

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| ***ஏசாயா 40:3***<br>கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள், அவாந்தர வெளி யிலே நம்முடைய தேவனுக்கும் பாதையை செவ்வை பண்ணுங்கள். | ***மத்தேயு 3:3***<br>இது யோவான் ஸ்நானன் [வனாந் தரத்தில் கூப்பிடு கிறவனுடைய சத்தம்] என்று ஏசாயா தீர்க்கதரிசி யால் அழைக்கப்பட்டவன் "கர்த்த ருக்கு வழியை ஆய்த்தப் படுத்துங்கள். அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள்" என்று வனாந்திரத்தில் கூப்பிடு கிறவனுடைய சத்தம். மீண்டும் யோவான் 1:30ல் எனக்குப் பின் ஒருவர் வருகிறார். என்று அடையாளம்காட்டி "இதோ உலகத் தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" என்று கூறு கிறார். |
| ***சங்கீதம் 24 : 9,10***<br>......"மகிமையின்ராஜா உட்பிர வேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர். அவரே மகிமையின் ராஜா. | ***I கொரிந்தியர் 2:8***<br>இந்தப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள் அவரை அறியவில்லை. [கிறிஸ்துவின் மூலமாய் கடவுளின் செயல்பாடுகள்] அறிந்திருந்தாரானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்கள். |

*எரேமியா 23:5*

''இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு ***நீதியுள்ள*** கிளையை எழும்பப்பண்ணுவேன். அவர் ராஜாவாயிருந்து ஞானமாய் ராஜரீகம் பண்ணி பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்''. ***நமது நீதியாகிய ஆண்டவர்.***

*ஏசாயா 8:13,14*

''சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தப் படுத்துங்கள்... அவர் உங்களுக்குப் பரிசுத்தஸ்தல மாயிருப்பார்... இடறுதலின் கன்மலையும் எருசலேமின் குடிகளுக்கு சுருக்கும் கண்ணியுமாயிருப்பார்''.

*சங்கீதம் 110:1*

தாவீதின் வாயிலாக இது வருகிறது ''கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்'' என்றார்.

*யாக்கோபு 2:1*

மகிமையுள்ள நம்முடைய கர்த்தரா யிருக்கிற இயேசுக்கிறிஸ்து.

*I கொரிந்தியர் 1:30,31*

அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்... ***அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.***

*I பேதுரு 2:7,8*

''ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது, கீழ்ப்படியாமலிருக்கிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக் கல்லாகிய அந்தக்கல் இடறுதலுக்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று''.

*அப்போஸ்தலர் 2:34-36*

''தாவீது பரலோகத்துக்கு எழுந்து போக வில்லையே... நான் உமது சத்துருக்களைப் பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்'' என்று அவன் சொல்லியிருக்கிறான். ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன், ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்'' என்றான்.

***மல்கியா 3:1***

இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவன் எனக்கு முன்பாய் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான். அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம் முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார். இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

***லூக்கா 1:76***

தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானனைப் பற்றிக் கூறுகிறது. ''நீயோ பாலகனே உன்னதமானவருடைய தீர்க்கதரிசி எனப்படுவாய். நீ கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துவாய்.

***யோவான் 1:30***

யோவான்ஸ்நானன் கூறுகிறதாவது ''எனக்குப் பின் ஒருவர் வருகிறார் **அவர் எனக்கு முன்னிருந்த படியினால்** என்னிலும் மேன்மையுள்ளவரென்று சொன்னேனே அவர் இவர்தான்.

***யோவேல் 2:32***

''அப்பொழுது கர்த்தருடைய **நாமத்தை தொழுது கொள்ளுகிறவன் எவனோ** அவன் இரட்சிக்கப் படுவான்.

***கொரிந்தியர் 1:2***

பரிசுத்தமாக்கப்பட்டவர்களையும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப் பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும் எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற **இயேசுக்கிறிஸ்து வின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும்.**

***சங்கீதம் 45:1,6,7***

என்னுடைய இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது. நான் ராஜாவைக்குறித்துப் பாடின கவியை சொல்லுகிறேன். தேவனே

***எபிரெயர் 1:8***

''தேவனே உம்முடைய சிங்காசனம் என்றைக்குமுள்ளது. உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

உமது சிங்காசனம் என்றென்றைக் குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலா யிருக்கிறது. நீர் துதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர், ஆதலால் தேவனே உம்முடைய தேவனே... ஆனந்த தைலத் தினால் அபிஷேகம் பண்ணினார்.

***சங்கீதம் 102:25-27***

நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங் கள் உம்முடையகரத்தின் கிரியை யாயிருக்கிறது. அவை அழிந்து போம். நீரோ நிலைத்திருப்பீர் அவைகளெல்லாம் வஸ்திரம் போல் பழமையாய்ப்போம். அவைகளை ஒரு சால்வையைப் போல் மாற்றுவீர். அப்பொழுது மாறிப்போகும். நீரோ மாறாதவரா யிருக்கிறீர். உமது ஆண்டுகள் முடிந்துபோவ தில்லை.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கடவுள் பல மனிதருடன்பேசி, ஆவியினால் நிரப்பிஎதிர்காலச் சம்பவங்களை தீர்க்கதரிசனமாக உரைக்க ஏவினார். அந்த தீர்க்க தரிசினங்களில் பல கிறிஸ்துவின் வருகை, அவரின் சிரியைகளைக் குறித்து இருக்கிறது தீர்க்கதரிசிகள் தாங்கள் எழுதுவது என்னவென்று முழுவதும் உணராமலே எழுதி னார்கள். கடவுளே அவர்களின் மூலமாய் பேசினார். ''கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது'' என்று தீர்க்க தரிசனங்கள் துவங்குகின்றதைக் காண்க ஏசாயா 52:4.

நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். ஆதலால்தேவனே உம்முடைய தேவனே ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.

***எபிரெயர் 1:10,12.***

கர்த்தாவே நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர். வானங்கள் உமதுகரத்தின் கிரியையா யிருக்கிறது. அவைகள் அழிந்துபோம் நீரோ நிலைத்திருப்பீர் அவைக ளெல்லாம் வஸ்திரம்போல் பழமை யாய்ப்போம். ஒரு சால்வையைப் போல் அவைகளை சுருட்டுவீர். அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக் கிறீர் உம்முடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை.

***1 பேதுரு 1:10***

உங்களுக்குண்டான கிருபையைக் குறித்து தீர்க்க தரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள் **தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர்** கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடு களையும் அவைகளுக்குப் பின் வரும் மகிமைகளையும் முன்னறி வித்த போது இன்ன காலத்தைக் குறித்தார். என்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென் பதையும் ஆராய்ந்தார்கள்.

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்ட இந்த ஒப்புமையுள்ள பகுதிகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்?

## தொகுப்பு

1. ''வார்த்தை'' யானவரைக்குறித்து மனத்திரையில் ஓடும் காட்சியானது அவர் யெகோவா, தேவன், கர்த்தர் என்று திட்டவட்டமாக அறிவிக்கிறது. கர்த்தர் [பின்னர் வார்த்தையானவர் கிறிஸ்துவாகிறார்] கர்த்தர் [பின்னர் பிதாவாகிறவர்] என்று ஆனபேதிலும், நாம் வாசித்த வார்த்தைகளில் இவர்களிடையே எந்த பேதமும் காணப்படாமல் இருக்கிறது.

2. தீர்க்கதரிசனங்களில் ஆண்டவர் என்று கூறியது பின்னர் வார்த்தையாக நிறைவேறியது [இயேசுக் கிறிஸ்து] அவர் யெகோவாவுடன் ஒன்றித்து குறிப்பிடப்படுகிறது. மகிமையின் ராஜா, பிதாவானவர் - இந்த விளக்கம், வார்த்தையானவர் தெய்வத்தில் தெய்வமானவரும் கடவுளின் இணையானவரும் என்பதாகும்.

3. மேலும் கிறிஸ்துவின் பணி என்னவாக இருக்கும் [அதாவது கடவுளுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தர்] என்றும் முன்னறிவிக்கின்றன. தேவத்துவத்தில் ஒருவராக அவர் மனிதருடன் வாசம் பண்ணினார். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட ''இருக்கிறேன்'' என்று மோசேயுடன் கூறியது கிறிஸ்துவுடன் இணையப்பெறுகிறது. கிறிஸ்துவின் பாடுகளும், இஸ்ரவேலர் வனாந்திரப் பாடுகளும் ஒப்புமையாகின்றன. [1பேது 10,11] வேதத்தின் பல பகுதிகளில் பேசுவது அல்லது கிரியை செய்வது தெய்வத்தின் எந்த அம்சம் என்று நமக்கும் புரியவில்லை, புதிய ஏற்பாட்டிலும் இது விளக்கப்பட வில்லை. கிறிஸ்து உலகில் வந்து மத்தியஸ்தராக செயல்பட்ட காலத்திற்கு முன்னரே மத்தியஸ்தராக இருந்திருக்கிறார். தேவ சிந்தையில் அவர் [வெளி 13:8]ல் கூறப்படுவது போல ''உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியினுடனே இருந்து வந்தார்''.

4. கிறிஸ்து மத்தியஸ்தராக வருகிறார் என்பது கூறப் பட்டதுடன் அவர் தம்மைத்தாமே தாழ்த்திக் கொண்டதும்

இவைகளில் இருப்பதைக் காண்கிறோம். ''ஆகையால் உம்முடைய தேவன்.... உம்மை ஆனந்தத்தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார் ''என்றும் காண்கிறோம்.

5. கர்த்தரின் தூதனானவர் என்பது தேவனால் அனுப்பப் பட்டவர். தம் பணிகளுக்காக அனுப்பப்பட்ட போதும் அவர் ஆண்டவர், தேவன் என்றே அழைக்கப்பட்டார். அவர் தம்மில் உள்ள தேவத்துவத்தின் படியே உரையாடினார். வேறு ஒருவருக்காகப் பேசுவதாகக் கூறப்படவில்லை. [ யாத்திராகமம் 3:4] தேவதூதன் என்று கூறும் பொழுது வேதம் இப்படியாகக் கூறுகிறது. அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி மோசே, மோசே என்று கூப்பிட்டார்.

ஆனால் இயேசு கூறும் பொழுது [யோவான் 5:43] ''நான் என் பிதாவின் நாமத்தினாலே அங்கிருந்தும்'' என்று குறிப்பிடு கிறார். எப்போதும் இயேசு தேவ அதிகாரத்துக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தியே பேசுகிறார்.

எனவே தேவத்துவம் தமது மகிமையாலும் அதிகாரத் தாலும் மனித வாழ்வில் இடைப்பட்டவராகவே சித்தரிக்கப்படுகிறார். குமாரனானவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவராக மட்டுமே விவரிக்கப்படுவதில்லை. ஆனால் ஆண்டவருடன் இணையாக தன்மையிலும், செயலிலும், மகிமையிலும் தெய்வப் பண்போடு இருப்பதைக் காட்டுகிறது.

பழைய ஏற்பாட்டில் காட்டப்படுவதும், புதிய ஏற்பாட்டில் கூறப்படுவதும் வேறுபடுவது ஏன்? தேவனுக்கு இணையாக இருக்கிறதை பழைய ஏற்பாடும், தம்மைக் கீழ்ப்படுத்திக் காட்டும் விவரத்தையும் புதிய ஏற்பாடும் சித்தரிக்கிறதே இது எப்படி? இவர்களின் கிரியைகளில் இந்த வேறுபாடு எப்படி உண்டாயிற்று?

# வெறுமையாக்குதல்

தேவத்துவத்தைப் பற்றிக் கூறும் நூல்களும், பாடல்களும் தேவ வசன விவரங்களின் காலகட்டத்தை முற்றிலும் கவனியாமல், எல்லாவற்றையும் ஒன்றாகக் கொட்டிக் கலந்தது போல் காணப்படுகிறது.

இரட்சிப்பு என்ற தலைப்பைக் குறித்து கவனமற்றவர்களாக நாம் படிக்கத்துவங்குவோமானால் தவறான சில முடிவுகளுக்கு வரவேண்டியதாகிவிடும். எதற்கெடுத்தாலும்''கர்த்தர் சொல்லுகிற தாவது'' என்ற வாசகத்தைப் பிடித்துக்கொள்ளுகிறோம். சரியாகப் பகுத்துக் கொள்ளாவிட்டால் ராஜ்ஜியத்தையும், சபையையும் பற்றிய படிப்புகள் மெய்யாக வேதாகமம் என்னதான் கூறுகிறது என்று பகுத்தறிந்து புரிந்துகொள்ள முடியாமற் போய்விடும்.

அது போலவே, நாம் பகுத்து உய்த்துணர்ந்தாலன்றி தேவத் துவம் பற்றியும் சரியாகப்புரிந்து கொள்ள முடியாமற் போய்விடும். தேவ குமாரனின் பிறப்பு என்பது தேவத்துவத்தின் உறவில் ஒரு பெரிய எல்லை. அதன்றி மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவிலும் கூடத்தான் கீழ்க்கண்ட சில வினாக்களின் அடிப் படையில் முழு வேதாகமத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

***இந்த வசனம் எப்பொழுது எழுதப்பட்டது?***

தேவத்துவத்தைப் பற்றி ''வார்த்தை'' மாம்சமானதற்கு முன்னரா அல்லது பின்னரா? எப்போதும் பேசப்படுகிறது? வேதாகமத்தைச் சரியாகப் பகுத்துக் கொண்டால், குழப்பமாகவும், தெளிவற்றதாகவும், முரண்பாடாகவும் தோன்றும் எல்லா விஷயங் களும் எளிதாகவும் தர்க்கரீதியாக ஒழுங்குள்ளதாகவும் அமைந்து விடும்.

ஆதியில் தேவன் பிதாக்களையும் அவர்களது குடும்பங் களையும் நடத்தினார். அந்த முறையானது சரிவர இயங்காமையால் மோசே மூலமாக தேவன் நியாயப் பிரமாணத்தைக் தந்தார். இஸ்ரவேல் என்ற நாட்டையே நடத்தினார் என்று மக்கள்

கருதுகின்றனர். இஸ்ரவேல் மக்கள் திரும்பத் திரும்ப தேவனை விட்டுத் திரும்பி விக்கிரக ஆராதனைக்கே சென்றமையால் இறுதியில் தேவன் இயேசுக் கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பினார் என்றும் அவர் மூலமாகவே கிறிஸ்தவம் உலகத்திற்கு வந்தது என்றும் கருதுவோர் உண்டு. தற்பொழுதும் கூட தேவனைப் பின்பற்ற வேண்டுமானால் கிறிஸ்து தந்த கட்டளைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.

## மையக் குறிப்பு

மேலே கூறி வந்த விவரங்கள் தேவன் மக்களை நடத்தி வந்த முறைகளில் ஏற்பட்ட தவறுகளைக்களைந்து போட்டு புதிய புதிய முறைகளைக்கைக்கொண்டார் என்பதாக அமைந்துள்ளது. இது தவறான கருத்தாகும்.

தேவனுடைய முந்திய திட்டம் தவறாகப் போனதால், வேறொரு புதிய திட்டத்தைத் தரவில்லை, மாறாக மனிதன் வீழ்ச்சியடைவான், பாவம் செய்வான் என்பதை ஆதிமுதல் அறிந்து, மனிதனை எவ்வாறு இரட்சிப்பது என்பதையும் அறிந்திருந்தார். தேவ செயல்களெல்லாம் ஒரே இலச்சியத்தை அடை வதற்காகவே; அந்த இலச்சியமாவது யாதெனில் விசுவாசிகளின் இரட்சிப்பே அது.

வெளிப்படுத்தின விசேஷம் 13:8ல் ''உலகத் தோற்றம் முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்கட்டி'' என்றும், 2.தீமோத்தேயு 1:9ல். ''தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும் நம்மை இரட்சித்தார்'' என்றும் வாசிக்கிறோம்.

ஆதிமுதல் மனிதனை இரட்சிக்கும் அநாதிகாலத் திட்டத்துக்கு ஒரு நடுநாயகமான காரியம் உண்டு. ''வார்த்தை''யானது இயேசுக்கிறிஸ்துவின் வடிவத்தில் வருவதுவும், தம்மை பாவ நிவாரண பலியாகக் கொடுப்பது என்பதுவும் நடு நாயகமான மையக் காரியமாகும். தேவன் மனிதனுடன் கொண்ட மற்ற எல்லா உறவு களும் இடைப் பட்டவை, அந்தந்த காலத்தின் தேவைக்கேற்ப நிரப்பப்பட்டு கடைசியில் கிறிஸ்துதாமே வந்து, காலத்தின்

பூரணத்தேவையைப் பூர்த்தி செய்தார் என்பது தான் சரியான புரிந்துகொள்ளுதலாகும்.

இந்த முழுமையான தோற்றத்தை மனதில் பதித்துக் கொண்டு முந்திய அத்தியாயத்தில் சொல்லப்பட்ட காரியங்களுக்கும், முடிவான கேள்விக்கும் இப்பொழுது செல்லலாம்.

''வார்த்தையைக் குறித்து பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் வழங்கிய உருவகத்தின் மாறுபாட்டுக்கு என்ன காரணம்? பழைய ஏற்பாட்டில் சமத்துவமான அமைப்பையும், புதிய ஏற்பாட்டில் கீழ்ப்படுத்தப்பட்டிருத்தலும் போன்ற உருவகத்தை காண்கிறோமே அது எப்படி? இப்படி அவரின் மாறுபட்ட செயல்பாடுகள் எப்படி வந்தன?

**இக்கருத்தை வலியுறுத்தும் வசனங்கள் :- பிலிப்பியர் 2:5-8**

★ ***அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் கிறிஸ்துவின் இந்தச் சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது.***

★ ***ஆதிமுதல் தெய்வத்தன்மையே அவரது ரூபமாயிருந்தும்.*** [20ம் நூற்றாண்டு N.T ]

★ ***அவர் ஆதிமுதல் தேவத்தன்மையுள்ளவராக இருந்த போதிலும்*** [N.T in Modern English]

★ ***அவர் எப்போதும் தெய்வ சுபாவம் கொண்டவராகவே இருந்தார்.*** [பிலிப்ஸ் மொழிபெயர்ப்பு]

★ ***முதன் முதலிலிருந்து அவர் தெய்வத்தன்மையுள்ளவர்.*** [Kmox]

★ ***தேவனுக்குச் சமமாக இருப்பதை ஒரு கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்*** [NKJ]

★ ***தேவனுக்குச் சமமாக இருப்பதை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்ளாமல்*** [ASV]

★ ***தேவனுக்கு நிகராக இருப்பதை வலிய தம்முடன் சேர்த்துக் கொள்ளாமல்*** [NT Modern English]

★ *தேவனுக்கு இணையாக இருப்பதை தனக்கென்று தனி உரிமையாகக் கருதாமல்* [பிலிப்ஸ்]

★ *தேவனுக்குச் சமமாக இருப்பது என்பதை எல்லாவற்றிற்கும் மேலாக பற்றிக் கொள்ளப்படவேண்டியது என்று நோக்காமல்* [20ம் நூற்றாண்டு NT]

★ *தம்மைத்தாமே வெறுமையாக்கி* [NKJ]

★ *தம்மைத்தாமே வெறுமையாக்கினார்* [ASV]

★ *சமமாக இருப்பதை ஒருபுறம் வைத்தார்* [Good speed]

★ *மகிமையைக் களைந்து போட்டார்* [Conybears and Howson]

★ *தமக்குச் சேரவேண்டிய நியாயமான மகிமையையும் அகற்றிவைத்தார்.* [Amplified N.T.]

★ *அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்.*

★ *அவர் மனுஷ ரூபமாகக்காணப்பட்டு மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகியும் தம்மைத் தாமே தாழ்த்தினார்* [NDJ]

யோவான் 1:1 ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. கலாத்தியர்4:5 காலம் நிறைவேறினபோது மனித வரலாற்றில் ஆயத்தம் செய்யப்பட்ட காலத்தில் வார்த்தை கடவுளுக்குரியதும் தம்மில் உள்ளடக்கியதுமான உரிமைகளையும் வெறுமையாக்கி மனிதனானார்.

## வெறுமையாக்குதல் ஒரு பகுத்தாய்வு

வெறுமையாக்குதல் என்று கூறும்போது அதில் என்னென்ன காரியங்களெல்லாம் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று பகுத்து ஆய்வு செய்யவேண்டும். அவர் அதாவது தாமே ஜீவிக்கிறவரான ஆவியானவர் என்ற நிலையிலிருந்து இல்லாதவராக இருக்க முடியாது. மனிதனில் ஆத்துமா தோன்றிய பின்னர் என்றும் அழியாமலிருக்கிறதுபோல ஜீவிக்கிறவராக இருக்கும் தெய்வத்

துவம்,அதாவது ''வார்த்தை'' நிச்சயமாக என்றும் இருந்து கொண்டேயிருந்தாக வேண்டும். பண்புக் குணங்கள் மாறியிருக்க முடியாது. அவரது பரிசுத்தம் வெறுமையாக்கப்பட்டிராது. ஏனெனில் அது தேவ பரிசுத்த நிலைக்கு எதிராகிவிடும். அன்பைப் புறந் தள்ளியிருக்க முடியாது. அப்பொழுது அவர் அன்பற்றவராகி விடுவார். நீதியில் வெறுமையாகியிருக்க முடியாது: ஏனெனில் அப்பொழுது அவர் அநீதியுள்ளவராகி விடுவார். இரக்கத்தில் வெறுமையாகியிருக்க முடியாது. அப்பொழுது அவர் இரக்க குணம் இல்லாதவராகிவிடுவார். உண்மையில் வெறுமையாகியிருக்க முடியாது. அப்பொழுது பொய்யராகிவிடுவார். தெய்வத்தை பூரணப் படுத்தும் எந்த இலட்சணங்களின்றும் வெறுமை ஏற்பட்டிருக்க முடியாது. அப்பொழுது தேவத்துவமே மாறிவிடும். அவரில் இவைகள் எல்லாமே மையப்படுத்தப்பட்டு விடுகிறது. அவைகளி லெல்லாம் குறைவுபட்டுவிட்டால் நன்மைகளற்றதாகி விடும்.

அப்படியானால் தம்மைத் தாமே வெறுமையாக்கும் பொழுது எதனை இழந்தார். தமது குண இலட்சணங்களையல்ல; தெய்வத் திற்குரியவைகளான உரிமைகளையும்; அதிகாரங்களையும் தான் இழந்தார். பிழையேதும் ஏற்படாமல் தெய்வத்திற்குச் சமமாக இருத்தலாகிய உரிமையை ஒதுக்கியிருக்கலாம். அதன் விளைவு, தம்மைத்தாமே தாழ்த்துதலும், கீழ்ப்படிதலும் மட்டுமே. மனிதன் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து இருப்பது போலவே, தேவனுக்கு குறைவு நிகழாவண்ணம் அவர் சர்வஞானம், சர்வ சக்தி, சர்வ வியாபியாக இருப்பதில் தாழ்ச்சியுற்றிருக்கலாம். மனிதன் சார்ந்திருப்பது போல சார்பு ஆகும்போது மனிதன் செயல்படுவது போல வார்த்தையானவர் நினைக்கவும் கற்கவும் வளரவும் இயலும்.

## இரண்டாம் ஆதாம்

வார்த்தையானவர் மாம்சத்தில் பிறந்தபோது அவர் மெய்யா கவே இரண்டாம் ஆதாமாக இருந்தார். மாம்சத்தில் மனுஷனாகவும், ஆதாமின் வீழ்ச்சிக் காலம் தொட்டு எந்த மனுஷனும் இருந்திராத பரிசுத்தமுள்ளவராகவுமிருந்தார்.[1 கொரிந்தியர் 15:21,22,45-49] சரீரம் [மாம்சம்] அறிவு, எண்ணம்,சித்தம் ஆகியவை சேர்ந்த

ஆத்துமா என்பவைகளைப் பெற்றவனாக மனிதன் இருக்கிறான். கிறஸ்துவானவர் மாம்ச சரீரத்தை உடையவராக இருந்ததுடன் வெறுமையாக்கப்பட்ட ''வார்த்தை'' யானவர் [அதாவது அறிவு, சிந்தனை,சித்தம் ஆகியவை பெற்ற மனித ஆத்துமாவுக்கு இணையாக] இருந்தார்.

மனிதனுக்குள் தனித்து பிரித்துச் சொல்லப்படும் உள் பரிமாணங்கள் ஏதுமில்லை. அவனுக்குள் இருப்பதெல்லாம் இறைவனிடமிருந்து பெறப்பட்டதே. எனவே, மனிதன் தேவனிடமிருந்து பெறப்பட்ட ஈவுகளையும், இரக்கங்களையுமே சார்ந்து இருக்கிறான். வார்த்தையானவர், நாம் ஆராய்ந்தபடியே தம்முள் இயங்கும் எல்லா சக்திகளையும் புறந்தள்ளிவிட்டு முற்றிலுமாக தேவனைச் சார்ந்த நிலையில் உள்ளார். மனிதனும் இவ்வாறே சார்ந்திருப்பவன்தானே, வெறுமையாகுதல் என்பதன் பொருள் இதுவே. இந்த வரையறுக்கப்பட்ட நிலையை அவர் ஏற்றுக் கொண்டார்.

அவர் < தேவன் 100 சதவீதம்
மனிதன் 100 சதவீதம்

தம்மை வெறுமையாக்கினார் என்பதை மேலோட்டமாகப் பார்த்தோமானால் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாது. சரிவரபுரிந்து கொள்ளாததினால் தான் தேவன் 100 சதவீதம், மனிதன் 100 சதவீதம் என்று தவறான கணக்கை வைத்துக் கொள்கிறோம். அதனால், அவர் ஒரே சரீரத்தில் உள்ள இரண்டு தனித்தனி ஆள்தத்து வம் உடையவர் என்றாகிவிடுகிறது. அவர் மனித சக்திக்கு மேல் பட்ட செயல்களைச் செய்த போது தெய்வத்துவம் செயல்பட்டது என்றும், அவர் சோதிக்கப்படும் போதும், கெத்சமனே தோட்டத் திலும், மரண நேரத்திலும் போராடின போதும் மனிதத்துவம் மேலோங்கி இருந்தது என்றும் புரிந்துகொள்ளவேண்டும். தேவன் போராட்டமும் இல்லை. மரிப்பும் இல்லை என்று புரிந்து கொள்ளவேண்டும்.

**இந்த விளக்கம் போதுமானதுதானா? சரியானதுதானா?**

கிறிஸ்து தேவத்துவத்திலிருந்து மனிதத்துவத்துக்கும், மனிதத் துவத்திலிருந்து தேவத்துவத்திற்கும் தேவைக்கேற்ப மாறிக் கொள் வாரா? அவர் 100 சதவீதம் மனிதன் என்று கூறிவிடமுடியுமா?

மெய்யாகவே அவர் இந்த இரண்டுமில்லை. இரண்டும் சேர்ந்த 200 சதவீத ஆளுமையுடையவருமல்ல. ஒரே ஒரு ஆளுத்துவ மானவர். அவர் வார்த்தையானவராகிய வெறுமை யாக்கப்பட்ட தெய்வத்துவம் வசிக்கும் மனித சரீரம்.

ஆனால் கிறிஸ்து இவ்வுலகிலிருந்தபொழுது அவரில் வல்லமையான கிரியைகள் நடந்தனவே அது எப்படி சாத்தியம்? அவரது சொந்த பலத்தினாலல்ல ; ஏனெனில் அவர்தான் வெறுமையாகிவிட்டாரே. தேவையேற்படும்போது தெய்வீக சக்தியைப் பெற்றுக் கொண்டார் என்று சொல்வோமானால் ''எல்லாவற்றிலும் அவரது சகோதரரைப்போலானவர்'' என்ற வசனம் பொய்யாகிப் போய்விடும்.

பரிசுத்தாவியானவரின் கிரியை அப்படியானால் அவர்செய்த இயற்கைக்கு மேலான கிரிகைகளெல்லாம் எப்படி நடைபெற்றன? யோவான் 3:34ன் படி அளவில்லாது அவரில் வாசம்பண்ணின தேவத்துவத்தில் ஒருவரான பரிசுத்த ஆவியானவராலே இது வெல்லாம் ஆயிற்று. அவரது ஞானஸ்நானத்தின்போது [லூக்கா 3:21,22] பரிசுத்த ஆவியானவர் அவர் மீது இறங்கினார். தெய்வத்துக்கு தெய்வம் எனலாமா? இது வேடிக்கைக்குரிய கருத்தல்லவா? இயேசுக் கிறிஸ்துவில் தேவன் 100 சதவீதம், மனிதன் 100 சதவீதம் என்றால் அவரில் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டிருக்க வேண்டியதில்லையே வார்த்தையானவர் தமக்கே உரிய வல்லமைகளை பயன்படுத்துவது இல்லை என்ற நிலையில் வெறுமை யாக்கினார். மனித குலத்தின் இரட்சகர் என்று சொல்லு மளவிற்கு இந்த உலக வாழக்கையை தெய்வீக வல்லமைகளோடு அவர் எதிர்கொள்ளவில்லை. தேவ குமாரனாகவும் மனிதகுல இரட்சகராகவும் தம்மை நிலை நாட்ட வேண்டுமானால், நிச்சயமாக தெய்வீக வல்லமையை பரிசுத்தாவியானவர் அவருக்கு வழங்

கினார்.''..இயேசு பரிசுத்தாவியினால் நிறைந்தவராய்க் காணப் பட்டார் என்று லூக்கா 4:1ல் வாசிக்கிறோம்''. ''...நான் பரிசுத்தாவி யினால் பிசாசுகளைத்துறத்துகிறபடியால்'' என்று மத்தேயு 12:28லும் பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்கு திரும்பிப் போனார் என்று லூக்கா 4:14லும் வாசிக்கிறோம்.

ஏசாயா 61:1ல் கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை இயேசுவானவர் நாசரேத்தூர் தேவாலயத்தில் வாசிக்கும் போது ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்'' என்று லூக்கா 4:18ல் காண்கிறோம்.

இப்பொழுது வார்த்தையானவர் தம்மை வெறுமையாக்கியது, பரிசுத்தாவியானவரால் நிரப்பப்படுவதற்காகவே என்பது தெளிவாக தெரிகிறது. அப்படியானால் வாழ்க்கைப் பிரச்சனைகளை மனிதர்கள் எதிர்கொள்வதுபோல இவரும் எதிர்கொள்ள நேரிடுகிறதோ? அதற்கு மாறாக ஆவியானவர் [இங்கே நாம் கூர்மையாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு: பிதாவும் ஆவியானவரும் தனித் தனியாகப் பிரித்துக் கூறமுடியாதவர்கள்] தேவத்துவத்தில் ஆவியான வரில்லாமல் அவர் தனியாக கிரியைகளை நடப்பிக்கிறார் என்று சொல்லமுடியாது. அவரது போதனைகளையும், அற்புதங்களையும் தனித்து செய்திடவில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் அவரது அன்றாட வாழ்க்கையில் மனிதனுடைய நண்பனாகவும், மனிதகுல இரட்சகராகவுமே வெறுமையாக்கப்பட்டவராய் வாழ்ந்தார். அவர் சோதனைகளை எதிர்கொண்டபோதும், வாழ்க்கைப் பிரச்சனை களோடு போராடினபோதும் அவருக்கு எவ்வித தெய்வீக விடுதலை யும் இல்லை. மத்தேயு 4:4ல் கூறப்பட்டிருக்கிறபடி இப்பேர்ப்பட்ட சூழ்நிலைகளில் அவர் ''இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது'' என்றும் தேவனுடன் ஐக்கியம் கொண்டும் சந்தித்தார். [லூக்கா 6:12] அவரது வாழ்வில் போராட்டங்கள் இருந்தபோது இரண்டுமுறை தேவ தூதர்கள் வந்து அவரை பலப்படுத்தினர் என்று வாசிக்கிறோம். [மத்4:11] தேவதூதர்கள் தேவத்துவத்தை பலப்படுத்துவது என்பது ஒத்துக்கொள்ளக் கூடியதா? அவர் தேவத்துவத்தை வெறுமை

யாக்கிய நிலையில்தான் இது நடந்தது. தேவதூதர்கள் வெறுமை யாக்கப்பட்ட வார்த்தையானவரை- மனித குலத்தின் நண்பருமான வரைத் தான் திடப்படுத்தினார்கள் [எபி 1:13]

## தேவத்துவத்திலிருந்து தம்மை அவர் வெறுமையாக்கினாரா?

முன்னர் கூறப்பட்ட விவரங்கள் இயேசு, தமது தேவத்து வத்தையும் வெறுமையாக்கினார் என்று கற்பிக்கின்றதா? சிலர் அவரை தேவகுமாரன் என்று கூறுவார்கள். ஆனால் அவர் நித்திய நித்திய காலமாக உள்ள தேவன் என்று கூறத்தயங்குவார்கள்.

**இது குறித்து வேதம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.**

கிறிஸ்து, தேவன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டார். நாம் முன்னர் கூறியபடி இயேசு தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது [யோவான்8:58] ''இருக்கிறவராக இருக்கிறேன்'' என்று எரியும் முட்செடியிலிருந்து மோசேயிடம் கூறினார். மனுஷ ரூபம் எடுத்த போதிலும், அவர் நித்திய நித்தியமானவர் என்பது மாறாத சத்தியம். மீண்டும் இதே கருத்தை வலியுறுத்தி யோவான் 10:30 ஆம் வசனம் கூறுகிறது. ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்றும், அப்போஸ்தலர் 20:28ல் ''தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை'' என்று கூறுகிறது. இவ்வசனங்கள் கிறிஸ்து ''தேவனே'' என்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது.

## கிறிஸ்து தேவனாக ஆராதிக்கப்பட்டார்

எல்லா காலத்திலேயும் தேவன் தம்மைத்தவிர வேறே தேவர் களை வணங்கக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறார். ''உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னை யன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும்

உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என் பகைவர்களைக் குறித்து பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலை முறை மட்டும் விசாரிக்கிறவராக இருக்கிறேன் என்று [உபாகமம்5:6-9,4:15-39]வசனங்களில் காண்கிறோம். அதேபோல வெளிப்படுத்தின விசேஷம் 19:9,10 ஆகிய வசனங்களை வாசிக்கும்போது பரலோகத்தின் ஊழியக்காரனை ''வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி இப்படிச் செய்யாதபடிக்குப்பார். உன்னோடும், இயேசுவைக் குறித்து சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன், தேவனைத் தொழுதுகொள்'' என்று அறிகிறோம். படைக்கப்பட்ட தேவதூதனோ, ஆவியோ ஆராதிக்கப்பட்டதாக எந்த ஒரு சான்றும் இல்லை. அங்கீகாரத்துடன் ஆராதிக்கப்பட்டவர் தேவன் ஒருவரே என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. [தேவன்- ஏலோகிம், பன்மையில் கூறப்பட்ட தேவத்துவம். இயேசுவானவர் தான் ஆராதிக்கப்பட்ட இசைந்தது என்பது அவர் மாம்சத்தில் இருந்த போதிலும் ஆராதிக்க உரியவர் என்பதற்கு ஒரு சாட்சி போலாகிறது]

கலிலேயாக் கடலில் ஏற்பட்ட புயலை அமர்த்திய பின்னர் மத்தேயு 14:33ம் வசனத்தின்படி படகில் உள்ளவர்கள் வந்து அவரை பணிந்து கொண்டார்கள், என்று வாசிக்கிறோம்.

யோவான் 9:35-38ல் மக்கள் மத்தியில் செய்யப்பட்ட பணிகளைப்பற்றி ஒரு சுவையான சம்பவம் கூறப்பட்டுள்ளது. ஒன்பதாம் அதிகாரத்தின் முன்பகுதியில் அவர் ஒரு பிறவிக்குருடனுக்கு பார்வை அளித்ததுபற்றிக் கூறப்பட்டுள்ளது. யூதமதத்தலைவர்கள் இந்த அற்புதத்தைக் குறித்து கேள்விப் பட்டு, சுகமாக்கப்பட்டவனையும், அவனது பெற்றோரையும் அழைத்து அவன் சுகமானது மெய்தானா? யார் அவனுக்குச் சுகம் கொடுத்தது என்று கேட்கிறார்கள். அதற்கு அவனது பெற்றோர்கள் கீழ்க்காணும் பதிலைச் சொல்லுகிறார்கள்.

‘‘தாய் தகப்பன்மார் பிரதியுத்தரமாக இவன் எங்கள் குமாரன் தான் என்றும் குருடனாகவே பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும். இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது. இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது. இவன் வயதுள்ளவனாக இருக்கிறான், இவனைக் கேளுங்கள்;இவனே சொல்லுவான் என்றார்கள். அவனுடைய தாய் தந்தைமார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் குறித்து எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்பது யூதர்கள் அதற்கு முன்பே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். அந்த காலங்களில் ஜெப ஆலயத்தை விட்டுப் புறம்பாக்கப்படுதல் என்பது கடவுளிலிருந்து பிரிக்கப்படுவதற்குச் சமம். ஏனெனில் ஆராதனை என்பது அந்த ஆசாரியர்கள் மூலமாகத்தான் ஆலயத்தில் நடைபெற்றது.

பின்னர் யூதமதத்தலைவர்கள் அந்தச் சுகமாக்கப்பட்டவனையே தனியாக விசாரித்தார்கள். அவனை வற்புறுத்தி சுகம் தந்தவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை மறுக்கும்படி கூறினார்கள். அதற்குப் பார்வையடைந்தவன் பதில் கூறியதாவது:- ‘‘அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்ய மாட்டாரே’’ என்றான். அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக : ‘‘முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ’’ என்று சொல்லி அவனைப் புறம்பேதள்ளி விட்டார்கள். [அதாவது சபையிலிருந்து நீக்கிவிட்டார்கள்].

அந்த மனிதன் தன்னைக் தேவன் தான் என்று கூறியதால் தான் அவன் இறைவனைத் தொழமுடியாதபடி அவனை சபையை விட்டு நீக்கிவிட்டனர் என்பதை இயேசு அறிந்திருந்தார். அவனது நிலை குறித்துப் பரிவு கொண்டு, இயேசு அவனைக்கண்டு தாம் தேவனுடைய குமாரன்தான் என்று கூறினார். அந்த மனிதன் ‘‘ஆண்டவரே விசுவாசிக்கிறேன்’’ என்று அவரைத் தொழுது கொண்டான். [யோ 9:38]

இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் தமது சீஷர்களுக் குத்தரிசனமாகி தமது கரங்களையும், விலாவின் காயங்களையும் காண்பித்தபோது தோமா அவரைப் பார்த்து ''என் ஆண்டவரே என் தேவனே'' என்று கூறினான்.

வெளிப்படுத்தின விசேஷம் 5ம் அதிகாரத்தில் இயேசு ஆட்டுக் குட்டியானவராகக்காணப்படுகிறார். மூப்பர்களும், பரலோக சேனையெல்லாம் அவர்முன் விழுந்து வணங்கினார்கள். புதிய பாட்டைப் பாடினார்கள் என்று வாசிக்கிறோம். [வெளி 5:12] கனத் தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள ஆட்டுக் குட்டியானவர் பாத்திரவான் என்று சொன்னார்கள்.

## கிறிஸ்து தாமே தேவன் மன்னிப்பை அருள்வது போல மன்னித்தார்.

இயேசு, தேவன் தான் என்பதற்கு வேறு ஒரு ஆதாரமாக அவர் பாவங்களை மன்னித்ததை எடுத்துக் கொள்ளலாம். ஒருவன் எனக்கு தீங்கு செய்தால் நான் நினைத்தால் அவனை மன்னிக்கலாம். ஆனால் பாவம் என்பது தேவனுக்கு விரோதமாகச் செய்யப்படுவது. எனவே தேவன் மட்டுமே அந்தப் பாவத்தை மன்னிக்கும் உரிமையையும், அதிகாரத்தையும் பெற்றவராகிறார்.

யூதர்கள் இதை அறிந்திருந்தார்கள். மத்தேயு 9:2ல், இயேசு, படுக்கையில் கிடந்த திமிர்வாதக்காரனை நோக்கி ''மகனே திடன்கொள். உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன என்றார்''. வேதபாரகரில் சிலர்'' இவன் தேவதூஷணம் சொல்லு கிறான்'' என்றார்கள்.

இயேசு, அவர்களின் நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன? உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நட என்று சொல்வதோ எது எளிது?

பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரகுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று

சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி ''நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போ என்றார். உடனே அவன் எழுந்து தன் வீட்டுக்குப் போனான் [மத் 9:4-7].

மீண்டும் லூக்கா 7:48,49 வசனங்களில் இயேசு, கண்ணீரினால் தன் பாதத்தை நனைத்த பெண்ணைப் பார்த்து ''உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'' என்றார். அப்பொழுது கூடப்பந்தியிருந்தவர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன்யார் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

எனவே, எப்படி மனிதன் மனிதனாகவே இருக்கிறானோ அப்படியே தெய்வமும் தெய்வமாகவே இருக்கிறார். வார்த்தையானவர் மாம்சத்தில் மனிதனாக வந்தாலும் அவர் தேவனே!

அப்படியானால் வேதாகமத்தில் அந்த வார்த்தை மாம்சமாகி மனிதர்களுக்குள் வாசமிருந்தார். தம்மை வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார் என்று கூறுவதன் பொருள் என்ன? [பிலிப்பியர் 2:7]

இவ்வாறு அவர் மாம்சத்தில் வந்ததினால் தேவ நிலையில் மாறுதலாக என்ன நிகழ்கிறது? இந்த மாறுதல் என்பது ஒரு மனிதன் தன்மேலாடைகளை களைந்து போடுவது போல் போட்டு விட்டு, உள்ளே என்றென்றும் நிலைத்திருப்பவரானவராகவே இருப்பதா? கிறிஸ்து தேவகுமாரனாக இருப்பதால் தேவனாக ஆராதிக்கப்பட வேண்டுமே. அப்படியானால் ''எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது'' என்று எபிரெயர் 2:17ல் கூறப்பட்டிருக்கிறதே, அது எப்படியாகும்?

# மனிதர்களின் சகோதரன்

சென்ற அதிகாரத்தில், வேதத்தைச் சரியாகப் பகுத்த ஆய்வு செய்யப்படாத காரணத்தால், தேவனைப்பற்றி சரிவரப் புரிந்து கொள்ள முடிவதில்லை என்ற கருத்து வலியுறுத்திக் கூறப்பட்டது. இயேசுக் கிறிஸ்துவின் மனிதத்துவத்தைக் குறித்து சரிவரப்புரிந்து கொள்வதற்கு மேலுமொரு முக்கியமான காரியத்தையும் அறிதல் வேண்டும்.

''எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது'' [எபிரெயர் 2:17] இது ஏதோ நல்லது பிரதிபலிக்கும் படியாகச் சொல்லப்பட்ட வெறும் வார்த்தையல்ல. தேவன் என்ன சொல்லுகிறாரோ அவரது சொல்லும் பொருளும் செயலும் ஒன்றுதான். இந்தக்காரியத்தை மனதிற்கொள்ளுவோமானால் கிறிஸ்துவைப் பற்றி அறிய முற்படும்போது பல காரியங்கள் தெளிவாகிவிடும்.

அதிகாரமும் பராக்கிரமமுள்ள ஒரு அரசனால் ஆளப்படும் ஒரு நாடு இருப்பதாகக்கற்பனை செய்துகொள்வோம். அந்த நாட்டில் ஒரு கொள்ளை நோய் பரவி ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டு போகிறார்கள். தனது மக்கள் மீது கொண்ட அன்பினாலும், பரிவினாலும் தனது ராஜா கிரீடத்தையும், ராஜா வஸ்திரங்களையும் களைந்து விட்டு தமது மக்களைப் போலவே சாதாரண எளிய உடையணிந்து நோயுற்ற தம் மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அரண்மனையை விட்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம் பாவத்தில் மூழ்கிக் கிடந்த உலகத்திற்கு உதவிடத்தான் இத்தகைய செயலைத் தான் தேவன் செய்தார்.

''ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனுடனிருந்தது; அந்தவார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்''. [யோவான் 1:1,14]

எபிரெயர் 10:5ல் கூறுகிறபடி உலகத்தில் பிரவேசிக்கும்போது ''ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் என்றும், எபிரெயர் 2:14,17ன் படி'' ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும், அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். ஆதலால் அவர் தேவதூதர்களுக்குக் கொடாமல், ஆபிரகாமின் சந்ததியாருக்கு உதவியாகக் கைகொடுத்தார்.

[சில தேவதூதர்கள் தேவனுக்கு விரோதமாகக்கலகம் பண்ணினதினால், மனிதகுலத்திற்கு இரட்சிப்புக்கொடுப்பதற்காக தேவதூதர் சாயலை எடுத்துக் கொள்ளவில்லை.]

அதனால் மனிதருக்குக் கை கொடுக்கும்படி எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பானார்.

நமது கற்பனைக்கதையில் கூறப்பட்டது போல் சாதாரண மனிதரைப் போலானாலும், தான் ராஜா என்ற நிலையை இழந்துவிடாதது போல் ''வார்த்தை'' யானவரும் தேவ அம்சமாகவே இருக்கிறார். ராஜாதன்னுள் உள்ள ராஜ அதிகாரங்களையும், வல்லமைகளையும் விலக்கிக்கொண்டதுபோல, வார்த்தையானவரும் தம்மைத் தாமே வெறுமையாக்கி எளிமையான மனிதனானார்.

## குமாரனாகுதல்

சங்கீதம் 89:24-29 வசனங்களில் பிதா குமாரன் உறவைப் பற்றி தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. அதே கருத்து எபிரெயர் புத்தகத்திலும் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது.

''நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உன்னை ஜெநிப்பித்தேன். நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன்; அவர் எனக்குக் குமாரனாயிருப்பார்''. [எபிரெயர் 1:5]

மேலே சொல்லப்பட்ட கருத்துக்கள் கிறிஸ்து தேவகுமாரனாக ஆன ஒரு குறிப்பிட்ட கால எல்லையை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. '' நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக்

குமாரனாயிருப்பார்'' என்ற தீர்க்க தரிசனம் உரைக்கப்படும்போது ''வார்த்தை''யானவர் ''குமாரன்'' என்று கூறும் நிலையை எய்தவில்லை. அந்நேரத்தில் ''வார்த்தை''யானவர் மனித ரூபமாக வெளிப்பட தம்மை வெறுமையாக்கிவிட வில்லை. அப்போதும் தேவத்துவத்தில் சமத்துவமுள்ளவராகவே இருந்தார். ''காலம்'' நிறைவேறின போது கடவுளால் ஜெநிப்பிக்கப்படுவார், ''வார்த்தை'' யானவர் தமக்குக் குமாரனாவார் என்றும் கூறுகிறார். மனிதகுமாரன் என்று கூறாமல் தமக்குக் குமாரன் என்று கூறினார். ஆனால் இயேசுக் கிறிஸ்துவோ தம்மைத் தாமே ''மனித குமாரன்'' என்றும் ''தேவகுமாரன்'' என்றும் வேறுபடுத்திக் காட்டுவதைக் காணலாம். ஆனால் இரண்டு சொற்களும் ஒருவரையே [கிறிஸ்து] குறிக் கின்றன.

## தேவ வாக்கு எப்போது நிறை வேறினது?

காபிரியேல் தூதன் தேவனால் ஒரு கன்னிகையான மரியாள் என்னும் ஸ்திரீயினிடம் அனுப்பப்படுகிறான். அவன் மரியாளைப் பார்த்து. ''மரியாளே நீ பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவரா யிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்.'' [லூக்கா 1:26-32]

அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி இது எப்படி ஆகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக ''பரிசுத்த ஆவி உன்மேல் வரும். உன்னதமான வரின் பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் [லூக்கா 1:32].

இந்தப் பகுதியில் இரண்டு முக்கிய காரியங்களை நாம் கண்டுணர வேண்டும். முதலாவதாக எபிரெயர் 1:5ம் வசனத்துடன் ஒன்றுபட்டு, மனிதகுமாரன் எதிர்காலத்தில் வருவார் என்று

குறிப்பிடுவது, ''பரிசுத்தமானவர் குமாரன்'' அல்லது பரிசுத்த மானவர் எப்போதும் குமாரனாகவே இருக்கிறார்'' என்று கூறாமல் ''பரிசுத்தமானவரின் குமாரன் என்னப்படுவார்'' என்று கூறுகிறது.

இரண்டாவது, பரிசுத்தாவியானவரால் இயேசு மரியாளின் வயிற்றில் கருவாகிறார்.... [லூக்கா 1:35] என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது.

மத்தேயு 1:18-20 வசனங்கள் இதனை மேலும் விளக்குகிறது. ''பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்'' என்றும், ''அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்தாவியினால் உண்டானது'' என்றும் காண்கிறோம்.

## பரிசுத்தாவியின் தூதன்

பரிசுத்தாவியானவரின் குமாரன் என்றழைக்கப்படாமல், ''தேவனுடைய குமாரன்'' என்று அழைக்கப்படுவது ஏன்? இந்த வார்த்தைகளைக் காணும் போது இது ஏதோ குழப்பம் போல் தோன்றுகிறத. ஆனால் இதில் குழப்பத்திற்கு ஏதுமில்லை. தேவன் முதலாவதாக தேவத்துவத்தின் ஒருமையை திரும்பவும் வற்புறுத்துகிறார். இரண்டாவது பரிசுத்தாவியானவரின் பண்பு வாழ்க்கைக்கு உயிரூட்டுவதாகவே உள்ளது. மேலும், தொடர்ந்து பார்க்கும் போது தேவனின் இரட்சிப்புத்திட்டம் கிறிஸ்துவின் வருகைக்குப் பின் வெளியாகும்போது பரிசுத்தாவியானவரின் செயல் பாடுகளினால் மனிதர்களும், தேவ பிள்ளைகளே என்றாக முடியும் என்பதைக் காணலாம்.

''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன், நீங்கள் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது'' என்றார் [யோவான் 3:5].

''மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும், எவர்கள்

தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். [ரோமர் 8:13,14]

இப்போது நாம் மீண்டும் நமது பொருளுக்கே வருவோம். சங்கீதம் 89:24-29 வசனங்களில் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் எப்போது நிறைவேறியது? ''வார்த்தை'' யானவர் தேவ குமாரனானார். அதே சமயம் அவர் மனித குமாரனுமானார். அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி தேவனுக்குக்கீழ்ப் படிந்தவராகி உலகில் பிறந்து மனித ரூபமாக வந்த போது இப்படியாயிற்று.''மேலும் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்த போது தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக் கடவர் என்றார்''. [எபிரெயர் 1:6]

இது லூக்கா 2:7-14 வசனங்களுக்கு ஒத்ததாக இருக்கிறது. அதாவது: ''அவள் தன் முதற்பேறான குமாரனை பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் ரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த க்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்''.

# முதற் பேறானவர்

இயேசுக் கிறிஸ்து முதற் பேறானவர் என்று எபிரெயர் 1:6ல் வாசிக்கிறோம். மனிதக் குடும்பத்தில், பெற்றோருக்கு முதலில் பிறக்கும் குழந்தையை சிலாக்கியமாகக் கருதி முதற் பேறானது என்று அழைப்பார்கள்; மற்ற சகோதர சகோதரிகள் பின்னர் பிறக்கலாம். முதலில் பிறந்ததின் அடிப்படையில் முதற்பேறான குமாரன் என்று சிறப்பு ஏற்படுகிறது.

தேவனுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் எல்லாக் காலத்திலும் வாழ்ந்த நீதிமான்கள் அடங்கிய தெய்வக் குடும்பத்தில் இயேசுக் கிறிஸ்து முதற்பேறானவர். இதை முன்வைத்துப் பார்த்தால், ஆபிராகாம் தேவனின் பிள்ளை அல்லது தாவீது தேவனின் பிள்ளை என்று அழைக்கப்படலாம். ஏனெனில் இயேசு முதற்பேறானவராக வருகைதந்து எல்லாக் காலத்திலும் காணப்பட்ட நீதிமான்களுக்கு தேவனின் புத்திரர் என்று அழைக்கப்பட வழி பிறந்திருக்கிறது.

நாம் கூறிய கருத்து சரியானதுதான் என்று எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்? அதற்கான சுலபமானவழி என்னவென்றால் இயேசுவுக்கு முன் பிறந்த யார் யார் தன் சொந்த நீதியின் அடிப்படையில் தேவனை அணுகமுடியும்; பாவமில்லாத மனிதன் எங்கே? எவருமில்லை. கிறிஸ்து தேவனின் குமாரனாக ஆகியிராவிட்டால் மற்ற மனிதர் எவருக்கும் தேவனின் புத்திரர்கள் என்றாகும் பாக்யம் இல்லாது போய்விடும்.

இது போன்ற கருத்தையே எபிரெயர் 9:15 ஆம் வசனத்திலும் காணமுடிகிறது. கிறிஸ்து மரித்ததின் மூலமாக தற்காலத்தில் வாழும் நமது பாவ விமோசனமும், முற்காலத்தில் வாழ்ந்தவர்களின் பாவ விமோசனமும், மீறுதலுக்கான மீட்பும் முதலாம் உடன் படிக்கையின் மூலம் ஏற்படுகிறது.

கிறிஸ்து, எவ்விதமாக தேவ குமாரன் என்றும் மனிதர்களின் சகோதரனென்றும் - நண்பனென்றும் ஆகிறாரோ அவ்விதமாகவே, மனிதகுலம் தேவனுடைய புத்திரர்களாக கிறிஸ்து இயேசுவின் மூலமாக ஆகின்றது.

**ரோமர் 8:29ல் வாசிக்கும்போது இவ்வாறு காணலாம் :-**

''தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற் பேறானவராயிருக்கும் பொருட்டு தேவன் எவர்களை முன் குறித்தாரோ, அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப் பதற்கு முன் குறித்திருக்கிறார்.

கலாத்தியர் 4:4-7 வசனங்கள்: ''மேலும் நீங்கள் புத்திர ராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்... நீ புத்திரனேயானால் கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய சுதந்தரராயுமிருக்கிறாய்''.

கொலோசெயர் 1:15-18ல் கூறப்பட்டிருக்கிறபடி ''அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர், ஏனென்றால், அவருக்குள் சகலமும் கிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்தில் உள்ளவைகளும், பூலோகத்தில் உள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப் படாதவைகளுமான சகல வஸ்துக்களும் சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும் சகலமும் அவரைக் கொண்டு அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது''.

முதற்பேறானவர் என்பது முதன்மை நிலையானவர் என்று கூறுவதைப் பார்க்கிலும், கூடுதலான அர்த்தமுடையது. முதற் பேறான இயேசு அதரிசனமாக தேவனுடைய தற்சுரூபம். [கொலோசெயர் 1:15] சர்வத்துக்கும் சுதந்திரவாளியுமானார். [எபிரெயர் 1:2, கலாத்தியர் 4:7] இந்த வசனங்களின் மூலமாக சிலஉண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

★ வார்த்தையானவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷ சாயலானார்.

★ முதற்பேறானவராக ஆனதோடு

★ மனித குலமும் தேவகுமாரர்களாகும்படிக்கு வாசலைத் திறந்தார்.

★ பிதாவுக்குக் கீழ்ப்படிந்தவருமானார்.

# இயேசுக்கிறிஸ்துவின் மனிதத்துவம்

இந்தப்பாடத்தில், கிறிஸ்துவின் மனிதப்பண்புகளைப் பற்றியும் அவரது பலத்தைப் பற்றியும் வசனங்களின் மூலமாகக் காணப்போகிறோம். அதேபோல், கிறிஸ்து உலகில் வந்தபோது அவருக்குத் தேவையான காரியங்களையும் வழங்கினார் என்பதையும் விளக்கும் பாடங்களையும் படிக்கப் போகிறோம்.

## அவர் வளர்ச்சியடைந்தார்

அவர் எல்லாவற்றிலேயும் தமது சகோதரர்களைப்போல ஆகி, மற்ற மனிதர்களைப் போலவே வளர்ந்தார். தீர்க்க தரிசனமாக அவரை பற்றி சங்கீதம் 22 : 9-11ல் காணப்படும் வசனங்களை வாசிப்போம்.

''நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர். என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாக இருக்கப் பண்ணினீர். கர்ப்பத்திலிருந்து வெளிப் பட்ட போதே உமது மார்பில் விழுந்தேன். நான் என் தாயிக் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.

''இயேசுவானவர்'' ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந் தார்'' [லூக்கா 2:52]

''அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப் படிதலைக் கற்றுக் கொண்டார்'' [எபிரெயர் 5:8].

இந்த வார்த்தைகளனைத்தும் மெய்யானவைகளே. ஏனெனில் தெய்வத்தில் அடங்கியுள்ள தமக்குரிய வல்லமையை விலக்கி வைத்து விட்டு, தம்மைத்தாமே வரையரைக்குட்படுத்தி தேவனைச் சார்ந்த மனிதனானார்.

## அவர் சோதனைகளுக்கு உட்பட்டார்.

தம்மை வெறுமையாக்கினதின் விளைவாக அவர் வாழ்க்கையில் சோதனைகளைச் சந்தித்தார். ஆனால் ''தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல''. [யாக்கோபு 1:13]

அவர் சோதனைகளைச் சந்தித்தார், ஆனால், சோதனைக்கு ஆளாக்கப்படவில்லை. ஏனெனில் அவர் மாம்சத்தில் வந்த தேவனல்லவா என்று கூறுவர். ஆனால், எபிரெயர் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் நாம் எவ்விதமாய் சோதிக்கப்படுகிறோமோ அந்த விதமாகவே சோதனைகளுக்குட்பட்டார். ஆனால், அவற்றை மேற்கொண்டார் என்று கூறுகின்றார். அவர் சோதிக்கப்பட்டார் என்பது அனுபவப்பூர்வமாக இல்லையென்றால், நம்முடைய பல வீனங்களுக்காக பரிதபிக்க முடியாதவராகி விடுவார் அல்லவா? மேலும், ''அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்'', என்று தெளிவாக்குவதை எபிரெயர் 2:18ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

அப்படியானால் இயேசுக்கிறிஸ்து எப்படி இவ்வுலகத்தில் வாழ்ந்து சோதனைகளை எதிர்த்து நின்று பாவமில்லாதவரானார்? இந்த விஷயத்தைப்பற்றி ஒரு நிமிடம் யோசித்துப் பார்ப்போம். பாவம் நிறைந்திருந்த ஒரு மனிதன் கர்த்தரின் மந்தைக்குள்ளாக புதிதாக வரும்போது, முன்பு அவன் வாழ்ந்த பாவ வாழ்க்கையில் எவற்றில் எல்லாம் வீழ்ந்து போயிருந்தானோ அவற்றிலெல்லாம் பாவம் அவனை மீண்டும் இழுக்கப்பார்க்கும்; ஆனால், அவன் தேவ குடும்பத்தில் வளர வளர சோதனைகள் அவன்மேல் அதிக வல்லமையுடன் தாக்கி விடாது. வளர்ச்சியடைந்த நிலையில் உள்ள கிறிஸ்தவன் மாம்ச இச்சை, கொலைபாதகம், திருடுதல், மதுபானம் அருந்துதல் போன்ற கொடிய பாவங்களுக்கு ஆளாகமாட்டான். ஏனெனில் அப்பாவங்கள் வளர்ச்சிபெற்ற கிறிஸ்தவனின் சுபாவத்துக்கு நேர் எதிரானவைகள். பரிபூரணமான பரிசுத்த நிலைமைக்கு வரும்போது சோதனைகளின் வல்லமை பலவீனப்பட்டுப் போகும்.

கிறிஸ்து மனிதனாக வாழ்ந்தார், மனிதர்களுக்குள்ள உணர்வுகளும், சிந்தனையோட்டங்களும் இருந்ததின் விளைவாக, அதற்கேற்பவே முடிவுகளையும் எடுத்தார். இவ்விதமாக சோதனை அவருக்குள்ளாக ஊடுருவிச் சென்றபோது அவ்வுணர்வுகளுக்கு எவ்விதத்திலும் இடங்கிடைக்காத நிலையாயிற்று. இரண்டாம் ஆதாம் என்ற நிலையில் அவரிடம் பரிபூரண பரிசுத்தம் இருந்தது. ஆதி ஆதாம் படைக்கப்பட்ட போது, எப்படி அவன் பாவமறியாத நிலையிலிருந்தானோ அதே நிலைக்கு அவர் நம்மை மாற்றுகிறவராக இருக்கிறார்.

## வருங்காலச் சம்பவங்களை முன்னறிந்தவராக இருந்தார்

மற்றும் ஒருகேள்வி, அவர் வருங்காலச் சம்பவங்களை முன்னறிந்தவராக இருந்தாரே அது எப்படி சாத்தியமாயிற்று என்பதாகும். கிறிஸ்து, தம்மைச் சூழநின்றவர்களின் எண்ணங்களை அறிந்தவராயிருந்தார் என்கின்ற சங்கதிகளை சுவிசேஷங்களில் பல இடங்களில் நாம் வாசிக்கிறோம். அவரது ஊழியக்காலத்தில் பலகாரியங்களில் இயற்கைக்கு மீறிய சக்தி வேண்டியதாயிருந்தது. தம்மைக் காண்கிறவர்களுக்கு தாம் யார் என்பதை வெளிப்படுத்திக் காட்டவேண்டியதாயுமிருந்தது.

''தம்மைக் காட்டிக் கொடுக்கப்போகிறவன் இன்னான் என்று ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தார்'' [யோவான் 6:64]

''அப்படியிருந்தும் இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை, மனுஷருள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை''. [யோவான் 2:24,25]

நாத்தான்வேல் அவரிடத்தில் ''நீர் எப்படி என்னை அறிவீர் என்று கேட்ட பொழுது, பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்'' என்றார். [யோவான் 1:48]

''அவர்களுடைய சிந்தனைகளை அறிந்திருந்தார்'' என்று லூக்கா 6:8, 19:1-10, மாற்கு 9:33-37 ஆகிய பகுதிகளில் நாம் பார்க்க முடியும்.

## அவர் செய்திகளைக் கேட்டறிந்து கொண்டார்.

சில வேளைகளில் அவர் செய்திகளைக் கேட்டறிந்தார். தமக்குக் கூறப்பட்ட செய்திகளுக்கேற்ப செயல்பட்டார்.

''இயேசு அதைக்கேட்டு அவ்விடம் விட்டு படகில் ஏறி வனாந்தரமான ஓர் இடத்துக்கு தனியே போனார்''. [மத் 14:13]

''அதற்கு இயேசு உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று போய்ப் பாருங்கள் என்றார். அவர்கள் பார்த்து வந்து ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு என்றார்கள்''. [மாற்கு 6:38,39]

''அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார்''. [மாற்கு 11:13]

''பின்பு அவர் தமது சீஷரோடு கூடத்தனித்து ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில் அவர்களை நோக்கி ஜனங்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள் என்று கேட்டார்''. [லூக்கா 9:18]

## லாசரு நோய் வாய்ப்பட்டபோது

''அப்பொழுது அவனுடைய சகோதரிகள் ஆண்டவரே நீர் சிநேக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல அவரிடத்திற்கு அனுப்பினார்கள்'' [யோவான் 11:3,4]

''அவர் பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்தபோது அவனை எங்கே வைத்தீர்கள் என்றார், ஆண்டவரே வந்து பாரும் என்றார்கள்'' [யோவான் 11:34]

''அவர் மீண்டும் உலகத்திற்கு இரண்டாம் முறை வரப் போவதைப் பற்றிச் சொல்லும் போது ''அந்த நாளையும், அந்த

நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றெவனும் அறியான்'' என்றார்.

இயேசு, செய்திகளைக்கேட்டறிந்தார் என்று சொல்லும் போது அது தமக்காகவல்ல, தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர் களுக்காக என்றுதான் கூறவேண்டும். அதே நேரத்தில் அவரது இரண்டாம் வருகையின் காலத்தைக் குறித்து ஒன்றுமறியாதவ ராகவே இருந்தார்.

இயேசுக்கிறிஸ்து அறிவிலும் ஞானத்திலும் வளர்ந்தார், கீழ்ப்படிந்தார் என்று சொல்லப்படும் காரியங்களைப்பற்றி சிந்திக்கும்போது எப்பொழுதெல்லாம் பிறர் எண்ணங்களை அறிய வேண்டியிருந்ததோ அப்பொழுதெல்லாம் பரிசுத்தாவியானவர் அவரைப் பலப்படுத்தினார். அசாதாரணமான அறிதல் எங்கு தேவையில்லையோ அங்கு பிறமக்களிடம் கேட்டறிந்தார் என்று கண்டுகொள்ளலாம். இக்கருத்து அவர் உலகத்தில் மனுஷனாக இருந்தார் என்ற கருத்துக்கு ஒத்துப்போகிறது.

## சரீரப் பிரகாரமாகவும் உணர்வுப்பூர்வமாகவும் அவர் தந்த மறுமொழி

சரீரப் பிரகாரமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் அவர் தமது சக மனிதர்களோடு கொண்ட சகோதரத்துவத்தைப் பற்றிய குறிப்புக் களையும் பார்க்கிறோம்.

ஐசுவரியவானாக இருந்த ஓர் இளைஞன் பற்றிய சம்பவத்தில் அந்த இளைஞன் அவரைப்பார்த்து ''போதகரே இவைகளை எல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்'' என்றான். இயேசு அவனை உற்றுப் பார்த்து அவனிடத்தில் அன்பு கூர்ந்தார் [மாற்கு 10:20,21]

லாசரு மரணமடைந்தபோது கிறிஸ்து எப்படி தன் உணர்ச்சியை வெளிக்காட்டினார் என்று யோவான் எவ்வாறு படம் பிடித்துக் காட்டினார் என்பதை யோவான் 22 : 33-35 வசனங்களில் பார்க்கலாம், ''அவள் அழுகிறதையும், அவளோடே யூதர்கள்

அழுகிறதையும் இயேசு கண்ட போது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து; அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்''. [யோவான் 11:33-35]

தாம் எவ்வாறு பாடுபடவேண்டியிருக்கிறது மரிக்க வேண்டியிருக்கிறது என்பதை முன் கூட்டியே அறிந்தவராகச் சொல்லும் வண்ணம் ''இயேசு இவைகளைச் சொன்ன பின்பு ஆவியிலே கலங்கினார்''. [யோவான் 13:21]

தம்மை ஏற்றுக்கொள்ளாததால் எருசலேம் நகரம் வீழ்ச்சியடையப்போகிறது என்பதை மிகுந்த வருத்தத்துடன் ''நகரைப் பார்த்து அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்''. என்று லூக்கா 19:41ல் பார்க்கிறோம்.

''இயேசு பிரயாணத்தினால் களைப்படைந்தவராய்'' காணப்பட்டார் என்று யோவான் 4:6ல் பார்க்கிறோம். அவருக்குப் பசியேற்பட்டது [மத்தேயு 4 : 2] தாகமடைந்தார். [யோவான் 19:28] கெத்சமனே தோட்டத்தில் மனுக்குலத்தின் பாவத்தை சுமந்தவராய் தமது சீஷர்களைப்பார்த்து ''என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிக்கிறது. நீங்கள் இங்கே தங்கி என்னோடே கூட விழித்திருங்கள்'' என்று சொன்னார். [மத்தேயு 26:38]

மேலும், ''அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது'' என்று லூக்கா 22:44ல் பார்க்கிறோம்.

''அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத் தினின்று இரட்சிக்கவல்லவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்டார்'' என்று எபிரெயர் 57ல் வாசிக்கிறோம்.

''வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்'' என்று லூக்கா 22 : 43ல் பார்க்கிறோம்.

தம்மைத்தாமே வெறுமையாக்குவது என்பது தமது தெய்வத்துவத்தை இழப்பதல்லவென்றும், தெய்வத்துவத்துக்கே உரிய உரிமைகளையும், வல்லமைகளையுமே வெறுமை ஆக்கினார் என்றும் முன்னரே நாம் கண்டிருக்கிறோம்.

மேலும், எல்லாவற்றிலேயும் தமது சகோதரர்களைப் போலானார் என்றாலும் மாம்சத்தில் வெளிப்பட்டும் பாவமற்றவராகவே ஜீவித்தார் என்றும், எல்லாவற்றிலேயும் தேவனையே சார்ந்திருக்கும் ஒரு மனிதனைப் போலவே அவரும் தேவனை சார்ந்தே இருந்தார் என்றும் கண்டிருக்கிறோம்.

தேவனிடமிருந்து அவரது எல்லாத் தேவைகளையும் தேவைப்படும்போதும், கிரியைகளை நடப்பிக்கிறபோதும் பரிசுத்தாவியினால் பெற்றார் என்றும் அறிந்தோம்.

அவர் தேவனைச் சார்ந்து இருத்தலையும், கீழ்ப்படிந்திருந்தார் என்பதையும் விளக்க இன்னும் கூட வேறு வசனங்கள் இருக்கலாமே. யோவான் சுவிசேஷத்தை இன்னும் கவனமாக வாசித்தால் அது காணக்கிடைக்கும்.

# பிதாவினால் அனுப்பப்பட்டார்

வார்த்தையானவர் உலகில் மனுஷகுமாரனாகவும், தேவ குமாரனாகவும் ஆனபோது அவரது இருப்பிலும், இறைவனோடுள்ள உறவிலும் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அப்படி விளங்கிக் கொள்ளாவிட்டால் வேதத்திலுள்ள அநேகப்பகுதிகளை விளங்கிக்கொள்ள முடியாது என்பது மட்டுமல்ல முரண்பாடுகளும் ஏற்படும்.

''அவரில் ஜீவனிருந்தது''என்று யோவான் 1:4ம் வசனம் கூறுகிறது. இந்த வசனம் அவர் தம்மில் தாமே ஜீவனுடையவராக இருந்தார். ஜீவன்மேல் அதிகாரம் உள்ளவராயிருந்தார் என்றும் அறிகிறோம்.

''ஏனெனில் பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடைய வராயிருக்கிறதுபோலே, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடைய வராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்'' [யோவான் 5:26] அவருக்கு இறைவனுடன் சார்பு இருந்தது, அது அவர் குமாரனா யிருந்தபடியினால் என்று நாம் அறிகிறோம்.

மனிதனாகத் தோன்றிய பொழுது அவரது ஜீவனைத்தாமாக கொடுத்துவிடவும், எடுத்துக்கொள்ளவும் தமது ஜீவன்மேல் அதிகாரமுடையவராகவும் ஆனார். தம்மைத்தாமே வெறுமையாக்கி மனிதரூபமான போது, தமது சகோதரர்களைப் போலானார். அவருக்கு ஜீவன்மேல் அதிகாரம் இருந்தது. ஏனெனில் அதை தேவன் வழங்கினார்.

இயேசுவானவர் தேவன் மேல் சார்ந்திருந்தார் என்ற கருத்தை விளக்கமாக அறியுமுன் அவரைப்பற்றிக் கூறப்பட்டுள்ள காரியங்களைப் பார்ப்போம்.

## மாம்சத்தில் அவர் பிறக்குமுன்னர்

1. வார்த்தையானவர் தேவனோடிருந்தார். அவர் தேவனாயிருந்தார். [யோவான் 1:1]

2. சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று [யோவான் 1:3]

3. அவர், நான் இருக்கிறவராக இருக்கிறேன், என்று அதிகாரத்துடன் மோசேயுடன் பேசினார். [யாத்திராகமம் 3:14,15]

4. இஸ்ரவேலரோடிருந்த கன்மலையாயிருந்தார்.[1 கொரி. 10:4]

5. தீர்க்கதரிசிகள் மூலமாக சாட்சியாக அறிவிக்கப்பட்ட வார்த்தையானவர்.[1 பேதுரு 1:11]

6. அவர் தேவனுடைய ரூபமாகவும், சாயலாகவுமிருந்தார் [பிலிப்பியர் 2:6]

7. அவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமாயுமிருந்தார். [எபிரெயர் 1:3]

8. அவர் தேவனால் அழைக்கப்பட்டவராயிருக்கிறார். [எபி 1:8]

9. அவர் நாமம் இமானுவேல் [கர்த்தர் நம்மோடிருக்கிறார்] அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு [ஏசாயா 9:6].

10. தேவத்துவத்தின் ''வார்த்தை''யாயிருந்தார். வேதாகம வசனங்களில் சுமார் 3000 முறைகளுக்கும் அதிகமான இடங்களில் ஏலோகிம் என்னும் வார்த்தை குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் உலகில் பிறந்த பின்னர் ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறோம்.சர்வ அதிகாரமுமுடையவர் என்பது பிதாவைச் சார்ந்திருத்தல் என்றாகிறது. அவர் குமாரனாக எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்தவராயிருந்தார்.

[தடித்த எழுத்துக்களில் இருப்பதெல்லாம் என்னுடையது ]

## யோவான் சுவிசேஷத்திலிருந்து

யோவான் 3:35 ***பிதாவானவர் குமாரனில்*** அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ***ஒப்படைக்கிறார்.*** [அவரே சிருஷ்டிகர் இப்பொழுது தாம் படைத்த எல்லாவற்றையும் அவரிடம் கொடுக்கப்படுகிறது என்ற கருத்தை நோக்குக]

யோவான் 5:19,20 பிதாவானவர் செய்யக் காண்கிறதெதுவோ அவையேயன்றி, ***வேறொன்றையும் தாமாகச் செய்யமாட்டார்.*** அவர் எவைகளைச் செய்கிறாரோ குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து தாம் செய்கிறவைகளை யெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார் [கிரியை நடப்பிக்க அதிகாரம் பெற்றார்]

யோவான் 5:22 பிதாவானவர் தாமே தீர்ப்புச் செய்யாமல் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ***ஒப்புக்கொடுக்கிறார்.*** [நியாயத் தீர்ப்புச் செய்ய அதிகாரம் பெறுதல்]

யோவான் 5:26 பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவ ராயிருக்கிறது போல, ***குமாரனும்*** தம்மில் தாமே ஜீவனுடைய வராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்.[ஜீவன் பெற்றிருக்க அதிகாரம்]

யோவான் 5:27 அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால் நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு *அதிகாரத்தையும்* அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

யோவான் 5:30 ***நான் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை*** நான் கேட்கிறபடியே நியாயத்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் ***என்னை அனுப்பின பிதாவுக்குச்*** சித்தமான தையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

யோவான் 5:36 பிதாவானவர் ***எனக்கு கற்பித்ததும்*** நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை ***அனுப்பினார்*** என்று என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறது.

யோவான் 5:37 என்னை அனுப்பின பிதாதாமே என்னைக் குறித்துச் ***சாட்சி*** கொடுத்திருக்கிறார்.

யோவான் 5:43 நான் ***என் பிதாவின் நாமத்தினாலே*** வந்திருக்கின்றேன்.

யோவான் 6:29 அவர் ***அனுப்பினவரை*** நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது.

யோவான் 6:37 பிதாவானவர் எனக்குக் ***கொடுக்கிற யாவும்*** என்னிடத்தில் வரும்.

யோவான் 6:38 என் சித்தத்தின்படியல்ல ***என்னை அனுப்பின*** பிதாவின் சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்.

யோவான் 6:57 ஜீவனுள்ள பிதா ***என்னை அனுப்பினது*** போலவும் நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும் என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

யோவான் 7:16 இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக என் உபதேசம் ***என்னுடையதாயிராமல்*** என்னை ***அனுப்பினவருடைய*** தாயிருக்கிறது.

யோவான் 7:28 ***என்னை அனுப்பினவர்*** சத்தியமுள்ளவர்.

யோவான் 7:29 நான் அவரால் வந்திருக்கிறபடியினாலும் அவர் ***என்னை அனுப்பியிருக்கிறபடியினாலும்***, நானே அவரை அறிந்திருக்கிறேன்.

யோவான் 7:33 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி இன்னும் கொஞ்சகாலம் நான் உங்களுடனேகூட இருந்து பின்பு, ***என்னை அனுப்பினவரிடத்திற்குப்*** போகிறேன்.

யோவான் 8:16 நான் தனித்திருக்கவில்லை. நானும் ***என்னை அனுப்பின பிதா***வுமாயிருக்கிறோம்.

யோவான் 8:18 ***என்னை அனுப்பின*** பிதாவும் என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறார்.

யோவான் 8:26 ***என்னை அனுப்பினவர்*** சத்தியமுள்ளவர் நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 8:28 நான் ***சுயமாய் ஒன்றும் செய்யாமல்*** என் பிதா எனக்குப் **போதித்தபடியே** இவைகளைச் சொன்னேன்.

யோவான் 8:29 ***என்னை அனுப்பினவர்*** என்னுடனே கூட இருக்கிறார். ***பிதாவுக்குப் பிரியமானவைகளை*** நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்க விடவில்லை.

யோவான் 8:38 நான் ***என் பிதாவினிடத்தில் கண்டதைச்*** சொல்லுகிறேன்.

யோவான் 8:42 நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; ***நான் சுயமாய் வரவில்லை அவரே என்னை அனுப்பினார்.***

யோவான் 8:55 அவரை நான் அறிந்து ***அவருடைய வார்த்தையை கைக்கொண்டிருக்கிறேன்.***

யோவான் 9:4 நான் என்னை ***அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்.***

யோவான் 10:18 இந்தக் ***கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன்.***

யோவான் 10:25 ***என் பிதாவின்*** நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறது.

யோவான் 10:29 அவைகளை ***எனக்குத் தந்த பிதா*** என்னிலும் பெரியவராயிருக்கிறார்.

யோவான் 10:32 நான் ***என் பிதாவினிடத்திலிருந்து பெற்றதை*** அனேக நற்கிரியைகளை உங்களுக்கும் காண்பித்தேன்.

யோவான் 10:36 ***பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும் உலகத்தில் அனுப்பப்பட்டும்*** இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவ தூஷணம் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?

யோவான் 10:37 ***என் பிதாவின்*** கிரியைகளை நான் செய்யா திருந்தால் நீங்கள் என்னை விசுவாசிக்கவேண்டியதில்லை.

யோவான் 11:41 ***பிதாவே நீர்*** எனக்குச் செவிகொடுத்த படியால் நான் உன்னை ஸதோத்தரிக்கிறேன்.

யோவான் 11:42 ***நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர்*** என்று நான் அறிந்திருக்கறேன்.

யோவான் 12:44 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்திலல்ல ***என்னை அனுப்பினவரிடத்தில்*** விசுவாசமாயிருக் கிறான்.

யோவான் 12:45 என்னைக் காண்கிறவன் ***என்னை அனுப்பினவரைக் காண்கிறான்.***

யோவான் 12:49 ***நான் பேசவேண்டியது இன்ன தென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும்*** என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.

யோவான் 12:50 ஆகையால் நான் பேசுகிறவைகளை ***பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்.***

யோவான் 13:3 தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ***ஒப்புக்கொடுத்தாரென்பதை..*** இயேசு அறிந்து

யோவான் 13:20 என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ***அனுப்பின பிதாவை*** ஏற்றுக்கொள்கிறான்.

யோவான் 14:10 நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் ***சுயமாய்ச் சொல்லவில்லை*** என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்.

யோவான் 14:16 நான் *பிதாவை வேண்டிக் கொள்ளுவேன்.* அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும் படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் **உங்களுக்கு தந்தருளுவார்.**

யோவான் 14:24 நீங்கள் கேட்கிற வசனம் *என்னுடையதாயிராமல்* என்னை *அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.*

யோவான் 14:31 பிதா *எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்.*

யோவான் 15:10 நான் என் *பிதாவின் கற்பனைகளைக் கொண்டு* அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல....

யோவான் 15:15 *என் பிதாவினிடத்தில் நான் கேள்விப் பட்ட* எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

யோவான் 15:21 அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால்

யோவான் 16:5 இப்பொழுது நான் *என்னை அனுப்பின வரிடத் திற்குப்* போகிறேன்.

யோவான் 16:28 *நான் பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு* உலகத்திலே வந்தேன்.

யோவான் 17:1 நீர் உம்முடைய குமாரனை *மகிமைப்* படுத்தும்.

யோவான் 17:2 மாமிசமான யாவர்மேலும் நீர் *அவருக்கு அதிகாரம் கொடுத்தபடியே*

யோவான் 17:4 நான்செய்யும்படி நீர் எனக்கு *நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன்*

யோவான் 17:6 நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த *மனுஷருக்கு* உம்முடைய நாமத்தை *வெளிப்படுத்தினேன்.*

யோவான் 17:7 நீர் *எனக்குத்தந்தவைகளெல்லாம்* உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.

யோவான் 17:8 நீர் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்கு கொடுத்தேன்.... *நீர் என்னை அனுப்பினீர்* என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

யோவான் 17:9 நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல் *நீர் எனக்குத் தந்தவர்களுக்காக* வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.

யோவான் 17:11 *நீர் எனக்குத்தந்தவர்கள்* நம்மைப்போல் ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம் நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.

யோவான் 17:12 *நீர் எனக்குத்தந்தவைகளை* உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன்.

யோவான் 17:21 *நீர் என்னை அனுப்பினதை* உலகம் விசுவாசிக்கிறதற்காக... அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

யோவான் 17:23 ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை *நீர் அனுப்பினதையும்*, நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களில் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

யோவான் 17:24 *நீர் எனக்குத்தந்த மகிமையை நீர் எனக்குத்தந்தவர்கள்* காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்.

யோவான் 17:25 பிதாவே... நான் உம்மை அறிந்திருக்கிறேன். *நீர் என்னை அனுப்பினதை* இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

யோவான் 18:9 *நீர் எனக்குத் தந்தவர்களில்* ஒருவனையும் இழந்து போகவில்லை.

யோவான் 18:11 *பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில்* நான் பானம் பண்ணாதிருப்பேனோ.

மேலே கூறப்பட்ட ஏராளமான வசனங்களைப் படித்த பின்னர் இயேசு, பிதாவால் அனுப்பப்பட்டவராகவும், தேவனுக்குக் கீழ்ப் படிந்தவராகவும், அவர் பேசின-நடப்பித்த எல்லாவற்றிலும் தேவனையே சார்ந்திருந்தவராகவும் இருந்ததைக் காணும்போது, உலகில் மனித சகோதரனாக இருந்தாரென்றும், அவரது பங்களிப்பில் முற்றிலும் வேறுபட்டிருந்தார் என்றும் அறிந்து கொள்ளாமலிருக்க முடியாது.

அவர் தெய்வீகத்துக்குரிய அதிகாரத்தையெல்லாம் வெறுமை யாக்கினார் என்றும், எல்லாவற்றிலும் தமது சகோதரர்களைப் போல ஆனார் என்றும், அதன் பின்னர் அவர் செய்ததெல்லாம் கடவுளின் அதிகாரத்தினால் செய்தார் என்றும் நாம் முன்னரே கண்டோம். அதேநேரத்தில் மனிதகுலத்தின் இரட்சிப்புக்காக அவர்செய்த மகத்தான தியாகத்தில் [சிலுவை மரணத்தில்] வேறு என்ன வெல்லாம் அடங்கியிருக்கிறது என்பதை இப்போது அறிய முயல்வோம்.

## இறுதிவரை காட்டின உறுதி

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்குபேர் எழுதியுள்ள இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில் அவர் எல்லா நிலைகளிலும் அதிகாரமுள்ளவராகவும், அவற்றை மேற் கொள்கிறவராகவும் இருந்ததை நாம் காண்கிறோம்.

அவருடைய பன்னிரண்டாம் வயதில் யோசேப்புமரியாளால் அவர் எருசலேமில் விடப்பட்டார். பின்பு அவர்கள் மீண்டும் அவரைச் சந்திக்க வந்தபோது அவர் வேதாகமத்தில் தேர்ந்தவராக வேதபாரகர்களும் தேவாலயத்து மேதைகளும் திகைக்கும்படியாக உரையாடிக்கொண்டிருந்ததைக் கண்டார்கள் [லூக்கா 2:41-47]

அவர் ஞானஸ்நானம் பெற்ற பின்பு சாத்தானால் சோதிக்கப்பட்ட போது சரியான மறுமொழி கூறுபவராகவும், ஒவ்வொரு சோதனைக் கும் தயாருள்ளவராகவும் இருந்தார். [மத்தேயு 4ம். அதிகாரம்]

''அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய் தேவாலயத் திலே ஆடுகள், மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர் களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும்கண்டு, கயிற்றி னால் ஒரு சவுக்கையுண்டுபண்ணி அவர்கள் யாவரையும் ஆடுமாடு களையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரரு டைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி, இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோங்கள்; என் பிதாவின்வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார். [யோவான் 2:13-17] இவ்வாறாக வெளிப்படையாக கோபத்தை வெளிப்படுத்தினார். ஒரு சமயம் பரிசேயர்கள்-பிரதான ஆசாரியரால் இயேசு சிறைப்பிடிக்க அனுப்பப்பட்ட தேவாலய அதிகாரிகள் திரும்பி வந்து, இயேசுவைப் போல் அதுவரை எவரும் பேசினது கிடையாது என்று வியந்து கூறினார்கள். பல சந்தர்பங்களில் அவரை விசுவாசியாதவர்கள் அவரிடம் கேட்ட வினாக்களுக்கு விடையளிக்கும் போது, குற்றம் காணும்படி அவரிடத்தில் கேள்விகள் கேட்டபோது நேரடியாக பதில் கூறாமல் இருந்த நேரத்திலும் அவர் எல்லாவற்றையும் தெளிவு பட அறிந்து நடந்து கொண்டதையும் நாம் அறிகிறோம். ''அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அந்த நாள் முதல் அவரிடம் ஒருவனும் கேள்வி கேட்கத் துணியவில்லை [மத்தேயு 22:46]

## கெத்சமனே தோட்டத்தில் வேதனை

.....''தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள வரை நோக்கி பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து....' என்று எபிரெயருக்கு எழுதின 5:7ல் வாசிக்கிறோம்.

''அப்பொழுது அவர் என் ஆத்தமா மரணத்தக்கு ஏதுவான துக்கங்கொண்டிருக்கிறது; என்று சொல்லி, சற்று அப்புறம் போய் முகங்குப்புற விழுந்து : ஜெபம் பண்ணினார்''. [மத்தேயு 26:38,39] என்றும்.

''..... அப்பொழுது வானத்திலிருந்து ஒருதேவதூதன் தோன்றி, அவரைப்பலப்படுத்தினான். அவர் மிகவும் வியாகுலப் பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது'' என்றும் வாசிக்கிறோம்.

இயேசுக்கிறிஸ்துவின் ஜீவியத்தில் வேரெந்தச் சந்தர்ப்பத் திலும் இவ்வாறு அவரது அறிவுக்கும் உணர்வுகளுக்கும், ஆவிக் குறிய நிலைக்கும் சவால் ஏற்பட்டதில்லை. சிலுவை மரத்தின் போது கூட அவர் கெத்சமனே தோட்டத்தில் அனுபவித்த இத்தகைய வேதனையை உணரவில்லை. இங்கே மரணத்துக் கேதுவான துக்கம் இயேசுவின் ஆத்துமாவைக் கவ்விக் கொண்ட நிலையில்தான் ''பிதாவே இந்தப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால்.....'' என்று ஜெபித்தார்.

**வேதனைக்கு சரீரப்பிரகாரமான மறுமொழி**

பயமும், பயங்கரமும் தாங்கமுடியாத அளவுக்கு நெருக்கும் சமயங்களில் மனித உடலிலிருந்து குளிர்ச்சியான வியர்வை கொட்டுவதுண்டு. ஆனால், ''இயேசுவின் சரீரத்திலிருந்து இரத்தத்தின் பெரும்துளிகளாய் வியர்வை விழுந்தது'' என்று லூக்கா எழுதியிருப்பதை வாசிக்கிறோம்.

''இரத்தத்தின் பெருந்துளிகள்'' என்று பொருள்படும் Thromboi என்ற மருத்துவச் சொல்லை மரத்துவரான லூக்கா பயன்படுத்தியிருக்கிறார். சரித்திர ரீதியாகவும், தற்கால மரத்துவ ரீதியாகவும் பார்த்தால், இதுபோன்று ''இரத்தத்தின் பெருந்துளி களாய் வியர்வை விழுந்தால் அடுத்தது உடனடி மரணம்தான் சம்பவிக்கும்'' என்னுடைய ஆத்துமா மரணத்திற்கேதுவான

துக்கங்கொண்டிருக்கிறது என்று இயேசு கூறியது ஒன்றும் மிகைப்படுத்திக் கூறப்பட்ட தல்ல. [மத்தேயு 26:38]

அவர் என்ன அனுபவித்தார்? சிலர் கூறுவது போலவே தாம் சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதை அறிந்திருந்தார். அவர் பாடுகளை அனுபவித்தது அவரது மனுஷீகத்தின் வெளிப்பாடு என்று எடுத்துக் கொள்ளலாமா? சரீரப்பிரகாரமான பாடுகளையும், மரணத்தையும் சந்திக்க வேண்டுமே என்ற பயங்கரத்தினால் ஏற்பட்டதா?

## அவரது சீஷர்களின் விசுவாசம்

மேற்கூறியவற்றில் நாம் ஒரு முடிவுக்க வருவதற்கு முன்னர் முதலாம் நூற்றாண்டில் இயேசுவின் சீஷர்கள் தம் விசுவாசத்திற்காக இரத்தசாட்சிகளாய் மரித்தபோது எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை நாம் அறிந்து கொள்வது ஏற்றதாக இருக்கும். அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். கொதிக்கும் எண்ணெயில் தள்ளப்பட்டார்கள், துஷ்ட மிருகங் களுக்கு உணவாகப் போடப்பட்டார்கள், உயிரோடே கொளுத்தப் பட்டார்கள். இன்னும் பல்வேறு வகைகளில் வதைக்கப்பட்டார்கள். என்றெல்லாம் சரித்திரம் கூறுகிறது. எனினும், அவர்கள் கர்த்தரைத்துதித்துப் பாடிக்கொண்டே மரணத்தை ருசித்தார்கள். மரண நேரத்தில் அவர்கள் காட்டிய ஆத்ம உறுதியும், வீர உணர்ச்சி யும் குறிப்பிடத்தகுந்தது. இது இயற்கைக்கே மாறானதுமாகும். இச்சம்பவங்களையெல்லாம் நேரில் கண்ட விசுவாசியல்லாத மக்கள் அநேகர் விசுவாசித்தார்கள் என்பதும் வரலாற்றில் உண்டு.

கெத்சமனே தோட்டத்தில் துவங்கி முதல் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற இக்கொடூரச் சம்பவங்களை வைத்து இந்தச் சீடர்கள் இயேசு நாதரை விட தைரியமுள்ளவர்களாக இருந்தார்கள் என்று சொல்ல முடியுமா? இயேசு மரணத்தைக் கண்டு அஞ்சியதால்தான் அவரது வேர்வை 'இரத்தத்தின் பெருந்துளிகளாக விழுந்தனவென்றும், அவரைப் பின்பற்றிச் சென்ற கிறிஸ்தவர்கள் வீரமிக்கவர்களாக விளங்கினார்

கள் என்றும் முடிவுகட்ட முடியுமா? நிச்சயமாக இதற்கு வேறு வகையானதொரு விளக்கம் இருக்க வேண்டும்.

'மரணம்' என்பதை விருப்பு வெறுப்பற்ற நிலையிலிருந்து யோசிப்போமானால், ஆதிக் கிறிஸ்தவர்களைத்திடப் படுத்த அவர்களது 'விசுவாசம்' ஒன்று மட்டுமே இருந்தது. அவர்கள் இயேசு அருளின வாக்குத்தத்தங்களையே விசு வாசித்தனர்.

''என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்ற வசனம் யோவான் 11:25ல் எழுதப்பட்டு உள்ளது.

''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்; என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்தக் கொள்வேன்'' என்று யோவான் 14:1-3ல் வாக்குக்கொடுத்திருக்கிறார்.

ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்த மாறாத வசனங்களை முழுவது மாக நம்பினார்கள். ஆனால் தங்கள் சொந்த அனுபவத்தில் அனுபவிக்கவில்லையென்றாலும், மரணத்தின் வழியாக நித்திய ஜீவனுக்குள் நுழையும் சத்தியத்தை அறிந்த விசுவாசம் அவர்களை மரண நேரத்தில் திடப்படுத்தினது.

அப்படியானால் கிறிஸ்துவைப்பற்றி நாம் என்ன கூறுவது? உலகில் பிறப்பதற்கு முன்னரே நித்தியத்திற்குள் இருந்தவர்; அவர் திரும்பவும் சென்றடையும் இடத்தையும் முன்பே கண்டிருக்கிறார். மரணம் தமது ஆவியைத் தொடமுடியாது என்றும் அறிந்திருந்தார். மூன்றாம் நாளிலே தமது சரீரம் எழுந்திருக்கும் என்றுமறிவார். தேவனையும் அவரது வல்லமைகளையும் அவரறிவார். இத்தனைக்கும் மேலான அவர் கெத்சமனே தோட்டத்தில் பலவீனராக

கலங்கிக்காணப்பட்டாரே என்று நாம் குறை சொல்ல முடியமா? சரீரப்பிரகாரமான மரணம், அவருக்கு அவரது சீடர்களை விட மிகமிக வேதனையூட்டியது என்று எப்படிக் கூறமுடியும்?

## அவரை வேதனைப் படுத்தியது என்ன?

சரீரப்பிரகாரமான பாடுகளும் மரணமும் அவருக்கே கெத்சமனே தோட்டத்தில் ஏற்படுத்தியிராவிட்டால் அவர் வேறு என்ன காரியத்தை எதிர் கொண்டார்! இத்தனை பெரிய சவாலை சந்திக்க அவருக்கேற்பட்டதென்ன?

அவரது விசாரணையின்போதும், சிலுவைமரணத்தின் போதும் எந்த ஒரு அசைவையும் காணாத அவர் கெத்சமனே தோட்டத்தில் மட்டும் அத்தனைபாடுகளுக்குள்ளானதேன்?

### சிலுவையினால் ஏற்பட்ட விளைவு

சிலுவை மரணமானது இயேசுவை இரண்டு வகையில் பாதித்தது. ஒன்று, சரீரப்படி பார்த்தால் மரணம்; இரண்டு ஆவிக்குரியபடி பார்ததால் 2 கொரிந்தியர் 5:21ம். வசனப்படி அவர் மனிதருக்காக பாவமானார். கெத்சமனே தோட்டத்தில் அவர் உணர்ந்த பயங்கரம், சரீரப்படியான மரணத்தால் உண்டாகவில்லை யானால், அவர் செய்ய விருக்கும் தியாகமான ஆவிக்குரிய அனுபவமாகத்தான் இருக்க வேண்டும். அவர், மனிதருக்குப் பாவமானதில் என்னென்ன விளைவுகள் தொடர்கின்றன என்று பார்பபோம்.

### பாவம்

மனிதர்களாகிய நம்மைச் சுற்றிலும் பாவம் இருக்கிற படியால் நாம் அதைக்கண்டு பழகிப்போய்விட்டோம். அது வேதனையை சமக்க கொடுப்பதில்லை. எனவே நாம் கிறிஸ்து இயேசுவின் உணர்வைப்புரிந்து கொள்ள முடியாது. பாவம் கடவுள் தன்மைக்கு நேர் எதிரானார். எனவே தான் அதனை அவரால் சகித்துக் கொள்ளமுடிவதில்லை. அதனால் தான் இரட்சகரற்ற மனிதன்

பாவத்தில் முற்றிலுமாக மூழ்கி, தேவனிடமிருந்து முழுவதுமாகப் பிரிக்கப்படுகிறான்.

தேவனுடைய ஜீவசுவாசத்தால் அழியாத தன்மையாகிய ஆத்து மாவைப் பெற்ற மனிதன் ஒரேயொரு பாவத்தால் நித்திய இழப்பை அனுபவிக்கிறான் என்று நினைக்கும்போது பாவத்தின் பயங்கரம் எத்தகையது என்பது கொஞ்சமாவது புரிந்து கொள்ள முடியும். விலை மதிப்பில்லாததான இருதன்மைகளையும் சேர்த்த மனித உடலுக்குத் தந்திருக்கிறார். அந்த விலைமதிப்பற்றதன்மை, பாவத்தினால் நரகத்திற்குள் தள்ளப்படவிடுவாரா? அதற்கு வேறு ஒரு வழி இருக்க வேண்டும்.

நான் ஒரு பாதையில் நடந்து சென்று கொண்டிருக் கிறேன்; அந்த பாதையில் ஒரு பக்கத்தில் மனிதர்களால் போடப்பட்ட குப்பைக்கூளங்கள் மலைபோல் குவிந்து கிடக்கிறது. அது அழுகிப்போய் துர்நாற்றம் வீசி, ஈக்களும், புழுக்களும் நெளிந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்ட நான் அதிர்ச்சி யடைந்து அதை அவ்விடத்திலேயே புதைத்து விடுவதைப் பார்க்கிலும் முற்றிலும் வெறுத்து ஒதுக்குவதே சரி என்பது போல உள்ளது.

அந்த அதிர்ச்சியைவிட, பரிசுத்த தெய்வமாகிய அவர் பாவ மாக ஆக்கப்படும்போத அடைந்த அதிர்ச்சி அதிகமாக யிருக்கும்.

மனிதனை ஆட்கொண்டிருப்பதான பாவம், தேவனுக்கு நேர் மாறானது. கெத்சமனே தோட்டத்தில் நாம் கானும் காட்சியானது, நித்தியகால பரிசுத்தர், மனித குலத்தின் பாவத்தைப் பரிகரிப் பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் போது, அவர் தாமே அந்தப் பாவங்கள் ஒவ்வொன்றையும் செய்தது போலுணர்ந்தார்.

நாம் தனிப்பட்டமுறையில் சிறிய பாவங்களையும், மேலோட்டமான பொய்களையும் குறித்து கவலையற்றவர்களாக இருக்கலாம். ஆனால், அத்தகைய நாமே கூட உலகில் மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் பயங்கரக் குற்றவாளிகள் செய்த குற்றங்களை நாம்செய்ததாக நம்மீது சாட்டப்பட்டால், நாம் வேதனையால் வெம்பி புழுங்கிப் போய்விடுவோமல்லவா!

### அவர் பாவமாக ஆகுதல்

இயேசு மெய்யாகவே நமக்காக பாவமாக்கப்பட்டார் என்ற அனுபவம் தான் கெத்சமனே தோட்டத்தில் அவர் அத்தகைய நிலைக்குள் தள்ளியது. தாம் பருக வேண்டியதான அந்தப் பாத்திரத்தின் பயங்கரத்தில் இருந்து தம்மை விலக்க·வேண்டும் என்று வியாகுலப்பட்டது ஏனெனில், அப்பாத்திரத்தில் பருகினால் அது நித்திய விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதால்தான்.

அவர் 33 ஆண்டுகள் மனிதனாக சஞ்சரித்த அந்தக் காலத்தில், ''வார்த்தை''யான அவர் பரிசுத்தராகவே ஜீவித்தார். எந்த ஒரு பாவமும் அவரைத் தொடமுடியவில்லை. அவர் மனித ரூபம் எடுத்ததை எந்தவொரு நேரத்திலும் அகற்றிப்போட்டு விட்டு தமக்குரிய தெய்வத்துவத்தின் மகிமைக்குத்திரம்பியிருக்கலாம். அவர் அவ்வாறு செய்திருந்தால், மனிதனுடைய பாவத்திற்கான தண்டனை முத்தரிக்கப்பட்டிருக்கும் ஒரு ஆத்துமாகூட இரட்சிக்கப்பட்டிருக்காது.

மேலே கூறப்பட்ட மாற்று நிலையை எடுக்க வார்த்தையான வருக்கு வாய்ப்பிருந்தது. அத்தகைய வாய்ப்பு இல்லாதிருந்திருந் தால், தோட்டத்தில் அந்தப் போராட்டமும், வேண்டுதலும்'' உம் சித்தப்படியே ஆகட்டும்'' என்று தாழ்த்தும் நிலை ஏற்பட்டிராது. பின்னர் அவரே கூறுகிறார். ''நான் இப்பொழுது என்பிதாவை வேண்டிக் கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா''. [மத்தேயு 26:53]

விடுதலை மார்க்கம் இருந்தது; ஆனால் அதை தெரிந்து கொள்ள வேண்டியது அவரே.

எனவே கெத்சமனேயின் போராட்டம் சாத்தானுடன் கொண்ட போராட்டம் என்பதை விட தமக்குள்ளான போராட்டம் என்று தான் கூற வேண்டும். அது அவர் நடந்த பாதைகளின் சந்திப்பு. தனக்குச் சுதந்திரமாக உள்ள நிலைகளுக்கு வருவதா அல்லது மனித குலத்

திற்காகத்தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பின் பாதையில் தொடர்வதோ, அதனால் பாவத்தையும் அது விளைவிக்கும் பலன்களையும் தம்மீது ஏற்றிக்கொள்வதா என்பதுதான் அவர் முன்பு வைக்கப்பட்டிருந்தது.

கர்த்தருக்கே சகல ஸ்தோத்திரமும் நன்றியுமுண்டாகட்டும். இறுதியில் எல்லாவற்றையும் மேற் கொண்டது தெய்வீக அன்பு. ''என் பிதாவே இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினா லொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம் முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது'' என்று ஜெபம் பண்ணினார். [மத்தேயு 26:42]

## மரணம்

ஆதாம் செய்த முதல் பாவ நிவாரணத்துக்காக பாவனையாகச் சிந்தப்பட்ட இரத்தம் தொடங்கி பின்னர் செலுத்தப்பட்ட பலிகள் ஒவ்வொன்றும், பின் ஒரு காலத்தில் பாவநிவாரணம் செய்யப்படும் என்பதற்கான வாக்குறுதிப் பத்திரமேயாகும். அதற்கான காலமும் வந்தது. அதற்கான பொறுப்பை கிறிஸ்து கெத்சமனே தோட்டத்தில் ஏற்றுக் கொண்டார். அதற்கான போராட்டமும் முடிந்தது. இரட்சண்யத்தின் செயல்பாடுகளும் இயங்கத்தொடங்கியது.

## சிறைப்படுத்தலும் விசாரணையும்

''பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து; இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனஷ குமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கிற வேளை வந்தது'' என்று கிறிஸ்து கூறினதை மத்தேயு 26:45ம். வசனத்தில் காண்கிறோம். அடுத்து, ''அவர் இப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ் செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். இயேசு அவனை நோக்கி யூதாசே முத்தத்தினாலேயா மனுஷ குமாரனைக் காட்டிக் கொடுக் கிறாய் என்றார்'' என்று இயேசு கேட்டதை லூக்கா 22:47,48 ஆகிய வசனங்களில் காண்கிறோம்.

‘‘இயேசு தமக்கு நேரிடப் போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டு போய்,‘‘அவர்களை நோக்கி யாரைத் தேடுகிறீர்கள் என்றார். [அங்கே பிரதான ஆசாரியர் பரிசேயர் ஆகியோரின் அதிகாரிகளும், படைகளும் தீப்பந்தங்களோடும், விளக்குகளோடும் ஆயுதங்களோடும் இருந்தனர்.]

‘‘அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக நசரேனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு : நான் தான் என்றார். அவரைக் காட்டிக் கொடுத்தயூதாசும் அவர்களுடனேகூட நின்றான். நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்ன வுடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர் மறுபடியும் அவர்களை நோக்கி யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள், நசரேனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக : நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார் [யோவான் 18:4-8]

இயேசுவைப்பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம் பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக் கட்டி அவருடைய முகத்தில் அறைந்து உன்னை அடித்தவன் யார், அதை ஞான திருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டது மன்றி, மற்றும் அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள். அவரைப் பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டு போய் விட்டனர் என்ற விவரங்களை லூக்கா 22:54லும், 63-65 வசனங்களிலும் நாம் காண்கிறோம்.

பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும், சங்கத்தினரும் அவரைக் கொலை செய்ய பொய்சாட்சி தேடினார்கள்; ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய் சாட்சி சொல்லியும் அவர்களது சாட்சிகள் ஒவ்வவில்லை. கடைசியில் இரண்டு பொய் சாட்சிகள் வந்து, தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன்

எழுந்திருந்து, அவரை நோக்கி இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்த நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி : நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு நீர் சொன்னபடிதான், அன்றியும் மனுஷ குமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்று கிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள் மரணத்துக்குப் பாத்திர னாயிருக்கிறான் என்றார்கள். அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரை கன்னத்தில் அரைந்து, கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞான திருஷ்டியினாலே எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். [மத்தேயு 26:59-68]

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த அநீதச் செயலையும், சரீரத்தைப் பாடுகளுக்குட்படுத்தப்படுதலையும் குறித்து ஏசாயா தீர்கக தரிசி: அடிக்கிறவார்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன். அவமானத்தக்கும் உமிழ் நீருக்கும் என்முகத்தை மறைக்கவில்லை என்று ஏசாயா 50:6ல் கூறியிருப்பதைப் பார்க்கிறோம்.

## அவரிடம் கேட்கப்பட்ட முக்கிய வினா

சரீரப்பிரகாரமான பாடுகள் துவங்கிவிட்டன. இயேசு பிடிபட்ட பின்னர், இரவு முழுவதும், முதலாவது அனனியாவினாலும்

தொடர்ந்து பிரதான ஆசாரியனான காய்பாவினாலும், சனகரீம் சங்கத்தார் அனைவராலும் விசாரிக்கப்பட்டார். அடுத்தடுத்துப் பொய் சாட்சிகள் கொண்டுவரப்பட்டன. அவைகளுக்கு மாறுத்தரம் சொல்லும்படி பிரதான ஆசாரியன் அவருக்குக் கட்டளையிட்டான். மௌனமே அவர்தந்த மறுமொழியாக இருந்தது. மௌனமாக இருந்த போதிலும், அந்த இரவு விசாரணை முழுவதிலும் இயேசுவே மேற்கொள்கிறவராயிருந்தார்.

மரணத்துக்கு ஏதுவான குற்றமொன்றையும் நிரூபிக்க முடியவில்லை என்பது கண்டு எரிச்சலடைந்து, காய்பா, நீ ஜீவனுள்ள தேவனுடைய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று கடடளையிட்டான்.

நித்தியக் காலமாகக் கேட்கப்பட்ட கேள்வி ''நீ கிறிஸ்து என்று உரிமை கொண்டாடுகிறாயா'' என்பதல்ல. ''நீ ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவா?'' என்று நேரடியான கேள்வியே யாகும்.

பொய்சாட்சிகள் அவரிடமிருந்த எந்தக்குற்றத்தையும் கண்டு பிடிக்காத நிலையில், இந்த முக்கியமான கேள்வி அவரிடத்தில் கேட்கப்பட்டது. எல்லாக் காலத்திலும் வாழும் மனிதர்கள், ஏன் அவர் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டார் என்ற காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும். நியாயமற்ற விசாரணையில் வெளியான உண்மை என்ன? ''நீ கிறிஸ்துவா?'' என்ற கேள்விக்கு அவர் ''நீர் சொல்லுகிறபடிதான்'' என்று மறுமொழி கூறினார். [மாற்கு 14:61].

வேதத்தையும் பிரமாணங்களையும் கற்றறிந்தவர்களாகிய இவர்கள் மேசியா வருவார் என்ற தீர்க்கதரிசனத்தையும், இரட்சகர் வரக்காத்திருக்கிறவர்களுமாகிய இந்த மனிதர்கள், இவர்தான் கிறிஸ்துவாக இருக்குமோ என்று கொஞ்சம் கூட சிந்தித்துப் பார்க்காதது விந்தையிலும் விந்தையே! தேவனுக்கே விரோதமாக போர் செய்கிறோம் என்று நினைத்துக்கூடப் பார்க்க வில்லையே! தங்கள் குறுகிய சிந்தனையில் இவர் குற்றவாளி என்று முழு விசாரணைக்கு முன்னமே முடிவு செய்து கொண்டார். அவரது

பதில், அவர்களைத்தங்கள் முடிவுப்படியே செல்லுவதைத் தடுக்காமல், அவர்களது தவறான முடிவை உறுதி செய்வதற்கு உதவியாகவே இருக்கிறது என்று எடுத்துக் கொண்ட அவர் தேவ தூஷணம் செய்கிறார் என்றார்கள்; மரண ஆக்கினைக்குட் படுத்தினார்கள்.

## பிலாத்துவிடம் ஒப்படைத்தல்

''அவரைக் கூட்டிக் கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்''. [மத்தேயு 27:2]

பிலாத்து, அவர்களிடத்தில் வெளியே வந்து, இந்த மனுஷன் மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான். அதற்கு அவர்கள் இவன்குற்ற வாளியாயிராவிட்டால் இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்க மாட்டோம் என்றார்கள்.

பிலாத்து அவர்களை நோக்கி : இவனை நீங்களே கொண்டு போய் உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந் தீருங்கள் என்றார். அதற்கு யூதர்கள், ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள் [யோவான் 18:29-32]

இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டியதில்லையென்றும் சொல்லி ஜனங்களை கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர் மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்.

பிலாத்து அவரை நோக்கி; நீ யூதருக்கு ராஜாவா என்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : நீராய் இப்படிச் சொல்கிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக் குறித்து இப்படிச் சொன்னார்களோ? என்றார். பிலாத்து பிரதியுத்தரமாக நான் யூதனா? உன் ஜனங்களும், பிரதான ஆசாரியனும் உன்னை என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள். நீ என்ன செய்தாய் என்றான். அதற்கு இயேசு: என் ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல; என் ராஜ்யம் இவ்வுலகத்தக்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடாத

படிக்கு என் ஊழியர்கள் போராடியிருப்பார்களே! இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்லவென்றார்.

அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி : அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு, நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான் சத்தியத்தைக் குறித்து சாட்சி சொல்ல வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். அதற்குப்பிலாத்து சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வந்து : நானவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான். [யோவான் 18:34-38]

## ஏரோதினால் விசாரிக்கப் படுதல்

இவன் கலிலேயா தொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேச மெங்கும் போய் உபதேசம் பண்ணி ஜனங்களை கலகப்படுத்தி வருகிறான் என்று வைராக்கியத்தோடே இயேசுவின் மேல் குற்றம் சாட்டத் தொடங்கினார்கள்.

கலிலேயா என்பதை பிலாத்து கேட்டபொழுது இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்த, அவர் ஏரோதின் அதிகாரத் திற்குட்பட்டவர் என்றறிந்து அந்நாட்களில் எருசலேமுக்கு வந்திருந்த ஏரோதுவினிடத்துக்கு அவரை அனுப்பினான்.

ஏரோது இயேசு நாதரைப்பற்றிய அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததாலும், அவரால் செய்யப்படும் அடையாளங் களையும், அற்புதங்களையும் பார்க்க வேண்டுமேவென்று, அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆவல் கொண்டிருந்தான்.

அந்தப்படி அவரைக்கண்டபோது சந்தோஷப்பட்டு அநேகக் காரியங்களை அவரிடத்தில் கேள்வியாக வினவினான். அதற்கு அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. பிரதான ஆசாரியரும், வேத பாராகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ் சாட்டிக்கொண்டே நின்றனர். அப்போது தன் போர்ச் சேவகரோடே கூட அவரைநிந்தித்துப் பரிகாசம் பண்ணி மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுப்பித்து அவரைத்திரும்பவும் பிலாத்துவினிடத்திற்கே அனுப்பினான் [லூக்கா 23:5-11]

## முரட்டு ஜனக்கூட்டத்தினர் செய்த தேர்வு

பிலாத்து மேற்கொண்டு என்ன செய்தான் என்று மத்தேயு விளக்குகிறார்.

காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டும் என்று ஜனங்கள் கேட்டுக் கொள்கிறார்களோ அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாக இருந்தது. அப்பொழுது காவல் பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பிரபலமான ஒருவன் இருந்தான்.

பொறாமையினாலே அவரை விசாரணைக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை பிலாத்து அறிந்து, அவர்கள் கூடியிருக்கையில் அவர்களை நோக்கி எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டும் என்கிறீர்கள்?பரபாசையோ? கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவையோ?என்று கேட்டான்.

அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்.

பரபாசை விட்டுவிடக் கேட்டுக்கொள்ளவும், இயேசுவை கொலை செய்விக்கவும் பிரதான ஆசாரியரும், மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டார்கள். தேசாதிபதி பிலாத்து ஜனங்களை நோக்கி இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள் பராபாசை என்றார்கள். பிலாத்து அவர்களை நோக்கி அப்படியானால் கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று எல்லாரும் ஏகமாய்ச் சொன்னார்கள். தேசாதிபதியோ ஏன் அவன் என்ன பொல்லாப்பு செய்தான் என்றான். அதற்கு அவர்கள், அவனைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். [மத்தேயு 27:15-23]

''பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மீண்டும் அவர்களிடத்தில் பேசினான். அவர்களோ அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று மறுபடியும் மறுபடியும் கூக்குரலிட்டார்கள்.''

பிலாத்து, மூன்றாம் தரமும் அவர்களை நோக்கி ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்திற்கேதுவான குற்றம் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லையே;ஆகையால் நான் இவனை தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான். அப்படியிருந்தும், அவரைச் சிலுவையிலறைய வேண்டும் என்று அவர்கள் உரத்த சத்தத்தோடு, கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். அவர்களும், பிரதான ஆசாரியரும் இட்ட சத்தம் மேற்கொண்டது. [லூக்கா23:20-23]

### *போர்ச்சேவகரால் பரியாசம் செய்யப்படுதல்*

பிறகு, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவை தேசாதிபதியின் அரண்மனையிலே கொண்டு போய் போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடி வரச் செய்து, அவர் வஸ்திரங்களைக் கழற்றி சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின் மேல் வைத்து அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி அவர்மேல் துப்பி,அந்தக் கோலை எடுத்து அவரைச் சிரசில் அடித்தார்கள். [மத்தேயு 27:27-30]

### *பிலாத்துவின் தொடர் விசாரணை*

அப்பொழுது பிலாத்து, இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். மறுபடியும் வெளியே வந்து நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு இதோ உங்களிடத்தில் இவனைக் கொண்டு வருகிறேன் என்றான். இயேசு முள்முடியும் சிவப்பு அங்கியும் தரித்தவராய் வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி இதோ, இந்த மனுஷன் என்றான்.

பிரதான ஆசாரியரும், சேவகரும் அவரைக் கண்ட போது, சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து நீங்களே கொண்டு போய்ச் சிலுவையிலறையுங்கள், நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான். யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக எங்களுக்கு ஒரு நியாயப் பிரமாணம் உண்டு. இவன் தன்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே இவன் சாகவேண்டும் என்றார்கள். பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது அதிகமாய்ப் பயந்து மறுபடியும் அரண்மனைக்குள்ளே போய் இயேசுவை நோக்கி, நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து, என்னோடே நீ பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையிலறைய எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலை பண்ணவும் எனக்கு அதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா? என்றான்.

இயேசு பிரதியுத்தரமாக பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப் படாதிருந்தால் என் மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு அதிகப் பாவமுண்டு என்றார்.

அது முதல் பிலாத்து, அவரை விடுதலை பண்ண வகை தேடினான். யூதர்கள் அவனை நோக்கி இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்கு சிநேகிதனல்ல. தன்னை ராஜவென்கிறவனேவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டுக் கூறினார்கள். பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டு, இயேசுவை வெளியே அழைத்து வந்த தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரேயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தார்கள்.

அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும், ஏறக்குறைய ஆறாம் மணி நேரமாயிருந்தது. அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி இதோ உங்கள் ராஜா என்றான். அவர்கள் அவனை அகற்றும்

அகற்றும்; சிலுவையில அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து உங்கள் ராஜாவை நான் சிலுவையிலறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள் [யோவான் 19:1-15]

''கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தினத்தினாலே பிரயோசனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி ஜனங்களுக்கு முன்பாக கைகளை கழுவி இந்த நீதிமானுடைய இரத்தப் பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்.

அதற்கு ஜனங்களெல்லாரும் இவனுடைய இரத்தப் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள். அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்காக விடுதலையாக்கி இயேசுவை வாரினால் அடிப்பித்து சிலுவையில் அறையும் படிக்கு ஒப்புக் கொடுத்தான்.[மத்தேயு 27:24-26]

எழுநூறு ஆண்டுப் பழமையான தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று

பரிசுத்தாவியானவரின் ஏவுதலால் இயேசுக்கிறிஸ்துவின் பாடு, மரணத்தை ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவுக்கு எழுநூறாண்டு காலத்திற்கு முன்னரே முன்னுரைத்திருந்தார்.

ஏசாயா எழுதின புத்தகம் 53:3-8ம் வசனங்களில் இதைத் தெளிவாகக் காணலாம்.

''அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக் கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடுகள் அனுபவித்த வருமாயிருந்தார். அவரை விட்டு அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற்போனோம்.

அவர் மெய்யாகவே நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு சிறுமைப் பட்டவர் என்று எண்ணினோம்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்ட நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு ஆக்கிளை அவர்மேல் வந்தது. அவருடைய தகும்புகளால் குணமாகிறோம்.

நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித்திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். அவர் நொறுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டு போகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக் கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும், நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார் : அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும். ஜீவனுள்ளோருடைய தேசத்தில் இருந்து அறுப்புண்டு போனார். என் ஜனத்தின் மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்''.

## விசாரணையை திரும்பவும் நோக்குவோம்.

இரவில் சனகரீம் சங்கத்தின் விசாரணையினாலும், அவரது பாதுகாவலர்களினால் இடிக்கப்பட்டதினாலும் இயேசு முற்றிலும் களைப்படைந்தவராயிருந்தார். ஏசாயா 52:14ல் கூறப்பட்டபடி ''மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய ரூபம் அந்தக்கேடு அடைந்தது....''

அவர் ரோம தேசாதிபதியாகிய பிலாத்துவின் முன்னர் கொண்டு வரப்பட்டார். அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சாட்சியங்கள் முதலில் குற்றப்படுத்தமுடியாதவைகளயாயிருந்தன. எப்படியாவது அவரை விடுதலை செய்துவிட வேண்டும்; ஏனெனில் பொறாமையினால் தான் அவரைப் பிடித்தார்கள் என்று பிலாத்து எண்ணினான். பிலாத்துவின் இந்த முயற்சிகளினால் பின்னடைவு கண்டவர்களாய், யூதத்தலைவர்கள் இறுதியில் உண்மையை ஒத்தக்

கொண்டார்கள். ஏனெனில் அவர்தம்மை தேவ குமாரன் என்று கூறினார். அவர் தேவகுமாரன் என்ற வாசகத்தைக் கேட்ட போது, போலித்தனமான கடவுள் பயத்தைக் காட்டிய சனகரீம் சங்கத்தாரை பார்த்து பிலாத்து பயந்தான். அவரிடத்தில் மீண்டுமாக ''நீ எங்கேயிருந்து வந்தவன்''? என்று வினவினான்''. இதிலிருந்து, அவர் மரண ஆக்கினைத்தீர்ப்புப் பெற்றது அவர் தேவகுமாரன் என்ற தால் தான் என்பது தெளிவாகிறது. அந்த விசாரணையில் வேறு எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை.

அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று பிலாத்து எண்ணியது முடியாமற்போயிற்று. ஏனெனில், யூதத்தலைவர்கள் மிகுந்த வைராக்கித்துடன் குற்றஞ்சாட்டவும் மக்களைத் தூண்டி விட்டு கூக்குரலிடவும் செய்தார்கள். தன்மீது எந்தப் பழியும் வராதிருக்க மெய்யாகவே தண்ணீரை எடுத்து கைகழுவினான். பின்னர் யூதசங் கத்தினரிடம் அவரை இம்சிக்கவும், அவர்களின், கூக்குரலுக்கு பயந்து ஆக்கினைக்கும் ஒப்புக் கொடுத்தான்.

அந்நேரம், இயேசு ஏறக்குறைய 30 மணிநேரம் நித்திரையில் லாதவராக இருந்தார். தேவாலயம் பாதுகாவலர்களால் பாடுகளுக் குட்பட்டார். பின்னர் ரோமப் போர்ச் சேவகர்களிடம் ஒப்படைக்கப் பட்டார். ஏளனம் செய்யும்படிக்காக அவரது ஆடைகளைக் களைந்து போட்டு வாரினால் அடிக்கப்படும்படி சவுக்கடி மரத்தில் கட்டப் பட்டார். [ஒரு ரோமப் போர்ச் சேவகரின் கசையடிகள் என்பது கொலைவெறித்தாக்குதல் போன்றது. இந்தச் கசை பல வாரினால் சேர்க்கப்பட்டு, அதன் நுனியில் இரும்புத்துண்டுகள் இணைக்கப் பட்டுமிருக்கும்.] அந்தக் கசையின் அடிகள் மாறிமாறி விழுந்ததன் காரணமாக பிய்த்தடுக்கப்பட்ட மாமிசப்பிண்டம் போல இயேசு காட்சியளித்தார். கசையடிகள் கொடுக்கப்பட்டு முடிந்த போது, அவர் தன்னிலை இழந்தவராகவே இருந்தார். இயேசு தமது விசாரணையின் போது தாம் யூதருக்கு ராஜாதான் என்று கூறியதை வைத்துக் கொண்டு அவரை நிந்தித்து பரிகாசம் பண்ணினார்கள். சிவப்பான அங்கியை அவருக்கு உடுத்துவித்து, முள்ளுகளினா

லான ஒரு முடியைச் செய்து அவரது தலையின்மேல் வைத்து, கையில் செங்கோல் என்று ஒரு வெறுங்கோலைக் கொடுத்தார்கள்.

போர்ச் சேவகர்கள் அவருக்கு முன்பாக வணங்கி "யூதருக்கு ராஜாவே வாழ்க" என்று பரிகாசம் பண்ணினார்கள். கன்னத்தில் அறைந்து, முகத்தில் துப்பி கையிலிருந்த கோலைப் பிடுங்கி அவர் தலையின் மேல் அடித்தார்கள்

ஆயிரக்கணக்கான காயங்களால் பிய்த்தெடுக்கப்பட்ட அவரது சரீரம் மிகுந்த வேதனைக்குள்ளானது. மென்மையான தலையின் மீதிருந்த தோலில் முள்முடி குத்தியதால் தாங்க முடியாத வேதனை உண்டானது. இரத்தம் ஆறாய் வடிந்தது. இரத்தம் சேதமடைந்ததாலும், சரீரத்திலுள்ள குடிக்காத்தினாலும் அவரது பலவீனமான சரீரம் மேலும் பலவீனமடைந்தது.

சிலுவை அவர் தோளின் மீது வைக்கப்பட்ட போது, இந்தப் பாரமான சிலுவையை சுமந்து கொண்டு நகருக்கு வெளியேயுள்ள குற்றவாளிகள் சிலுவையிலறையப்படும் மலைக்குச் செல்வதென்பது அவரால் முடியாதகாரியமென்று ரோம நூற்றுக்கதிபதிகள் உணர்ந்திருந்தனர்.

## *கொல்கதாவை நோக்கி*

சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு இயேசுவின் சிலுவையைச் சுமக்கும் படி அவனை பலவந்தம் பண்ணினார்கள். கபால ஸ்தலம் என்று அர்த்தங் கொள்ளும் கொல்கதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்த போது, கசப்புக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவரதை ருசிபார்த்து குடிக்க மனதில்லாதிருந்தார்.

அவரைச் சிலுவையிலறைந்த பின்பு அவர்கள் குலுக்குச் சீட்டெழுதிப்போட்டு அவரது வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். "என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின் பேரில் சீட்டுப் போட்டார்கள்" என்று கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும் படி இப்படி நடந்தது. அங்கே அவர்கள்

உட்கார்ந்து அவரைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். [மத்தேயு 27:32-36]

அப்பொழுது இயேசு : “ பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்றார். அவரடைந்த ஆக்கினையின் முகாந்திரத்தைக் காண்பிக்கும் பொருட்டு “இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி அவர் சிலுவைக்கு மேலாக வைத்தார்கள். அப்பொழுது அவரது வலது பக்கத்தில் ஒருவனும், அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டார்கள். அந்த வழியில் நடந்து போகிறவர்கள் தங்கள் தலையைத் துலுக்கி; “தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள். நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையை விட்டு இறங்கிவா! என்று அவரைத்தூஷித்தார்கள்.

அந்தப்படியே பிரதான ஆசாரியரும், வேத பாதகரும், மூப்பரும் பரியாசம் பண்ணி, “மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சிக்கத் திராணியில்லை; இவன்இஸ்ரவேலின் இராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும்; அப்பொழுது இவனை விசுவாசிப்போம்” என்றனர். “தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே அவர் இவன்மேல் பிரியமாய் இருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்ட்டும் என்றார்கள். [மத்தேயு 27:37-42]

## *விசுவாசித்த கள்ளன்*

இருகள்ளர்கள் அவருடனே அறையப்பட்டார்கள். “அன்றியும் சிலுவையிலறைப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன், உன்னையும் எங்களையும் இரட்சித்தக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி “நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்கப் பயப்படுகிறதில்லையா? நாமே நியாயப்படி தண்டிக்கப் பட்டிருக்கிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்.

இவரே தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்து கொண்டு, இயேசுவை நோக்கி, ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். ''இயேசு அவனை நோக்கி ''இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன்'' என்றார்.

*மரியாளுக்குக் கூறிய இறுதி வார்த்தைகள்*

இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி இலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு தம்முடைய தாயை நோக்கி ''ஸதிரீயே, அதோ உன் மகன் என்றார், பின்பு அந்தச் சீஷனை நோக்கி அதோ உன் தாய் என்றார்''அந்த நேரம் முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான்.

*என்தேவனே, என் தேவனே...*

ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு ''ஏலி ஏலி லாமா சபக்தானி ''என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு ''என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கை விட்டீர்''என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்ட பொழுது இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்.'' என்றார்கள்.

உடனே நின்றவர்களில் ஒருவன் ஓடி கடற்காளானை எடுத்து காடியில் தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி அவருக்கு குடிக்கக் கொடுத்தான். மற்றவர்களோ ''பொறு எலியா இவனை இரட்சிக்க வருவானோ பார்ப்போம்'' என்றார்கள். [மத்தேயு 45-49]இயேசு காடியை வாங்கின பின்பு '' முடிந்தது'' என்று சொல்லி தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார். [யோவான் 19:30, லூக்கா 23:46, சங்கீதம் 31:5]

அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரை யடைந்த அநேக பரிசுத்தவான்களின் சரீரங்களும் எழுந்திருந்தது. அவர்கள் உயிர்த்தெழுந்த பின்பு இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டு பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப் பட்டார்கள்.

நூற்றுக்கு அதிபதியும் அவனோடே கூடக் காவல்காத்திருந் தவர்களும் பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு மிகவும் பயந்து ''மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.[மத்தேயு 27:51-54]

அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்தநாளாயிருந்த படியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளில் சிலுவைகளில் இராத படிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய் அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும் உடல்களை எடுத்துப் போகும் படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள்.

அந்தப்படி போர்ச் சேவகர் வந்து அவருடனே கூடச் சிலுவை யிலறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும், மற்றவ னுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவி னிடத்தில் வந்து அவர் மரித்திருக்கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும், போர்ச் சேவகரில் ஒருவன் அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான். அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. நீங்கள் விசுவாசிக்கும்படி நான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்.

அவருடைய எலும்புகளிலொன்றும் முறிக்கப்படுவதில்லை என்ற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.

இவைகளுக்குப் பின்பு அரிமத்தியா ஊரானும் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு, இயேசுவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான். பிலாத்து உத்தரவு கொடுத்தான்.ஆகையால் அவன் வந்து சரீரத்தை எடுத்துக் கொண்டு போனான்.

ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கோதேமு என்பவன் வெள்ளைப் போளமும், கரிய போளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான். அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அவரைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலை களில் சுற்றிக் கட்டினார்கள்.

அவர் சிலுவையிலறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும் அந்தத் தோட்டத்தில் ஒருவனும் ஒருக்காலும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையுமிருந்தது. யூதருடைய ஓய்வு நாளின் ஆயத்த நாளாயிருந்தபடியினாலும் அந்தக் கல்லறை சமீபமாய் இருந்தபடியினாலும், அவ் விடத்திலே இயேசுவை வைத்தார்கள். [யோவான் 19:31-42]

### சிலுவையில் அறையப்பட்ட விவரங்களை மீண்டும் காண்போம்

சிலுவை மரணமாகிய இந்த உன்னத அனுபவம் நடைபெற்று ஈராயிரமாண்டுகள் ஆகிவிட்டதாலும், சிலுவையின் மேன்மையைக் குறித்து நாம் பலமுறை கேட்டு கற்றதினாலும், இயேசுநாதருக்குப் பிலாத்து, மரணத் தீர்ப்புக் கூறியது முதல் கல்லுகளினால் வெட்டப்பட்டிருந்த யோசேப்புவின் கல்லறையில் அவரது சரீரம் வைக்கப்பட்டு கல்லால் மூடப்பட்டது வரையில் பார்க்கும்போது அத்தோடு இயேசுநாதரின் வரலாறு முடிந்துவிட்டது போலக் தோன்றுகிறது.

கொல்கொதா மலைக்குச் சிலுவையைச் சுமந்து சென்ற உள்ளத்தையுருக்கும் சோக நிகழ்ச்சியில் எந்த மகிமையும் இல்லை.

இயேசுநாதர் அதுவரை பலமணி நேரங்கள் நின்று கொண்டேயிருந்தார். தண்ணீரோ உணவோ கொடுக்கபடவில்லை. யூதர்களால் அடிக்கப்பட்டார். ரோமர்கள் வாரினாலடித்தார்கள். அந்தச் சவுக்கு கொடுமையான வேதனையைத் தரக்கூடியதாகவும், மரணம் சம்பவிக்காதபடியான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கசையடிகள் தன் கொடூரக் கொடுமையைச் செய்திருந்தது. அவரது சரீரமும், முகமும் நொறுக்கப்பட்டு, வீங்கிப் போயிருந்தது. அவரை அடையாளம் கூடக் கண்டு கொள்ள முடியாதபடி விகாரப்படுத்தியிருந்தது. கசையடிகள் அவரை மயக்கமடையச் செய்திருந்தது. அவரது சரீரத்திலிருந்தும், முள்முடி கிழித்து தலைக் காயங்களிலிருந்தும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. உறைந்து போன இரத்த்தின் மீது ஈக்களும், பூச்சிகளும் வந்து ஒட்டிக் கொண்டன.

கபால ஸ்தலம் என்ற அந்த இடத்தில் இயேசுவின் சரீரம் சிலுவையின் மீது கிடத்தப்பட்டு, ரோம வீரர்களால் அவரது கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டது. பின்பு சிலுவையில் அறையப்பட்டு, சிலுவையில் தொங்கும்படியாக அந்தச் சிலுவை நேராக நிறுத்தப்பட்டது. முழுச் சரீரத்தின் பாரத்தையும் இரு கைகளில் அடிக்கப்பட்ட இரண்டு ஆணிகளே தாங்கின. அவரது ஒரு பாதம் மற்றொரு பாதத்தின் மீது வைக்கப்பட்டு முழங்கால்கள் சிலுவை மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்ட பின் ஒரே ஒரு ஆணியினால் அறையப்பட்டது.

நாம் சிலுவைக் காட்சியைப் படங்களில் பார்க்கும்போது, இரு கைகளையும் விரித்து நேராக நிற்பது போன்ற ஒரு அமைதியின் வடிவம் தெரிகிறது. ஆனால் அதைப் பற்றிச் சிறிது சிந்திப்போமானால் தான் அதன் உண்மை நிலைகள் புரியும்.

இரண்டே ஆணிகளினால் தொங்கும் சரீரத்தின் பாரத்தினால் கைகளில் வேதனை நிறைந்த தசைப்பிடிப்பு ஏற்படும். மார்புத் தசைகளும் இழுக்கப்படும். அந்தத் தசைகள் இழுக்கப்படுவதினால் நேரம் ஆக ஆக உணர்ச்சியற்றுப்போகும். அதனால் மூச்சு விட முடியாத நிலையுண்டாகிவிடும். சுவாசிக்க முடியாமல் உயிர்

இருப்பது எப்படி. சுவாசித்தல் என்பது தானே இயங்குவதால் மூச்சு உள்ளிழுக்கும்போது, தன் கால்களை சிலுவை மரத்தில் உந்தி மார்பை உயர்த்த வேண்டி நிலை விட்டு விட்டு மூச்சுவிட வேண்டியதாகும். வேதனையோ சரீரம் முழுவதும் பாய்ந்து செல்லும் வேதனையோ வேதனை

**நொறுக்கப்பட்ட சரீரம் மொய்த்திடும் ஈக்களின் தொல்லை.**

தாங்கமுடியாத வேதனையால் உடல் துடிக்கும் துடிப்பு, வலியோடும் வேதனையோடும் நடத்தும் போராட்டம். வேதனை வேதனை இடைவெளியில்லாத வேதனை.

போர்ச்சேவகர்கள் அவருடைய ஆடைகளுக்காக குலுக்குச் சீட்டுப் போட்டார்கள். தங்கள் கடமையின்படி காவலிருந்தார்கள். சிலுவையில் அறையப்பட்டவர்களின் இறுதி நேரம் வரக் காத்திருந்தார்கள்.

ஆசாரியர்களும் ஜனக்கூட்டதினரும் இதைக் கண்ணுற்ற போதிலும், அமைதி காக்கவோ, கவலைப்படவோ இல்லை. ‘‘அவர்கள் ஏச்சுப்பேச்சுக்கள் எங்கும் எதிரொலித்தது. நீ தேவனுடைய குமாரனேயானால் இறங்கி வா’’ என்று பரிகாசம் பண்ணினார்கள். அவர் தேவனுடைய குமாரனாக சிலுவையி லிருந்து கீழே இறங்கி வந்து தமது வல்லமையை நிரூபிக்க இதுவே நல்ல தருணம். அப்படி நிகழ்ந்திருந்தால் அந்தக் கூட்டமே வியந்திருப்பார்கள். அப்போது, அவர் தேவகுமாரன்தான் என்று விசுவவசித்துமிருப்பார்க்ள்.

இந்த ஏளனப் பேச்சுக்களில் இயேசுவின் இரண்டு பக்கங்களிலும் இருந்த இரு கள்வர்களும் கலந்து கொண்டனர். ஆனால், அவர்களில் ஒருவனது பேச்சு மாற்றம் அடைகிறது. இயேசுவைக்குறித்து அவன் எப்படி அறிந்தான் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் பேசிய பேச்சுக்களில் இயேசுவைக் குறித்து நிறைய அறிந்திருந்ததற்கான எல்லா விவரமும் இருந்தது.

அதன் காரியத்தைப் பார்ப்போம். இயேசு பிடிக்கப்பட்டபின் அவரது சீஷர்களுக்கு, அவரது ஊழியக்காலம், அவரின் தெய்வத்துவம், எதிர்பார்த்துக் கொண்டிருந்த பரலோக ராஜ்யம் எல்லாம் நழுவிப் போய்விட்டது. அவருடனிருந்த அவர்களுக்கு இவைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஆனாலும், இயேசுவின் மரணம் இவை எல்லாவற்றையும் அவர்களின் எண்ணத்திலிருந்து அகன்றுவிட்டதே. அவர்களது கோழைத்தனத்தினால் விசுவாசமற்ற வர்களாகி யோவானைத் தவிர மற்ற எல்லாரும் கொல்கொதா மேட்டில் இருந்து விலகிப போனார்கள்.

அத்தகைய விவரிக்க முடியாத நிலையிருந்த நேரத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து ஒருவனுடைய விசுவாசம் பிகாசிக்க ஆரம்பித்தது. தனது குற்றச செயலகளுக்காக மரண தண்டனையை சிலுவையில் அனுபவித்துக் கொண்டிருந்த ஒருவன் அடிக்கப்பட்டு, இரத்தம் தோய்ந்த நிலையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவை, ''ஆண்டவரே'' என்றழைக்கிறான். அந்த விவரிக்கமுடியாத கொடுமை நிறைந்த நிலையில் இயேசுவிடம் தெய்வத்துவத்தை அவன் எப்படிக் கண்டுகொண்டான். இயேசுவைப் பற்றி என்ன காரியங்களை அறிந்து கொண்டான். தன் வாழ்கையில் எவற்றை அனுபவித்திருந்தான் ''ஆண்டவரே'' என்று எதைக் கொண்டு அவன் அவரை அழைத்திருக்கக்கூடும்.

''உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனையும் நினைந்தருளும் என்று கூறினானே' மரித்துக் கொண்டிருக்கும் இயேசுவிட மிருந்து ஒரு எதிர்கால இராஜ்யம் உண்டென்று அவன் எப்படியறிந்தான்? அத்தகைய உணருதலும், விசுவாசமும் அவனுக்க எங்கிருந்து வந்தது? இருவருமாக மரித்துக் கொண்டிருக்கும் இந்த வினோதவேளையில் இத்தகைய வார்த்தை கள் எப்படி வந்தது. இது போன்றதொரு சம்பவம் வேதாகமத்தில் வேறெங்குமில்லை.

அவனது விசுவாசத்தைக் கண்ட இயேசு தமது இறுதி மூச்சு நிற்பதற்கு முன்னால் அவனோடு பேசிய பேச்சுக்கள்

எவ்வளவு விசுவாசத்தையும் தெம்பையும் அளித்திருக்கும் என்று பாருங்கள். அவனிடம் இயேசு : ''இன்றைக்கு நீ என்னுடனே கூடனுப்பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்றல்லவா சொன்னார்.

நடுப்பகல் தொடங்கி பிற்பகல் மூன்று மணிவரை உலகமே அந்தகாரமடைந்தது. [இதற்குச் சரித்திரச் சான்றுகளுண்டு] அந்த இருளான நேரத்தில்தான் இயேசு : ''பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே''. என்று ஜெபித்தார். தமது தாயாரிடத்தில் பேசினார். யோவானிடத்தில் தமது தாயாரை ஒப்படைத்துப் பேசினார்.

அவரது வேதனையின் இறுதியில் : '' என்தேவனே என்தேவனே ஏன் என்னைக் கை விட்டீர்'' என்று உரத்த குரலில் சொன்னார். இது சங்கீதப் புத்தகம் இருபத்தி இரண்டாம் அதிகாரத்தில் தாவீது ராஜனால் அகிலேத் ஷகார் என்னும் இராகத்தில் ஒப்புவிக்கப் பட்டுள்ளது.

சங்கீதம் இருபத்தியிரண்டு ஓர் தீர்க்கதரிசன சங்கீதமாக விளங்குகிறது. இயேசுநாதரின் சிலுவை மரணத்தைப் பற்றி உரத்த குரலில் தொடங்குகிறது. அவருக்கு கைவிடப்பட்ட நிலை எப்படியானது? அப்போது அவர் என்ன உணர்ந்தார்? அவர் விசாரிக்கப்படும் போது நடைபெற்றவைகளும், சிலுவை மரணமும் கடவுளின் முன்னறிவின் பாற்பட்டதுவே! இவையெல்லாம் கூட இரட்சிப்புத்திட்டத்தின் அம்சங்களே. உலகத்தோற்றத்திற்கு முன்னமே தீட்டப்பட்ட திட்டங்களே இவைகள். [வெளிப்படுத்தின விசேஷம் 13:4-8]

**அவர் கைவிடப்பட்டிருந்தாரே அது எப்படி? இதை தெளிவு படுத்த உள்ள விவரங்களை இப்போது பார்ப்போம். கடவுளின் குடும்பத்திற்குள், ஆவிக்குள்ளாக ஒருமனிதன் கடவுளின் பிள்ளையாகப் பிறக்கும்போது, அவனது மனதில் ஆவியானவர் வாசம் பண்ணுகிறார். [ 1 கொரிந்தியர் 6:19]**

ஆவியானவரைத் துக்கப்படுத்தக் கூடாதென்று எச்சரிக்கப் படுகிறோம். [எபேசியர் 4:30] ஆவியை அணைத்துப் போடும் [1தெசலோனிக்கேயர் 5:19] நாம் பாவஞ்செய்கிற தினால் ஆவியானவர் நம்மை விட்டு எடுபட்டுப்போவார். [ எபிரெயர் 10:25-29, 6:4-8, 2கொரிந்தியர் 13:5]

இயேசு வானவர் எல்லாவற்றிலும் தம் சகோதரரைப் போலானார். அவரது ஜீவியத்தில் நம்மைப் போல சோதிக்கப்படும் பாவமில்லாதவராகயிருந்தார். தேவக்குடும்பத்தில் முதல் பேறானவரானபடியால் ஆவியின் நிறைவை அளவில்லாது பெற்றிருந்தார். அவர் நடப்பித்த எல்லா அற்புத அடையாளங்களும் பிதாவின் அதிகாரத்தினாலும் பரிசுத்தாவியானவரின் துணையோடு செய்து வந்தார். அவர் நீதியின் படி பிதாவுடன் கொண்டிருந்த ஐக்கியம், மெய்யானதும் பூரணமடைந்ததாயுமிருந்தது. மரணத்தில் அவர் பாவமாக்கப்பட்டார்.

நமது பாவங்கள் அவர் மீது போடப்பட வேண்டியகாலம் அப்போது ஏற்பட்டது. நமது பாவங்கள் அவர்மீது போடப்படும் போது- திரளானபாவம் அவர் மீது குவியும் போது பரிசுத்தாவியானவர் அவரிலிருந்து அகற்றப்படுகிறார். இப்போது, தாம் முற்றிலுமாகக் கைவிடப்பட்டவராக உணர்ந்து, ''என் தேவனை, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று அவர் சத்தமிட்டுக் கதரினார். தேவப் பார்வையும், பரிசுத்தாவியானவரின் நடத்துதலும், தமக்கில்லாமல் தனித்து விடப்பட்டவரான நிலைக்கு ஆளாகிறார். தானாக தனித்திருந்து, மனித குலத்தின் பாவத்திற்காக மனித குமாரன் மரிப்பதைக் காண்கிறோம்.

இறுதியாக '' நான் தாகமாயிருக்கிறேன்'' என்றார். தேவன் தமக்கு எவற்றிற்கெல்லாம் அதிகாரம் அளித்தாரோ அவற்றை யெல்லாம் செய்து முடித்தார். [யோவான் 10 : 18] ஜீவியத்தின் மீது தமது அதிகாரத்தைச் செலுத்தினார். தாம் கீழ்ப்படிந்தவராக, பிதாவே என் ஆவியை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறேன் என்றார். இரட்சிப்பின் வேலை முற்றுப்பெற்றதைக் காட்டும் வகையில்'' முடிந்தது ''என்று கூறி தமது தலையைச் சாய்த்து ஜீவனை விட்டார்.

## சரீரப் பிரகாரமான மரணம் மட்டும் போதுமானதா?

இந்த தியாகபலியானது காலத்திற்கரிய காரியம் என்று சாதாரணமாக அனைவராலுமே சொல்லப்படுகிறது. இயேசுக் கிறிஸ்து நமக்காக மரித்தார் என்று மிக எளிதாகச் சொல்லி விடுகிறோம். ஆனால் அதுகுறித்த முழுத்தோற்றத்தையும் எந்த அளவுக்கு அறிந்து உணர்ந்திருக்கிறோம். நித்தியமானவரும் ஆவிக்குரியவரும் பாவமற்றவருமான இறைவன் தாம் நேசிக்கும் தமது படைப்பை விட்டு பிரிக்கப்படுகிறார். கடவுளுக்கு எதிராகச் செயல்பட்ட மனிதன் சரீர, ஆவிக்குரிய பாவங்களால் கறைபட்டு இருக்கிறான். அந்தப் பாவங்களிலிருந்து தனது ஆத்துமாவை விடுவித்துக்கொள்ள வகையில்லாதவனாக இருக்கிறான்.

இந்தக் காரியத்தில் இறைவனுடைய கரங்களும் கூட கட்டப்பட்டே இருக்கிறது. பாவத்தைக் தண்டியாமல் விட்டு விட்டால் அது இறைத்தன்மைக்கே புறம்பானதாகிவிடும். மாற்ற முடையவராகத் தோன்றும். ஆனால், இறைத்தன்மையால் என்றும் மாறாதவர். அவரது அன்பான சுபாவம் மன்னிப்பை வழங்கயே வாஞ்சிக்கிற. ஆனால், மனிதம் கடவுளுக்கு எதிராகச் செய்த பாவங்களுக்கு பரிகாரம் செய்தாகவேண்டும் என்று கடவுளின் நியதி இருக்கிறது.

மனிதன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக எதையும் கொடுக்க இயலாததால், அவன் நிராதவுள்ளவனாகிறான். எனவே, மனிதனுக்கு மன்னிப்பு வழங்கவேண்டுமானால், அதற்கென ஒரு வழி கண்டாக வேண்டும்.

## தேவன் வழங்கிய தீர்வு

எனவே வார்த்தையானவருக்கு வடிவம் [சரீரம்] ஒன்று ஆயத்தம் செய்யப்பட்டத. அவர் உலகில் வடிவம் [சரீரம்] ஒன்று ஆயத்தம் செய்யப்பட்டது. அவர் உலகில் பிறந்து, சரீரத்தில் [மாம்சத்தில்] முப்பத்து மூன்று ஆண்டுகள் ஜீவித்தார். பிறகு அந்தச்

சரீரம் வேதனையோடு சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டது. சகலவற்றிற்குமாக ஒரேஒருமுறை கிரயம் செலுத்தப் பட்டுவிட்டது. எவர்கள் இதை ஒப்புக்கொள்கிறார்களோ அவர்களுக்கு மன்னிப் பருளப்படும்.

மற்றும், வேறு சில வினாக்களை எழுப்பி, அதன் மூலம் மேலே பார்த்த காரியத்தை இன்னும் சற்று விரிவாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்வோம்.

மனிதனைக் கறைப் படுத்திய பாவம், சரீரப் பிரகார மானதும், ஆவிக்குறியதுமாகும். அதன் விளைவு, சரீரப் பிரகாரமான பாடுகளும் மரணமும் உண்டாயிற்ற. அதே நேரத்தில் பாவம் தேவனிடமிருந்து மனிதனை பிரித்து வைத்து நித்திய மரணத்தை உண்டாக்கியது.

தேவ நீதி பாவத்திற்கு ஈ.டு. செய்யும் வகையில் ஒரு கிரையம் [பரீகாரம்] கேட்கிறது.

வார்த்தையானவர் பரலோக மகிமையைத் துறந்து முப்பத்து மூன்றாண்டுகள் இவ்வுலகில் இருந்தார்; சரீர மரணத்தை ருசி பார்த்தார். ஆனால், அவர் [ வார்த்தையானவர்] நித்திய காலமாய் வாழ்கிறவராக இருக்கிறார். அவருக்கு ஆரம்பமுமில்லை; முடிவு மில்லை. சரியானபடி பார்த்தால், அவர் தமக்கென்று ஆயத்தம் செய்யப்பட்ட சரீரத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகள் மாத்திரமே வாழ்ந்ததானது அவரது நித்தியகாலத் தன்மைக்கு எம்மாத்திரம் வேதனைகள் நிறைந்ததானது சிலுவை மரணம். மரணம் என்பது சரீரத்திலடங்கியுள்ள உயிரை வெளியேற்றும் ஒரு வாயில். நித்தியத்தின் ஒரு துளி சரீரப்படி வாழ்ந்து பின்னர் பாடுள்ள இந்தச் சரீரத்தை விட்டொழித்தது தான் இந்தத் தியாகமா? அப்படியானால் இது வெறும் அடையாளம் மட்டும் தானோ?

பாவமானது, மனிதனைக் கடவுளிடமிருந்து பிரிக்குமளவுக்கு பயங்கரமானதாயிருக்கிறது. ஒரு அடையாளமான ஒரு பலியினால் அவ்வளவு பயங்கரமான பாவத்தை அழித்து ஒழித்து விட இயலுமா? சரீர மரணம் ஆவிக்குரிய வாழ்வுக்கு மாற்றாக முடியுமா?

மன்னிப்பின் அடிப்படையில் வாழும் தம் மக்களைப் பார்த்த தேவன், ''நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்...'' [ரோமர் 12:1] ஆவிக்குரியதும் சரீரப்படியுமான நம்மை பூரணமாகக் கொடுக்கவேண்டும் என்று இறைவன் கேட்கும் பொழுது, அடையாளமாகச் செலுத்தப் பட்ட அந்த தியாகபலி, எப்படிப் போதுமானதாக ஆக முடியும்.

இயேசுவானவர் தெய்வம்; மனிதருக்காக மரிக்கிறார்; எனவே கடவுளின் பார்வையில் ஏற்றுக் கொள்ளத்தக்கது தான் என்று சிலர் கூறலாம். ஆனால் தெய்வம் மரித்தாரா? மரிக்கத்தான் கூடுமா? இல்லை அது நடைபெறாது. கிறிஸ்துவின் சரீரம் ஆவிக்குரிய வகையில் மரிக்கவில்லையென்றால், அந்தத் தியாகத்தால் யாருக்கு என்ன என்று கேட்கத் தோன்றுகிறது.

ஒரு வண்ணத்துப் பூச்சி தனக்கு வாசஸ்தலமாகக் கிடைக்கப் பெற்ற கூட்டினை தள்ளி விட்டு வெளியே வந்து விட்டால் அந்தக் கூட்டை இழந்தது, ஓர் தியாகமாகக் கருத முடியுமா? அவ்வாறே கிறிஸ்துவின் தியாகபலி, ஒரு சரீரப் பிரகாரமானதாக மட்டுமிருந்தால், நமது இரட்சிப்புக்காக என்ன பெரிய காரியம் நடந்துவிட்டது? யாருக்கு என்ன இழப்பு?

சரீரப்படி செய்யப்பட்டதான ஒரு பலி, தன் எல்லை கடந்து ஆவிக்குரிய நிலையில் பாவ விமோசன பலியாக ஆகிவிட முடியுமா? சரீரப்பிரகாரமானது ஆவிக்குரியதற்குப் பதிலாகக் கொடுத்துவிட முடியுமா? அது சாத்தியமல்ல. ஏனெனில் தற்காலிகமானது, அழிவற்ற தன்மை கொண்டதற்கு ஈடாகி விட முடியாது.

## கட்டுப்படுத்தும் மரணம்

கிறிஸ்து நமக்காக மரித்தார் என்று சொல்லுகிறோம். உண்மையிலேயே அவர் மரித்தார்.

ஒருவருக்குக் காய்ச்சல் வருகிறது என்றால் அது, சரீரத்தில் ஏற்பட்டுள்ள வேறொரு கோளாறை வெளிக்காட்டும் ஒரு

கருவிதான். அதுபோல கிறிஸ்துவின் மரணம் இறைத் தன்மைக் குள்ளாக நடைபெற்றதான ஆழமான ஒன்றுக்கு அது அடையாள மானதேயாகும். அப்படியானால் இது யாது...? ''பாவத்தின் சம்பளம் மரணம்'' [ரோமர்–6:23]

அப்போஸ்தனாகிய பேதுரு எழுதின முதலாம் நிருபத்தில் ''.... அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்....'' [1பேதுரு 2:24] என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

2கொரிந்தியர் 5:21ல் காணும் விளக்கத்தின் வசனப்படி ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப்பாவமாக்கினார்''.

''கர்த்தரோ நம் எல்லாருடைய அக்கிரமங்களையும் அவர் மேல் விழப்பண்ணினார்''. [ஏசாயா 53:6]

இந்த வசனங்கள் யாவும் வேதாகம மாணவர்கள் அனைவருக்கும் தெரிந்தவைகளே. ஆனால் அவை கூறுவன யாது? நமது பாவங்கள் அவர் மீத எப்படி மாற்றப்பட்டது? எவ்வாறு அவர் நமக்காக பாவமானார்? நாம் எல்லாரும் அவருக்குள் எவ்வாறு நீதிமான்களாகிறோம்?

இயேசுக் கிறிஸ்து பாவியானாரா? அல்லது நமக்காகப் பலியானார் என்று வசனம் கூறுகிறதா? இது ஒரு அடையாளமாகச் செலுத்தப்பட்ட பலிதானா?

இயேசுக் கிறிஸ்து பாவியானார் என்று வேதம் கூறுவதில்லை. அவர் பாவி என்று பொருள் விளங்கும்படி அவர் பாவம் செய்யவில்லை. ஆனாலும் அவர் பலியாகச் செலுத்தப்பட்ட சரீரத்தைவிட மேலானவர். மனிதன் ஒரு தட்டிலும் கிறிஸ்து ஒரு தட்டிலும் துலாக் கோலில் நிறுத்தப்பட்டது போலிருக்கிறது. அவருக்குள் நாம் பெற்றுக் கொள்ளும் நீதி மெய்யானது. அதுபோல நமது அக்கிரமங்கள் சுமத்தப்பட்டு அவர் பாவமானதும் இருமடங்கு உண்மையே. ஏன் அப்படி என்று கேட்போமானால் கடவுளின்

தன்மை அப்படி. அதாவது அவருடைய பிரசன்னத்தில் பாவம் நிற்கக் கூடாதே. மரணத்தால் மட்டுமே பாவம் தண்டிக்கப்பட முடியும். கறைபட்ட மனிதன் தெய்வத்துக்கு முன்னர் நிற்க முடியாது. அப்படியானால் நாம் எப்படி கடவுளுடைய பிள்ளை களாவது? அவர் நமக்கு கொடுக்கிறதான நீதியினால் மட்டுமே யாகும். அவரது நீதி இறைவனுடைய பார்வைக்கு இரத்தத்தில் தோய்க்கப்பட்டதும், பரிசுத்தமாக்குகிறதுமான ஆடையாகத் தெரிகிறது.

''அவருக்குள் நீதிமானாக்கப்பட்டதினால் நாம் அவரது பிரசன்னத்தில் பாவமற்ற மகனாக-மகளாக பிரவேசிக்க முடிகிறது''.

இதே தர்க்க ரீதியில் கிறிஸ்து பாவமற்றவராக, தெய்வ குமாரனாக மரித்திரந்தால், கடவுளின் நீதிநெறி புரண்டுவிட்டதாக அல்லது பிறழ்ந்துவிட்டதாக எண்ணவேண்டியதாகிவிடும். அவர் எவ்வாறு மரித்தார்? அவரது நீதித்தன்மை எவ்வாறு சந்திக்கப் பட்டது, ''அவர் நமது அக்கிரமங்களையெல்லாம் விழப்பண்ணி னார்''. அவருக்குள் நாம் பெற்றுக்கொண்ட நீதி எவ்வாறு நம்முடையதாகிறதோ, அவ்வாறே நம்மால் அவர் மேல் சுமத்தப் பட்ட பாவங்களும் ஆகிறது எனலாம். நாம் செலுத்த வேண்டிய கடன்களை அவர் ஒரே தரம் செலுத்தித் தீர்த்து விட்டார். அந்தக்கடன் அவருடையதாயிற்று.

### நீதிக்கான கிரயம் எவ்வாறு செலுத்தப்பட்டது?

மனிதனுடைய பாவம், அவனைத் தேவ பிரசன்னத்தக்குள் செல்ல முடியாமல் தடை செய்கிறது. அப்படியானால் அதுபோலக் கிறிஸ்துவும் பாதிக்கப்பட்டாரா?


இன்றைக்கு அவர் இறைவனுடனிருக்கிறார். ஆனால், கல்வாரியில் நமது பாவங்களைச் சுமந்தார். இத்தகைய முரண்பாடு எப்படியாயிற்று?

என்ன நடைபெற்றது என்பதை விளக்க நமக்கு அறிமுகமான ஓர் எடுத்துக் காட்டைப் பார்ப்போம். ஒரு அமிலத்தின் சில துளிகள்,

அமிலத்தன்மைக்கு எதிர்மறையான ஒரு திரவத்தில் வரும்போது என்ன நடக்கிறது? அந்த அமிலம், திரவத்தினால் கிரகிக்கப்படும் போது மறைந்து போகிறது. சமநிலைப்படுத்துவதற்கான செயல் அமிலத்துக்கு எதிர்மறையான திரவத்தின் சக்தியைக் கொஞ்சம் பயன்படுத்திக் கொள்கிறது. அது மீண்டும் துவக்கத்தில் எடுத்துக் கொண்ட திரவம் போல் ஆகிறதில்லை. இந்த உதாரணத்தை மனதில் கொண்டு கிறிஸ்து தமது நீதியிலிருந்து எவ்வாறு நமக்கும் வழங்கினார் என்று பார்ப்போம். ஆதியில் தேவனுடன் சமத்துவம் பெற்றவராக சமதளத்திலிருந்தார். மனித வடிவம் எடுக்கும் போது தம்மைத்தாமே வெறுமையாக்க வேண்டியதாயிருந்தது.

அதை இங்கு பட வடிவில் விளக்கலாம்.

படம்



# புதிர் விளக்கப்படுகிறது

பரிசுத்த பவுல், தமது பிரிய சீடனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிய முதலாம் நிருபத்தில், இதற்கான விளக்கத்தைக் காணலாம்.

''....தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் : ஆவியிலே நீதியுள்ளவர் என்று விளங்கப்பட்டார்...'' [1. தீமோத்தேயு 3:16]

ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார் என்பதன் பொருள் யாது? சிலுவையிலே மனிதர்களுடைய சகோதரராகிய இயேசு, மனிதர்களின் பாவங்களைத் தம் மீது ஏற்றுக் கொண்டு, சிலுவையில் மரித்தார். ஆனாலும் ஆவிக்குரியதாகிய பாவ நிவாரணம், சரீரப் பிரகாரமாக ஈடுசெய்ய முடியாது. ஆவிக்குரிய திலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். வார்த்தையானவருக்கு உரியதான அதிகாரம் வல்லமைகளை, ஆவிக்குரிய சகோதரனாகிய மனிதனுடன் ஒருமித்து கொள்வதற்காக விலக்கிவைத்தார். ஆனால், தற்பொழுது கடவுளுடன் உள்ளதான சமத்துவ நிலை, தேவைப்படுகிறது. மனிதன் செய்த பாவங்களுக்காக பொறுப்பை எவ்வாறு மனிதனே முன்பு ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்ததோ அதேபோல மனிதனுடைய பாவங்களை இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கிறிஸ்துவின் நீதியானது எல்லாப் பாவங்களையும் ஈர்த்துக் கொள்ளப்போதுமானதாக இருந்தது. ''அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திங்களினாலே பூரணப்படுத்துகிறது.'' [எபிரெயர் 2:10] என்று பார்க்கிறோம்.

கிறிஸ்துவின் இரத்தத்தினால் நிறைவைப்பெற்று தேவனுக்கு முன்பாக நிற்கும்படியாக அவர் நமக்காகப் பாவமானார் என்று கூறலாம் அல்லது நமது பாவங்களை ஈர்த்துக்கொண்டாரெனலாம். இது கிறிஸ்து முன்பிருந்த நிலைமை அல்ல. மனிதனை உயர்த்து வதற்காக தம்மைத் தாழ்த்தின அதே நிலையில் இருக்க வேண்டியதாகிறது. இது தான் தியாகம். சமத இரட்சிப்பு

இவ்வாறுதான் பெறப்பட்டது. நமது பாவங்கள் யாவும் கிறிஸ்தவின் இரத்தத்திளால் ஈர்க்கப்பட்டு நமக்கு பட்டவிட்டது. இரட்சிப்பின் பணி நிறைவு பெற்றது. இரட்சிப்பின் மீதும், தேவனுக்கு ஏற்பட்ட விளைவின் மீதும் முத்திரை பதிக்கப்பட்டது. பின் வாங்கிச் செல்லமுடியாது என்றாயிற்று.

மரணத்திற்குப் பின்

''மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப் படவும், சிலுவையிலறையப்படவும் மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும்'' என்று இயேசு சொல்லியிருந்தார். [லூக்கா 24:7]

உலகில் அனேக மனிதர்கள் புதிய புதிய அமைப்புள்ள மார்க்கங்களை- மதங்களை உண்டு பண்ணியிருக்கிறார்கள். அவர்களின் மேல் சம்பிக்கை வைத்த ஆராளமான சீடர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களில் பலர் தாம் கூறிய மதக் கோட்பாடுகளுக்காக உயிரையும் தியாகம் செய்திருக்கிறார்கள். ஆனால், இயேசுக்கிறிஸ்துவுக்கும் அவர்களுக்கும் இடையில் ஒர பெரிய வித்தியாசம் உண்டு; அது என்னவெனில் அந்த மதத்தலைவர்கள் கல்லறையில் எதிர்வரும் உயிர்த்தெழுதலுக்காக காத்திருக்கிறார்கள். யோவான் 11:25 ஆம் வசனத்தில் இயேசு சொன்னது போல், '' நானே உணிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக் கிறேன்''. உயிர்த்தெழுந்தார். மூன்றாம் நாளில் தாம் கூறியிருந்த படியே கல்லறையைப் பிளந்து வெளியே வந்தார்.

இந்த உயிர்த்தெழுதலானத ஓர் வரலாற்று உண்மை. இதனை எந்தவொரு நாத்திகனோ, அவிசுவாசியே 'இல்லை' என்று நிரூபிக்க வில்லை. நமது இந்த ஆராய்ச்சியில் அவரது உயிர்த்தெழுதலைப் பற்றியல்ல, மரணத்தை வென்றவராகிய இயேசுக்கிறிஸ்ம முக்கரே இருந்து வந்ததும், தொடர்ச்த வாரந்த வருகிறதுமான காரியத்தைத் தான் இங்கே காணப்போகிறோம்.

## உயிர்த்தெழுதலில் கிறிஸ்துவின் தன்மை

அனாதிக் காலம் தொடங்கி, மனுஷகுமாரனாகப் பிறந்த காலம் வரைக்கும், வார்த்தையானவர் தேவனுடையது ஒரே தன்மையை தரித்தவராக இருந்தார்.

தேவன் ஆவியாக இரக்கிறார் [யோவான் 4:24] எனவே வார்த்தையே ஆவியானவர், எனினும் அவர் தம்மைத் துறந்தார். [எபிரெயர் 2 : 14]

அவர் மனிதன் என்ற நிலையில் மரணத்தைச் சந்தித்தார். அவர் கல்லறையிலிருந்து எவ்வாறு வெளிப்பட்டார்? வார்த்தையாகவும் ஆவியாகவுமா? அல்லது உயிர்த்தெழுந்த மனிதனைப் போலவா? இந்த வினாக்களுக்கு லூக்கா எழுதின சுவிசேஷம் 24 : 36-43 வசனங்கள் விடையளிப்பதாக அமைந்துள்ளது.

உயிர்த்தெழுந்த இரட்சகரைத் தாங்கள் கண்ட விவரங்களைக் குறித்து ''அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், இயேசு தாமே அவர்கள் நடுவில் நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். அவர் அவர்களை நோக்கி நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள், உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள், நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆனாலும் சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில்; புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன் கண்டத்தையும், தேன் கூட்டுத்துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார்.

எனவே வார்த்தையானவர் மனிதனாக வாழ்ந்தார். மனிதனாக மரித்தார்; மனிதனாக உயிர்த்தெழுந்தார்.

1யோவான் 3:2ம் வசனம், இன்னும் நமக்குச் கூடுதலான தெளிவைக் கொடுக்கிறது. " பிரியமானவர்களே, இப்பொழுது" தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; இனி எவ்விதமாயிருப் போம் என்று இன்னும் வெளிப்பட வில்லை; ஆகிலும் அவர் வெளிப் படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைக் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாய் இருப்போமென்று அறிந்திருக் கிறோம்".

இவ்வசனத்திலிருந்து நாம் இரண்டு கருத்துக்களை அறிந்து கொள்கிறோம்.

ஒன்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, அவருக்கும் மனிதனுக்குமுள்ள ஒன்றித்த தன்மை தொடரும்.

இரண்டு, எதிர்காலத்தில், அப்பொழுது அவர் எப்படியிருக் கிறாரோ அப்படியே நாமும் இருப்போம் என்பது தெளிவாகிறது.

அவரைப் போலவே இருப்போமென்று கூறுவது பற்றிய ஒரு குறிப்பு இங்கே சொல்லப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தை யில் எவ்விடத்திலும், நாம் தேவனைப் போலவே இருப்போமென்று சொல்லப் படவேயில்லை.

## நித்திரையடைந்தவர்களின் முதற் பலன்

நமது உயிர்த்தெழுதலின் நிச்சயம், கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலோடுப் பின்னிப் பிணைந்திருக்கிறது.

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரை யடைந்தவர்களில் முதல் பலனானார். "[1கொரிந்தியர் 15:20] இதற்கு இணையான இன்னொரு வசனம் கொலோசெயர் 1:18ல் காணலாம். அது :- " எழுந்த முதற்பேறு மானவர்". தேவனுடைய முதற்பேறான குமாரனாக இருந்து, மற்ற எல்லா மனிதருக்கும் தேவ குமாரர்களாக இருக்கும் வழியைத் திறந்தது போல, நித்திரையடைந் தவர்களில் முதற் பலனானார்.

அவர் நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாகி, ஜீவக் கதவுகளைக் கர்த்தருடைய விசுவாசிகளுக்குத் திறந்து வைத்தார். இயேசு உயிர்த்தெழுவதற்கு முன்னரே சிலர் உயிர்த்தெழுந்தார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்கள் மீண்டும் மரித்தனர்; உயிர்த்தெழுதலின் முதற்பலன் இயேசுவே. நாமும் அவ்வாறே உயிர்த்தெழுவோம்.

''இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறு ரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திரப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' என்று 1 கொரிந்தியர் 15:51,52 வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

இதற்கு இணையாக மற்றுமொரு வசனத்தைப்பார்ப்போம். ''அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்''. [ரோமர் 8:11]

மேலும் ஒரு வசனம் இதற்கு ஆதரவாக உள்ளதைப் பார்ப்போம்.

''நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது எனினும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்''. [பிலிப்பியர் 3:20,21]

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுடன், நமது உயிர்த்தெழுதலைப் பற்றிய வாக்குத்தத்தங்களும், நமது சரீரங்கள் மறுரூப

மாக்கப்பட்டு அழியாத்தன்மை பெறும் என்பதும் இணைக்கப் பட்டிருக்கிறது. அவரிருக்கிறபடியே நாமுமிருப்போம். அவரது மரணமானது அவர் மனிதனுடன் கொண்டதான ஒன்றிப்பு முடிந்துவிட்டது என்பது பொருளல்ல. அது தொடர்கிறது.

யாருடைய வல்லமையினாலே அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்?

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி வேறு என்ன விவரங்களை நாம் அறிகிறோம்?

ரோமருக்கு எழுதிய நிருபம் 8:11 ஆம் வசனம் இதைக் குறித்து, யாருடைய வல்லமையினாலே அவர் உயிருடன் எழுப்பப் பட்டார் என்பதை விளக்குகிறத. ''அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி'' என்று கூறுகிறது.

மேலும் சில விளக்கங்களை யோவான் எழுதின சுவிஷேம் 10:17,18ஆம் வசனங்கள் நமக்குத் தருகின்றன. ''நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும் படிக்கு அதைக் கொடுக்கிற படியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான். நாமே அதைக் கொடுக்கிறோம். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு; அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இத்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்''.

ஆதியில் வார்த்தையானவருக்குள் ஜீவனிருந்தது. அவர் தெய்வத்துவத்தில் ஒன்றானவரானபடியால், அத்தன்மையின் படியே இருந்தது. மனித ரூபமாக வாழ்ந்த இயேசுவுக்குள்ளும் ஜீவனிருந்தது; ஏனெனில் தேவன் அதனைத்தந்தார்.

''ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடைய வராயிருக்கிறது போல செய்திருக்கிறார்''. [யோவான் 5:26] மேலும், ரோமர் 8:11 ஆம் வசனமும், யோவான் 10 : 17ஆம். வசனமும் இயேசுவை உயிரோடு எழுப்பினவர் யார் என்பதில் மேலும்

மேலும் ஆதாரங்ளாகவே இருப்பதைக் காண்கிறோம். ''உயிர்த் தெழுதலுக்கான வல்லமை, பெறப்பட்டதான வல்லமை'' என்று இயேசுவே கூறியிருக்கிறார். ''இந்தக்கட்டளையை என் பிதா வினிடத்தில் பெற்றுக் கொண்டேன்''.

## உயிர்த்தெழுந்த பின் இயேசுவின் நிலை யாது?

இயேசு தேவனால் மகிமைப்படுத்தப்பட்டார்.

''பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்'' [யோவான் 17:5] தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில்தானே இந்த ஜெபம் செய்யப்பட்டது. தாம் வெறுமை யாக்கப்பட்ட பின்னர், பரலோகத்திற்குச் செல்லும் போது தாம் உலகில் வருவதற்க முன்னிருந்த நிலையே இருக்க வேண்டும் என்று இயேசு வேண்டிக் கொள்கிறாரா?

''உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே.. மகிமைப்படுத்தும்''. மகிமை ஒன்றாகவே இருக்கும்; வேறுபாடு என்னவெனில் இந்த மகிமை பிதாவினால் கொடுக்கப்படுவது, தம்மில் தாமே இருப்பதல்ல.

## இராஜாதி இராஜாவானார்

இயேசுக் கிறிஸ்து இராஜாதிஇராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார். ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது''. [மத்தேயு 28:18] மனிதனின் பாவத்திற்கான ஆக்கினையே அவர் ஏற்றுக்கொள்ளுகிறார். தமது உயிர்த்தெழுதலினாலே மரணத்தை வென்றார். பரலோகத்தின் மகிமைக்குள்ளாக பிரவேசிக்கும் நிலையிலிருக்கிறார்.

தாம் வெறுமையாக்கும் நிலைக்கு முன்பிருந்த நிலையே இருக்குமா?

''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று அவரே கூறியிருக்கிறார். இந்த வார்த்தையானத உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்துவின் அதிகாரம்

எப்பேர்ப்பட்டது என்பதைக் கூறுகிறார். ஆனால், எவ்வாறு ஆளுகை செய்கிறார்? தமக்கு அருளப்பட்ட அதிகாரத்தின் படியே!

## தேவனால் மேன்மைப் படுத்தப்படுதல்

பிலிப்பியர் இரண்டாம் அதிரத்தில் ஏராளமான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்குவது மனித ரூபம் எடுப்பது, சிலுவையில் மரண பரியத்தம் தம்மை தாழ்த்துவது ஆகியவை கூறப்பட்ட பின் நாம் வாசிக்கிறது என்ன?

''தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு பண்ணும் படிக்கும், எல்லா சாமத்திற்கும் மேலான நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தகுளினார்'', [பிலிப்பியர் 2:10,11]

எனவே இயேசுக் கிறிஸ்துவின் நாமம் எல்லா நாமத்திற்கும் மேலானது, அவருக்கு முன் முழங்கால்கள் யாவும் முடங்கும். அவரின் மேன்மையைக் குறித்து எந்தக் கேள்வியுமில்லை. இந்த நிலைமையை அவர் எப்படி அடைகிறார்? தேவன் அவரை மகிமைப் படுத்தி எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்ததினால் அல்லவா!

ஒரு இராஜ்ஜியம் கொடுக்கப்பட்டது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முதலாம் அதிகாரத்தில் இயேசு பரமேறிச் சென்ற காட்சி மிக அற்புதமாச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இயேசுவை அப்போஸ்தலர்கள் இறுதியாகக் கண்டகாட்சி ஒன்பதாம் வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

''இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒருமேகம் அவரை எடுத்துக்கொண்டது [அப்போஸ்தலர் 1:9]

தானியேல் புத்தகம் 7:13,14 வசனங்களில் இந்தக் காட்சியின் பரலோகப்பார்வை விவரிக்கப்பட்டுள்ளது.

''இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் ''அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்''.

மத்தேயு 28:18, பிலிப்பியர் 2:9-11, தானியேல் 7:13,14 ஆகிய இவ்வசனங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகின்றன. இவைகள், இயேசு நாதர் பரமேறிய காலத்திற்கும் மீண்டும் கடைசி காலத்தில் உலகத்திற்கு நடைபெறவுள்ள இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் ராஜாவாகவும், சகல அதிகாரமும் பெற்றவராகவும், ஆளுகை செய்கிற ராஜாவாகவும் இருப்பார் என்று விவரித்துக் கூறியுள்ளன. இந்த வசனங்கள் அவருடைய உணர்ந்த வல்லமை, அதிகாரம், ராஜ்யம் எல்லாம் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்படுகின்றன என்றே விளக்குகின்றன.

வார்த்தையானவர் தெய்வத்துவத்திற் கேயுரிய அதிகாரம் வல்லமை ஆகியவற்றைத்தாமே வெறுமையாக்கி, மனித ரூபமாகவும், மனுக்குலத்திற்குச் சகோதரனாகவும், கடவுளைச் சார்ந்திருக்கும் நிலையும், சிலுவை மரணத்தில் பாவத்திற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொண்டதும் முடிவடைவதில்லை. இப்பொழுதும் கூட உயிர்த்தெழுந்த ஜெய வீரனாக, ஆளுகை செய்தவராக இருந்த போதும், தமது அதிகாரத்தையும், வல்லமையையும் கடவுளிட மிருந்து பெற்றுக் கொள்கிறார். இப்பொழுது தந்தை மைந்தன் உறவு தொடர்கிறது. இதற்கு இதோ இந்த வசனமே சான்று : '' தேவன் ஒருவரே; தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே''. [1தீமோத்தேயு 2:5]

சிலுவை மரணமே அவரது தியாக பலியின் உன்னத நிலை. நாம் தண்டனை பெற்றால் ஆவிக்குரியதும், நித்தியமானது மாயிருக்கும். [தேவனைப் பிரிந்து நகரம் சேருதல்] அது போல அவரது தியாகபலியும் ஆவிக்குரியதும், நித்தியமானதுமாகும்.

அவர் உயிர்த்தெழுந்த பின்னர் தாம் ஆதியில் தெய்வத்து வத்திலிருந்த நிலைக்குத் திரும்பவில்லை. மீண்டும் தெய்வத்தின் வல்லமையையும், அதிகாரத்தையும் எடுத்துக்கொள்ளவுமில்லை.

இது எப்படியாகும் என்ற வினாவிற்கு இதோ ஒரு எடுத்துக் காட்டு: ஒரு மனிதன் ஒரு கடைக்குள் சென்று தேவையான ஏதோவொன்றை வாங்கிக் கொண்டு அதன் கிரயத்தைச் செலுத்திவிட்டு, பிறகு பொருளையும், செலுத்திய பணத்தையும் பெற்றுக்கொண்டு திரும்பியதைப் போன்றதாக இருக்கிறது. 'மரணம்'கிறிஸ்து செலுத்திய கிரயம். அதனிமித்தம் மனிதருடன் இடைப்படுதல், முழுக்கிரயத்தையும் தேவ சமூகத்தில் வைத்து முழு மீட்பையும் பெற்றார்.

## நமது மறுமொழியென்ன?

ஒருபுறம் அடுக்கடுக்காக அமைகப்பட்டு இறுதியில் மனிதன் இறைவனைச் சேர்வதற்கு திறந்த வாயிலை உண்டாக்கி தேவனுடன் ஒப்புரவாகும் செயலைப் பார்க்கிறோம். இயேசுவின் மரணத்தால் பாவத்திற்கு அபராதம் செலுத்தப்பட்டு விடுகிறது.அவர் மனிதனுடன் இணைக்கப்படும்படியான தமது ஆவியின் பொறுப்பைச் செய்கிறார். அவர் கடவுளின் குமாரன் என்பது போல நம்மையும் தேவ குமாரர்களாக்குகிறார்.

இவைகள் நமது எல்லாத் தேவைகளையும் சந்திக்குமளவுக்கு நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

மறுபுறம், மன்னிப்பாகிய போர்வை, எல்லாரையும் உள்ளடக்கிக் கொள்வதில்லை. இந்த ஆவிக்குரியவைகளை ஆயத்தமாகவுள்ள நாம் எப்படி சொந்தமாக்கிக் கொள்வது? தனிப்பட்டமுறையில் கடவுளுக்கு எவ்வாறு மறுமொழி சொல்வது?

‘‘எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்கிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்’’[யோவான் 6:45]இந்த வசனமே மறுமொழியாகும்.

உலக மக்கள் தொகையில் உள்ள அனைவரும் தேவனுடைய நற்செய்தியை [சுவிசேஷம்] அறிந்து கொள்ளுகிறதில்லை.

‘‘நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.’’ [2 தெசலோனிகேயர் 2:14] இந்த வசனம் உங்களை அழைத்தார் என்பதைக் கற்பிக்கிறது.

எனவே கர்த்தரின் சுவிசேஷமாகிய நற்செய்தி நமது இருதயத்தை எட்டுகிறது. நற்செய்தி என்பது யாது? அது யாது என்பதை கொரிந்தியர் 15:3,4 வசனங்கள் தெளிவாகக் கூறுகிறது. அதாவது, ‘‘உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்தது என்ன வென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப் பட்டு, வேதவாக் கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

## நமது பொறுப்பு

சிலர் இந்த நற்செய்தியைக் காதில் கேட்டும் உதறிவிடுகின்றனர். சிலர் இதைக் கேட்டு இருதயத்தில் குத்துண்டவர்களாகிறார்கள். பின்பு அன்பின் மகத்துவத்தை உணர்ந்து தேவனுக்கு கீழ்ப்படிகிறார்கள். வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை எட்டியுள்ளதாக உணர்கிறார்கள். கர்த்தரின் மீது கொண்ட அன்பினால் ஏற்பட்ட மன மகிழ்ச்சிதான் பாவமன்னிப்பு என்றும், இதன் மூலமாக கடவுளின் குடும்பத்தில் சேர்ந்து விட்டதாகவும் சிலர் நினைத்துக் கொள்கிறார்கள். இது வருத்தத்திற்குரியது.

இந்த திருப்புமுனை இரட்சிப்பின் அநுபவத்திற்கு ஒரு முக்கியக் கட்டந்தான்.

இதுவரை நாம் செய்த ஆய்வில், கெத்சமனே தோட்டத்தில் ஆண்டவர் இயேசு, மனுக்குலத்துக்காக ஒரு உன்னத முடிவுக்கு வந்தபின், அதற்குத் தம்மை ஒப்புக் கொடுக்க, பட்டபாடுகள்தான் உச்சி என்பதை உணர்ந்துகிறது. மனுக்குலத்துக்காக அல்லவா என்று தெரிந்து கொள்ளவேண்டியே வந்ததுபோல கடைசியில் தம்மை முழுவதுமாக ஒப்புக் கொடுக்க வேண்டியிருந்தது போல, நாம் ஒவ்வொருவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்தாக வேண்டும். ஒன்று தேவனை நமது தந்தையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்; அல்லது தள்ளிவிடவேண்டும். மனித சித்தத்தை அவருக்குக் கீழ்ப் படுத்த வேண்டும். கிறிஸ்து நமது பாவத்தை ஏற்றுக் கொண்ட தாகத் தெரிந்து கொண்டது போல, நாம் நமது பாவத்தை நம்மிலிருந்து எடுத்துப் போட அவரை அனுமதிக்க வேண்டும். பாவத்திற்கு அடிமைப்படக்கூடாது என்று ஆசை நமக்கு வரவேண்டும்.

இயேசு கெத்சமனே தோட்டத்தில் ஒரு முடிவுக்கு வந்ததோடு இருந்திருந்தால் என்னவாகியிருக்கும். அந்தக் கட்டத்துக்கு நம்மைக் கொண்டு வருவோம். அவரது மனப்போராட்டம் முடிவுக்கு வந்தது.அவர் தமக்குள் சமாதான நிலைக்கு வந்தார். இத்துடன் அவர் நின்றிருந்தால்... சிலுவை இல்லை; இரத்தம் சிந்து தலில்லை, நம் பாவத்திற்கு பரிகாரம் செலுத்தப்படுவதுமில்லை; அப்படியே நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்கும் மார்க்க மில்லை. பாவத்திற்கு மரித்தல் என்ற அனுபவம் பெறாமல் கிறிஸ்து வுடனே அடக்கம் பண்ணப்படாமல், அவருடன் உயிர்த்தெழுந்த அனுபவம் இல்லாமல், முதற்கட்ட உணர்ச்சிவசமடைந்து அன்பு கூறும் நிலையில் மட்டும் நின்றுவிட்டால் என்ன பயன்?

# கிறிஸ்துவுடன் மரித்தல்

கிறிஸ்து நமக்காக மரித்த அந்த நிலையை நாமும் எப்படிப் பின்பற்றுவது?

ரோமர் 6:17,18 ஆம் வசனங்கள் பதிலளிக்கிறது. " முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப் பூர்வமாய்க் கீழப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்; பாவத்தி னின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமை களானீர்கள்"

இப்படியாக, சுவிசேஷமாகிய கிறிஸ்துவின் மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்கிறோம். அவரது அன்பின் வலிமை நம்மை இழுத்து இரட்சிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள, பாவத்திலிருந்து விலக, நம்மை அவருக்கு ஒப்புக் கொடுக்கச் செய்கிறது.

நமது வாழ்க்கையில் மரணம், அடக்கஞ்செய்யப்படுதல், உயிர்த்தெழுதல் எவ்வாறு வெளிக்காட்டப்படுகிறது? இதற்கு ரோமர் 6:3-11 ஆம் வசனங்கள் பதிலளிக்கின்றன. அதாவது "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரே தரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.

இயேசுவின் மரணத்தினாலே நாம் குமாரன் என்ற உரிமையைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமானால் அவர் மரித்தது போலவே நாமும் பாவத்துக்கு மரிக்கவேண்டும். அவரோடு கூட ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட்டு, புதிதாக்கப்பட்ட புதிய மனிதர்களாய் தெய்வக் குடும்பத்தில் அங்கமாக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் மீண்டும் பிறவாவிட்டால் ஜீவனுள்ளவர்களாக முடியாது.

## புது மனிதரனாகப் பிறத்தல்

இப்பொழுது என்ன நடந்துள்ளது? பழைய மனிதன் மரித்ததினால் புதிய பிறப்பு உண்டாயிருக்கிறது. இயேசுவானவர் நமக்குப் போதித்தபடியே ''ஒரு மனுஷன் [மறுபடியும்] ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது''[யோவான் 3:3-5]

மறுபடியும் பிறந்த மனிதனைக்குறித்து 2 கொரிந்தியர் 5:17 ஆம் வசனத்தில் கீழ்வருமாறு கூறுகிறது. ''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின.''

ஞான ஸ்நானம் ஏன் அவ்வளவு முக்கியமானது?

ஞானஸ்நானம் ஏன் இவ்வளவு முக்கியமானது? அது என்ன ஒரு சடங்காச்சாரமா? அது வெளித்தோற்றத்தில் காணப் படுகிறபடி வெறும் சடங்காச்சாரமானால், தேவனுடைய பிள்ளை களாவதற்கு நாம் ஏன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். என்றெல்லாம் ஒருவன் கேட்கக்கூடும்.

இந்தக் கேள்விகளைக் குறித்து நாம் சிந்திப்பது அவசியம். இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் தான் நாம் வேத விளக்கப்படி சரியாகச் செய்கிறோம் என்று கொள்ள முடியும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பல சடங்காச்சாரங்கள் இருந்தது என்பது உண்மையே. அவைகள், கடவுளுடைய மக்கள் கீழ்ப்படி தலுள்ள ஜீவியத்தை அமைத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப் பட்டவைகளாகும்.

புதிய ஏற்பாடு இந்தச் சடங்காச்சாரங்களை விட தேவனுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட இருதயமே முக்கியமானது என்று மெய்ப்பிக்கிறது. இப்படியிருக்க மாற்கு எழுதின சுவிசேஷம் 16:16ல் ‘‘ விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்’’ என்று ஏன் கூறப்பட்டுள்ளது.

வெளித்தோற்றமானது சடங்காச்சாரமானது என்று நினைக்கப்படும் அதை விளங்கிக் கொள்ளும் போது இதற்கான விடை கிடைக்கும்.

கிறிஸ்து இயேசு பாடுபட்டு சிலுவையில் மரித்து நமது பாவங்களைச் சுமந்தார் என்பதுதான் மிக அடிப்படையான காரியம். அதுவரை நாம் அவரது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத நிலை. அதன் பின்னர் மனிதனுடன் இணைக்கப்பட்டுவிடுகிறார். சிலுவை மரணத்தின் காரணமாக அவருடைய கையில் சிருஷ்டிகளும் நித்தியமாகப் பாதிக்கப்படுகின்றன. நாம் நமது பாவங்களுக்கான விமோசனத்தைப் பெறுவதற்கு நாம் சரீரப் பிரகாரமாக மரிக்க வேண்டியதில்லை. ஆனால், ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னும் பின்னும் வேறுபட்ட நிலை இருந்தாக வேண்டும். தேவன் இந்த

வழியை உண்டாக்கினார். நாம் இந்த வழியைப் பின்பற்றும்போது, உலகத்திற்கு புதிய வகையில், அவர் நமக்காக மரித்தார். நாம் அவருக்கு நம்மை ஒப்புக் கொடுக்கிறோம் என்று சாட்சி கொடுக்கிறோம்.

ஞானஸ்நானம் என்பது வெறும் சடங்காச்சாரத்தை விட மிக மிக முக்கியமானதும் வேறுபட்டதுமாகும். நாம் எவ்வாறு நம் பாவங்களுக்காக மன வருத்தப்பட்டு நமது சித்தத்தை தேவனுக்கு கெத்சமனே தோட்டத்தில் நடந்தது போல நம்மை ஒப்புக்கொடுக்கிறோமோ அவ்வாறே ஞானஸ்நானமானது அவரது கல்வாரி மரணத்திற்கு நாம் கொடுக்கும் கைமாறாகும்; மறுமொழியுமாகும்.

சிலுவை மரணமில்லாமல் எல்லா மனுக்குலத்திற்கும் எப்படி இரட்சிப்பு ஏற்படவில்லையோ, அப்படியே ஞானஸ்நானம் இல்லாமல் அந்த இரட்சிப்பை தனிமனிதனாக சுதந்திரத்துக் கொள்ளவும் முடியாது. பழைய மனிதன் மரிக்காவிடில் இரட்சிப்பு இல்லை. ஞானஸ்நானம் இல்லாவிடில் புதிய சிருஷ்டியுமில்லை.

வேதம் இதைக் குறித்து மிகத் தெளிவாகப் போதிக்கிறது. இந்தக் காரியத்தைக் குறித்து அநேகர் இடறல் அடைகிறார்கள்.

கிறிஸ்தவ மதத்திலுள்ள அநேக நாமகரணம் கூட்டத்தார் களின் சித்தாந்தத்தில் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் ஓரங்கட்டப்படுகிறது. ஞானஸ்நானத்திற்கும் இரட்சிப்புக்கும் சம்பந்தமில்லையென்றே கூட அநேகர் போதிக்கின்றனர்.

இந்தக் குழப்பமான மாறுபாடு எப்படியுண்டாயிற்று? வேதாகமத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ள இந்த உண்மை ஏன் இப்படி உதாசீனப்படுத்தப்படுகிறது.

மனித ஆத்துமாவுக்காக தேவனும் சாத்தானும் போராடுகிறார்கள்.

மேலே எழுந்த வினாக்களுக்கான விடை மிகத் தெளிவாக இருக்கிறது. கடவுளும் சாத்தானும் மனிதனை ஆளுகை செய்ய போராட்டமே நடத்துகிறார்கள். தேவன் மனிதனுக்கு நித்திய

இரட்சிப்பு வேண்டும் என்று விரும்புகிறார். சாத்தானோ நம்மை தேவனிடமிருந்து பிரித்துப் போடவே முயற்சிக்கிறான்.

தேவன், தமது குமாரனின் மரணத்தின் மூலமாகவும் அதை மனிதன் ஏற்றுக் கொள்வதன் மூலமாகவும் மன்னிப்பை உண்டாக்கினார். இந்த சத்தியத்தைக் கேட்பது, அதை விசுவாசிப்பது, பாவ ஜீவியத்திலிருந்து விலகுவது, அதை மற்றவர்களின் முன்பாக வாயினால் அறிக்கை செய்வது என்பனவெல்லாம் கிறிஸ்து இயேசுவின் படிப்படியான திட்டங்களுக்கு நாம் தரும் மறுமொழியாகும். இவற்றிற்கெல்லாம் சிகரமாக அமைந்து நம்மை இம்மையிலிருந்து பரலோக ராஜ்யத்திற்கு இட்டுச் செல்வது இந்த ஞானஸ்நானமே என்பதை அறிவோமாக.

இரட்சிப்படைவதற்கு நாம் எவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அவற்றிலெல்லாம் நாம் குறைவுபட்டவர்களாகவே இருக்க வேண்டுமென்று பிசாசானவன் விரும்புகிறான்.

நாம் தேவனை விசுவாசிப்பதைப் பற்றியோ, நேசிப்பதைப் பற்றியோ, தேவ சட்டதிட்டங்களை நாம் பின்பற்றுவதைப் பற்றியோ, அவன் கவலைப்படுவதில்லை. தேவ குடும்பத்திற்குள் பிறக்கும் நிலையை மட்டும் அடைந்து விடக் கூடாதென்பதே அவனது குறிக்கோளாகும்.

புதிய சிருஷ்டியாவது என்பதில் ஞானஸ்நானம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை மனிதக் கண்களுக்கு மறைத்துவிட்டு, நற்குணம், நற்சிந்தை இருந்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தை மனிதமனங்களில் தந்திரமாகத் தூவிவிடுவான். அதனால் தான் இந்த ஞானஸ்நானம் குறித்த சத்தியத்தை குழப்பிவிடுவதில் சாத்தான் குறியாயிருக்கிறான்.

## குடும்பங்கள் தெரிந்து கொள்ளுதல்

உலகில் பிறக்கும்போது நாம் எந்தக் குடும்பத்தில் பிறக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது; எந்தக் குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ள

முடியாது. ஆனால் நாம் எந்தக் குடும்பத்தில் பிறக்க நேர்ந்தாலும் அந்தக் குடும்பத்தில் ஒரு அங்கமாக ஆகிவிடுகிறோம்.

ஆனால், ஆவிக்குரிய வகையில் நாம் தேவனுடைய குடும்பத்தைச் சேர்நதவர்களா அல்லது சாத்தான் குடும்பத்தைச் சேர்ந்தவர்களா என்பதை நாமேதான் தெரிவு செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படித் தெரிவு செய்வது மட்டுமல்ல நமது வேலை, தெரிவு செய்தால் மட்டும் கடவுளின் பிள்ளைகளாகிவிடவும் முடியாது. எனவே, நிபந்தனைகளுக்கு இணங்கி ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறந்து, அதாவது ஞானஸ்நானம் பெற்று கடவுளின் பிள்ளைகளாக மாற வேண்டும்.

''ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர் களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலேயல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்.''
[1 பேதுரு 1:22,23;2:1,2]

இந்த வசனங்கள் ஆவிக்குரிய காரியத்தையும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டதையும் என்னமாய் விளக்கிக் கூறுகிறது பார்த் தீர்களா.

நீங்கள் வளரும்படி புதியதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சை யாயிருங்கள்.

''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்ளாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச

சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்''.[யோவான் 1:12,13]

''நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே''[கலாத்தியர் 3:26,27]

''மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய் நீ புத்திரனேயானால் , கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்திரனாயுமிருக்கிறாய்'' [கலாத்தியர் 4:6,7]

## கிறிஸ்து தொடர்ந்து சகோதரனாயிருத்தல்

மற்றும், அநேக இணை வசனங்கள் கிறிஸ்துவுக்கும், தேவனுக்கும் இடையேயுள்ள பிதாகுமாரன் என்ற உறவை நமக்குக் காட்டி, கிறிஸ்துவுடன் நமது சகோதர உறவையும் கூட்டி நாமும் பிதாகுமாரன் என்ற உறவுக்குள் வந்து விடுகிறதைக் கூறுகிறது. கிறிஸ்துவின் சகோதர்கள் நாம் என்றால், அவரது பிதாவாகிய தேவன் நமக்கும் பிதாவாயிருக்கிறார் அல்லவா!

''நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியான வர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக் கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்து வுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்''[ரோமர் 8:16,17]

''பரிசுத்தம் செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர் களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர்

வெட்கப்படார். பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத் திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயி ருந்தது.''[எபிரெயர் 2:11,14,15,17]

''கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், கொண்ட நம்பிக்கையை விடாமலிருப்போம். நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப் போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்''. [எபிரெயர் 3:6, 14]

தம்மை வெறுமையாக்கிய கிறிஸ்து, எவ்வாறு மனித ரூபமானாரோ அவ்வாறே அவருடைய சகோதரர்களும் [மனிதர்கள்] கிறிஸ்துவில் நிறைவைப் பெற்று தெய்வ சுபாவத்திற்கு பங்குள்ளவர் களாகிறார்கள்.

''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத் தங்களும், அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.'' [2 பேதுரு 1:3,4]

‘‘அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ளவல்லவர் களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர்களது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள் கிறேன்.’’[எபேசியர் 3:19]

தேவன் தம்மை நேசிக்கிறவர்கள் ‘‘தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத்தமது குமார னுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கவேண்டும்’’ என்று விரும்புகிறார். [ரோமர் 8:29]

‘‘ உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயங்களென்று அறியீர்களா?அப்படியிருக்க அப்படியே கர்த்தரோடிசைந் திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறேன்.’’ [1 கொரிந்தியர் 6:15,17]

கிறிஸ்து இயேசு பரலோகத்திற்குத் திரும்பி சென்று தமது பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார். மத்தியஸ்தராயிருக் கிறார். அவர் தேவகுமாரனாக இருக்கிறார்; மனுக் குமாரனாகவும் இருக்கிறார். உயிர்தெழுந்த மறுரூபமான மீட்பராகவும் இருக்கிறார். ஆவிக்குரிய வகையில் நோக்கினால் நாம் அவரில் தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவர்களாயிருக்கிறோம்.

## நினைவுச் சின்னம்

கிறிஸ்தவ வாழ்க்கை, வெறும் சடங்காச்சாரம்தான் என்று ஒரு தவறான கருத்து நிலவுகிறது. கிறிஸ்து இயேசுவின் மரணத்தை நினைவு கூறும் வகையில், நினைவுச் சின்னமாகிய பரிசுத்த கர்த்தரின் பந்தி, கிறிஸ்துவ ஆராதனை ஒழுங்கில் ஒரு முக்கியப் பகுதியாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ‘‘வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்...’’ என்று அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் 20:7 ஆம் வசனத்தின்படி அப்பம்பிட்கும்படி கூடி வந்திருக்கிறார்கள்.

ஆகவே, வாரத்தின் முதல் நாளிலே ஆராதனைக்குக் கிறிஸ்தவர்கள் கூடி வருதலின் முதன்மையான நோக்கமே கிறிஸ்து இயேசு நமக்காக மரித்தார் என்பதை நினைவு கூறுகிறதான கர்த்தரின் பந்தியை அனுசரிப்பதற்காகத்தான் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## பழைய ஏற்பாட்டில் காணப்படும் விருந்துகள்

இந்தக் கர்த்தரின் பந்தியாகிய திருவிருந்தை முன் நிழலோட்டமாய்க் காண்பிக்கும் வகையில், பழையேற்பாட்டில் 'பஸ்கா' பண்டிகை விருந்து இருந்து வந்தது. இது, அடிமைத்தனமாக இருந்த யூத மக்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டதை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு விருந்தாகும்.

தேவன் இது குறித்து யூதர்களை வழிநடத்திய மோசேயிடம் கூறியது பற்றிய விவரம் யாத்திராகமப் புத்தகம் 12:1-14 வசனங்களில் காணப்படுகிறது.

''கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாக இருப்பதாக. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக் கடவர்கள்.''

ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற் போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல் வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்கவேண்டும்; செம்மறியாடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது, அதைத் தெரிந்து கொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று ராத்திரியிலே அதன் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக் கடவார்கள்.

பச்சையாயும், தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதன் தலையையும், அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவற்றையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதை புசிப்பீர்களாக. அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம் மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக.

அதைப் புசிக்க வேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக் கொண்டும், அதைத் தீவிரமாய்ப் புசிக்கக் கடவீர்கள். அது கர்த்தருடைய பஸ்கா.

அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்து போய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருக ஜீவன்கள் மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம் பண்ணி, எகிப்து தேவர்களின் மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர். நீங்களிருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும். அந்த இரத்தத்தைக் நான் கண்டு, உங்களை கடந்து போவேன். நான் எகிப்து தேசத்தை அழிக்கும் போது, அழிக்கும் பாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். அந்த நாள் உங்களுக்கு நினைவு கூறுதலான நாளாய் இருக்கக்கடவது:

அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிபீர்களாக; அதை உங்கள் தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக் கடவீர்கள். [யாத்திராகமம் 12:1-14]

## பழையேற்பாட்டு விருந்துகள் பற்றிய விவரங்கள்

பஸ்கா பலியைப் பற்றியும், பாவ நிவாரண பலியைப் பற்றியும் மேலும் சில விருந்துகள் பற்றியும் பழையேற்பாட்டில் கூறப்பட்டிருக் கின்றன.

1. பாவநிவாரணப்பலி அவர்களின் வாசல்களுக்கு வெளியே கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இடத்தில் புசிக்கப்படவேண்டும். [உபாகமம் 16:5,6]

2. பலியாகச் செலுத்தும் மிருகத்தின் ஒரு எலும்புகூட முறிக்கப்படக் கூடாது. [எண்ணாகமம் 9:12]

3. முறையாகச் செலுத்தப்படும் தகனபலியுடன், பாவ நிவாரண பலிக்காக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் செலுத்த வேண்டும். [எண்ணாகமம் 28:22]

4. அந்த பலி பழுதற்றதாயிருக்க வேண்டும். [எண்ணாகமம் 28:19]

5.புளிப்பில்லாத அப்பத்தை ஆயத்தம் பண்ணும் போது அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். [எண்ணாகமம் 28:20]

இஸ்ரவேலரின் வரலாற்றில் நிழலோட்டமாய்ச் சொல்லப் பட்டவைகள் கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன.

''நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே'' [1.கொரிந்தியர் 5:7]

1. இஸ்ரவேலர் எகிப்தில் சிறைப்பட்டிருந்தது போலவே மனுக்குலமும் பாவத்தால் சிறைப்பட்டது.

2.தேவகுமாரனின் ரத்தம் பஸ்கா பலியாகிய ஆட்டுக்குட்டி

யின் இரத்ததிற்கு ஈடு செய்யப்பட்டதாயிருக்கிறது.

3. எகிப்தில் தேவ நியாயத் தீர்ப்பு வந்தபோது எவ்வாறு இஸ்ரவேலர் தப்பித்துக் கொண்டார்களோ அப்படியே கிறிஸ்துவின் இரத்தத்தால் மூடப்பட்டவர்களும் நியாயத்தீர்ப்புக்குத் தப்பித்துக் கொள்வார்கள்.

''நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களைற நம்மைக் கழுவி'' என்று வெளிப்படுத்தின சுவிசேஷம் 1:6ல் பார்க்கிறோம்.

4. நமது பலி எருசலேம் பட்டணத்திற்கு வெளியே செலுத்தப்பட்டது.[எபிரெயர் 13:11,12]

''எந்த மிருகங்களின் இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு வரப்படுகிறதோ, அநத மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்.

5. பலியாகச் செலுத்தப்பட்ட ஆடுகளைப் போலவே கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு எலும்புகூட முறிக்கப்படவில்லை. [யோவான் 19:33,36]

''அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்திருக்கிறதைக் கண்டு அவருடைய எலும்புகளை முறிக்க வில்லை. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படு வதில்லை என்று வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது''

6.இயேசு குற்றமற்ற நமது பாவ நிவாரண பலி [எபிரேயர் 9:14]

'' நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு... உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியைகளை சுத்திகரிப்பது எங்களது நிச்சயம்.''

# விருந்துகளின் நோக்கங்கள்

பஸ்கா பண்டிகையும், மிருகங்களின் பாவ நிவாரணபலியும் முற்காலங்களில் நடைபெற்றவைகளாகும். அதாவது, எகிப்தி லிருந்து புறப்பட்ட யாத்திரையையும், மனுக்குலத்தின் சுத்தி கரிப்பையும் நினைவூட்டுதலாக மட்டுமல்ல, அவை பிற்காலத்தில் நடைபெற விருக்கும் பஸ்கா ஆட்டையும், கிறிஸ்துவில் பாவ நிவாரண பலி செலுத்தப்படும் என்ற நம்பிக்கையை உறுதிபடக் கூறுவதாகவும் உள்ளது.

தற்காலத்தில் சபைக்கு கொடுக்கப்பட்ட [கர்த்தரின் பந்தி] நினைவு விருந்தானது முற்காலத்தில் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அதே நோக்கமாகிய சிலுவை மரணத்தைச் சுட்டிக் காட்டுவதோடு அவர் மீண்டும் வருவார் என்பதையும் இப்பொழுதும் காட்டிக் கொண்டிருக்கிறது.

''நீங்கள் இந்த அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்'' [1கொரிந்தியர் 11:26]

**கர்த்தர் பந்தியின் அறிமுகம்**

**கர்த்தரின் பந்தியின் துவக்கம் எது?**

'' வேளை வந்தபோது அவரும் அவரோடு கூட பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர் களை நோக்கி, நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு பாத்திரத்தையும் எடுத்து இந்தப் பாத்திரம்

உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்'' [லூக்கா 22:14-16,19,20] தீர்க்க தரிசன உரையாக இயேசு இந்த விருந்தைக் குறிப்பிடுவதை யோவான் 6:51-54ஆம் வசனங்களில் காணலாம். ''நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே. அப்பொழுது யூதர்கள் இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்கு புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தையுப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.''

கிறிஸ்து இயேசு இந்த ஆவிக்குரிய ஆகாரத்தை உருவகப்படுத்திப் பேசுகிறார். உண்மையிலேயே ஜீவ அப்பத்தைக் குறித்து அவர் பேசினவைகள், ''வானத்திலிருந்து இறங்கி உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார். ஜீவ அப்பம் நானே; என்னிடத்தில் வருகிறவன் பசியடையான், தாகமடையான்.''[யோவான் 6:33,35]

இதேபோல் இயேசு பேசுவதைப் பாருங்கள்: ''நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிற வனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது என்றார்'' [யோவான் 4:10-14]

மேலே பார்த்த இரண்டு சம்பவங்களிலும் இயேசு தம்மைக் குறித்தே பேசுகிறார். ஜீவ அப்பமும் அவரே, ஜீவ தண்ணீரும் அவரே.

இந்த உதாரணத்தில் இயேசு ஆவிக்குரிய உணவு (அப்பம், தண்ணீர்)என்று கூறியது நேரடியாக அப்பத்தையோ, தண்ணீரையோ குறிப்பிடாது, வெறும் உருவகப்படுத்தியதாக மட்டும் எடுத்துக் கொள்ளவும் முடியாது. அவர் தமது சீஷர்கள் ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், அவருடைய மாம்சத்தைப்புசித்து, இரத்தத்தை பானம் பண்ண வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இந்தச் சொல்லைக் கேட்டவர்கள் என்ன இவர்கள் நரமாம்ச பச்சணிகளா என்று கூட நினைத்திருப்பார்கள். ''அதுமுதல் அவரது சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப் போனார்கள்.'' என்று யோவான் 6:66 ஆம் வசனத்தில் பார்க்க முடிகிறது.

தற்காலத்தில் உள்ள விசுவாசிகள் 2000 வருடங்களாக அனுசரித்து வருகின்ற இந்த கர்த்தரின் பந்தி என்ன என்பதை அறிந்துணர்ந்திருப்பார்கள். ஆவிக்குரிய ஒரு விருந்தை அவர் துவக்கி வைத்திருக்கிறார். அது தமது மரணத்தில் வெளிப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலும், அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட சந்தர்பத்திலுமாக இரண்டு இடங்களில் மட்டும் இந்தச் சரீரம், இரத்தம் என்று குறிப்பிடுகிறார்.

இதனைத் தமது சீஷர்கள் நடைமுறையில் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடுகிறார். ஒன்றுக்கொன்று இணையாகவுள்ள இந்த வார்த்தைகளை வேண்டுமென்றே தெரிவு செய்து கூறுகின்றார்.

அவர் இப்படிப் பேசிய அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்கள் மாம்சத்தையும் இரத்தத்தையும் புசித்து பானம் பண்ணுவது என்பது பழைய ஏற்பாட்டில் தடை செய்யப்பட்டிருந்த காரணத்தால், இயேசு கூறின வார்த்தைகள் அருவறுக்கத்தக்கதான வேதப் புரட்டாக அவர்களுக்குத் தோன்றியிருக்கும். அதையும் அவர் அறிந்தே

யிருந்தார். ஆனாலும், இந்த ஆழமான சத்தியத்தை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியத்தால் அதைச் சொன்னார்.

## உடன்படிக்கையின் அப்பம்

சிலுவை மரணத்திற்கு முன் அவர் அவர்களைப் பார்த்து ''வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது'' என்றார். [மத்தேயு 26:26] இதே கருத்து கீழ்க்காணும் வசனங்களில் மேலும் வற்புறுத்தப்படுகிறது.

1.''இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார்''[லூக்கா 22:19]

2.''இந்த அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.''[1 கொரிந்தியர் 11:26]

ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு இரண்டு விதமான நினைவு கூறும் விருந்துகள் இருந்தன. முதலாவது, ஓய்வு நாளன்று வாரந்தோறும் கர்த்தருடைய சந்நதியில் வைக்க வேண்டும். இது நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகனபலியாகும். அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும். [லேவியராகமம் 24:5-9]

இரண்டாவதாக, இன்றுள்ள பல நாமகரணக் கிறிஸ்தவ சபைகளில், கிறிஸ்து நமக்கு நியமித்த நினைவுகூறுதலின் சின்னத்தை [கர்த்தரின் பந்தியை] மாதமொருமுறையோ, காலாண்டுக்கு ஒருமுறையோ, ஆண்டுக்கொருமுறையோ அனுசரித்து வருகிறார்கள். புளிப்பில்லாத அப்பமும், திராட்சை ரசத்துக்கு பதிலாக வேறு ஏதோ ஒரு பானம் பயன்படுத்துகிறார்கள்.

பழைய ஏற்பாட்டின் கீழ் இருந்தவர்கள் இந்தப் பந்திக்கு இடைவெளியைப்பற்றியோ, அதில் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பற்றியோ அறிந்து கொள்வது ஒன்றும் சிரமமான காரியமல்ல. இருந்தாலும் ஏனோ அப்படிச் செய்கிறார்கள்.

இன்று உண்மைக் கிறிஸ்துவர்கள் வாரத்தின் முதல் நாளில் சபையாகக் கூடிவரும் நோக்கம் அப்பத்திலும், திராட்சை ரசத்திலும் பங்கு பெறுவதற்காகத்தான். இதுவே கர்த்தருடைய இராப் போஜனம்.[1 கொரிந்தியர் 11:22,24,26]

மூன்றாவதாக, இது குறித்து 1 கொரிந்தியர் 11:28 ஆம் வசனத்தில் கூறப்பட்டிருப்பதைப் பார்ப்போம். ''எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய் போஜனம் பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனம் பண்ணுகிறான்.

நான்காவது, யோவான் 6:54 ஆம் வசனத்தில் ''என் மாம் சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு.'' என்று வாசிக்கிறோம்.

ஐந்தாவதாக, யோவான் 6:57 ஆம் வசனம் ''ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவில் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.'' என்று கூறுவதைக் காண்கிறோம்.

ஆகவே, நமது ஆவிக்குரிய ஜீவன் இந்தப் பரிசுத்தப் பந்தியிலே தவறாது பங்கு பெறுவதைப் பொருத்தே இருக்கிறது. அவர் மரித்து நமக்காக ஜீவனைக் கொடுத்ததால் நாம் பிழைத் திருக்கிறோம். அவரும் நம்மில் ஜீவிக்கிறார்.

## அவரது சிரசும் சரீரமும்

'' எப்படியெனில் சரீரம் ஒன்று: அதற்கு அவயங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரமாய் கிறிஸ்துவும் இருக்கிறார். ... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயங்களாயுமிருக்கிறீர்கள்'' [1 கொரிந்தியர் 12:12,27]

கிறிஸ்துவே சபையின் தலையென்றும், சபையே சரீரம் என்றும் கூறப்படுகிறது.

இப்பொழுது, கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கினார் என்ற பாடம் நம் சிந்தையில், எண்ணங்களில் ஊன்றியிருக்கிறது. தமக்குரியதான அதிகாரத்தையும், வல்லமையையும் வரையரைப் படுத்தினார். மனுக்குலத்திற்கு பாவத்தினால் வரும் பெரும் அழிவிலிருந்து விலக்கி இரட்சிப்பதற்காகவே செயல்பட்டார் என்ற தொடர் விளக்கத்தைப் புரிந்து கொள்ள முடிகிறதா?

அவர் மனிதப் பிறப்பெடுத்து தமது அதிகாரம், வல்லமைக்கு வரையறை வகுத்துக்கொண்டது போதாது. நமது பாவத்துக்காக இழிவான சிலுவை மரணத்தைத் தழுவிக் கொண்டது நமது பாவங்களைத் தமது பாவமாக ஏற்றுக் கொண்டதும் போதாது. அவர் உயிர்த்தெழுந்தபின் இந்த ஈராயிரம் ஆண்டுகளில் மனிதகுலம் என்ற ஓர் சரீரத்துக்குத் தாமே தலை என்பதை ஓர் நிலைக்குள் அமைத்துக் கொண்டார். அடிக்கடி நாம் நமது சரீங்களைத் தாக்கும் பலவீனங்களைக் கண்டு, நமது வலுவான சரீரத்தின் இணைக்கப்பட்ட பலவீனமான ஆவியைக் குறித்தோ, பலவீனமான ஆவியைப் பெற்ற சரீரத்தைக் குறித்தோ கலங்குகிறோம். முதுமை கூட நம்மில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மனக்குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது. இவ்விதமான நெருக்கங்களின் மத்தியில் வாழ்வது நம்மை எவ்வளவு சீரழித்து விடுகிறது.

## சரீரத்தில் ஏற்படும் குறைச்சல்கள்

சரீரத்தைப் பொறுத்தமட்டில் சிரசின் பணி என்ன? எண்ணம், இச்சை, அனிச்சை செயல்களுக்கான தோற்றுவாயாகும். அறிவு கவனிக்கிறது, உயர்வை நாடுகிறது, சித்தம் கொள்கிறது. அந்தக் கனவுகளை நனவாக்க வேண்டுமானால், சரீரத்திலுள்ள அனைத்து அவயவங்களும் ஒன்றுபட்டுச் செயல் பட வேண்டும்.

ஆதிமுதல் கடவுள் யாது செய்திருக்கிறார்? மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு! வழிவகை கண்டிருக்கிறார்? கிறிஸ்து மரித்ததினால் அந்த இலக்கு நிறைவடைந்தது. கிறிஸ்துவின் மரணம் மனுக்குலத்திற்கு பயன் படவேண்டுமானால் கிறிஸ்துவால் செய்து முடிக்கப்பட்ட காரியங்களை மனுக்குலம் அறிந்திருக்க வேண்டும்.

தேவன் வானத்திலிருந்து நேரடியாக மனுக்குலத்தோடு பேசுகிறாரா? கிறிஸ்து ஏதோ ஒரு அற்புதத்தின் மூலமாக மனித இருதயங்களை மாற்றுகிறாறா? அல்லது தேவ தூதர்கள் உலகெங்கும் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்களா? இல்லையே

அப்படியானால்இந்தப் பொக்கிஷத்தைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு யாரிடமுள்ளது? அவரது சரீரமாகிய மனுக்குலத்திடமே அந்தப் பொறுப்பு உள்ளது. சிரசானது உலகின் விழுந்து போன நிலையைக் காணச் 'செய்கிறது. வீழ்ந்து போனதைக் குறித்துக் கவலை கொள்கிறது. வேதனைப் படுகிறது. சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள அன்பையும், மனதுருக்கத்தையும் மனுக்குலம் அறிய வேண்டுமென்று விரும்புகிறது. இந்தச் செய்தி அறிவிலிருந்து கண்ணுக்கும், நாவுக்கும், கைகளுக்கும், கால்களுக்கும், இருதயத்துக்கும் அனுப்பப்படுகிறது. மனுக்குலத்திடமிருந்து உரிய மறுமொழி கிட்டுமானால், தமது நித்திய காலத்திட்டம் நன்முறையில் நிறைவேறுகிறதேயென்று தேவனுக்கு எத்தனை மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

இந்தச் செயலுக்குரிய விளைவு தேவ மனதிலிருந்து புறப்படுகிறது. ஆனால் அந்த சிரசின் கட்டளையை அவயவங்கள் ஏற்கத் தவறினால் மனம் எவ்வளவாக வேதனையும், ஏமாற்றமும் அடையும். நமது மந்தச் செயல்களினாலும், செயலற்ற தன்மையினாலும் அவரது இயக்கம் எவ்வாறு முடக்கப்பட்டு விடும் என்று சற்றே யோசித்து பாருங்கள். மேலும், சரீரமாகிய சபையே அவரை மறுதலித்து தீங்கை விளைவித்துவிடுகிறதென்றால் அவர் எவ்வளவாக வேதனைப்படுவார் என்று எண்ணிப் பாருங்கள்.

பூரண பரிசுத்தராகிய அவர் பொய்யையும், ஏமாற்றுதலையும், இழிவான எண்ணத்தில் இன்பம் காணுதலையும்,

குடும்பங்கள் சிதறடிக்கப்படுவதையும், உதவியற்றோர்கள் புறக்கணிக்கப்படுதலையும் விரும்புகிறார்.

நாம் அவருக்குள் ஜீவிப்பதற்காக வாரந்தோறும் அவரது சரீரத்தில் பங்கு பெறுகிறோம். நம்மில் அவர் ஜீவிக்க வேண்டுமென்பதற்காக நாம் அவரது சரீரமாயிருக்கிறோம்.

## உடன்படிக்கையின் இரக்கம்

. " பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்த மாயிருக்கிறது" என்று கூறினார்.[மத்தேயு 26:27,28]

அவரது சரீரம் எப்படி நமக்கு ஜீவனாயிருக்கிறதோ அப்படியே அவரது இரத்தமும் நமக்கு ஜீவனாயிருக்கிறது. சாதாரண உலகில் ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கும் போதுதான் இரத்தத்தை காண முடிகிறது. அந்த அசம்பாவிதம் பெரிதாகும்போது மரணம் சம்பவிக்கிறது. ஆகவே, இரத்தம் சிந்துதலும், மரணமும் ஒன்றுக் கொன்று இணைக்கப்பட்டதாயிருக்கிறது.

"மாம்சத்தை அதன் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டும். "[ஆதியாகமம் 9:4] என்று ஆதிமுதல் நான் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

நமது சரீரத்தில் இரத்தத்தின் குணங்களும், பணிகளும் என்ன? இரத்தம் சரீரத்தின் உயிர் என்பது எப்படி?

### அது என்னென்ன செய்கிறது?

போஷித்தல்

சுத்திகரித்தல்

பாதுகாத்தல்

என்ற பிரதானமான முத்தொழிலைச் செய்கிறது.

### இரத்தம் போஷிக்கிறது

சிவப்பு இரத்த அணுக்கள் இரத்தத்தின் ஒரு பாகம், அது சரீரத்திலுள்ள பலகோடி அணுக்களை போஷிக்கிறது. மற்றும் சுத்திகரிக்கிறது. இந்த இரத்த ஓட்டத்தில் சிவப்பு அணுக்களின் சுழற்சி உணவு, தாது உப்புக்கள், பிராணவாயு ஆகியவற்றைச் சுமந்து செல்கிறது. இதனை ஒரு சரக்கேற்றிச் செல்லும் சிறு சிறு படகுகளுக்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு அணுக்களுக்கும் தேவையான சத்துக்களை உயிர்வாழவேண்டி இரத்தத்திலிருந்து 24 மணி நேரமும் இடைவிடாமல் பெற்றுக் கொள்கின்றன. இந்த இரத்த ஓட்டத்தின் ஒரு சுழற்சி நேரம் 20 நிமிடங்களாகும்.

பிறகு அந்த சிவப்பு அணுப்படகுகள் தமது சுமையைக் காலி செய்த பின்னர் அணுக்களிலிருந்து கழிவுப்பொருள்களாகிய புதுச்சுமையை சிறுநீரகத்திற்கு எடுத்துச் செல்கிறது. அங்கே சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் தன் இயக்கத்தைத் தொடர இருதயத்திற்கு வந்து சேர்கிறது.

சரீரத்தில் உள்ள அணுக்களுக்கு பிராண வாயுவும், சத்துக்களும் கிடைக்கும் வரைக்கும், அதிலிருந்து கழிவுப் பொருள்கள் அகற்றப்படுவரைக்கும்

இரத்தஓட்டம் தடைபட்டுவிட்டால், அணுக்களுக்கு பிராண வாயு கிடைக்காததினால் பாதிப்புக்குள்ளாகி விஷத்தன்மை யாகிவிடும். பிராணவாயு கிடைக்கவில்லையென்றால் சரீரம் சில வினாடிகளில் செத்துப்போகும்.

## இந்த நவீன மருந்துகள் என்ன செய்கின்றன?

ஏற்கனவே போர்வீரனாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வெள்ளை அணுக்களுக்கு ஆதரவாக செயல்பட்டு, இரத்தத்தில் அந்த நோய்க்கு எதிரான வெள்ளை அணுக்களை கூடுதலாக உற்பத்தி செய்து நோயை விரட்டியடிக்கிறது.

உடலின் பாதுகாப்புப் பணிகளைச் செய்துவரும் வெள்ளை அணுக்கள் இல்லையென்றால் எந்த ஒரு நவீன மருந்துகளும் எடுபடாமல் போய்விடும்.

இதற்கு எய்ட்ஸ் நோய் ஒரு சரியான உதாரணமாகும்.

## இரத்தம் சுத்திகரிக்கிறது.

வெள்ளை அணுக்களின் அடுத்த பணி சுத்திகரித்தல், எதிர்ப்புச் சக்திகளை முறியடித்த அதே நேரத்திலேயே தனது சுத்திகரிப்புப் பணியையும் செய்கிறது. சேதமடைந்து, இறந்துபோன அணுக்களை உடல் முழுவதிலிருந்தும் அகற்றிப் போட்டால்தான் இரத்தம் தன் இயல்பான பணியைச் செய்யமுடியும்.

உடல் பாகம் பாதிப்பு, சிவந்து போதல், வீக்கம், காய்ச்சல், புண் ஆகியவை ஒரு சரீரத்தில் இரத்தம் தன் பணியைச் சரிவரச்செய்து வருகிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

மெய்தான், நாம் இரத்தத்தையும் மரணத்தையும் இணைத்தே காண்கிறோம். இரத்தம் ஒவ்வொரு சொட்டாக சொட்டும் போது தான் ஒவ்வொரு வினாடியும் நமது உயிரை இரத்தம் பாதுகாத்து வந்தது என்பதை புரிந்து கொள்ளமுடியும். இதைச் சரியாகப் புரிந்து கொண்டால், இயேசு பாத்திரத்தை எடுத்து கூறிய சொற்களை எளிதில் புரிந்து கொள்ளமுடியும்.

''இதை பானம் பண்ணுங்கள் ..... இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது''[மத்தேயு 26:27,28]

''எவனொருவன் என் மாம்சத்தைப் புசித்து இரத்தத்தை பானம் பண்ணுகிறானோ அவனுக்கு நித்திய ஜீவனுண்டு''[யோவான் 6:54] என்ற வசனத்தின் உட்கருத்தை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

ஏனெனில் ஜீவன் [போஷித்தலும், சாரமும்] இரத்தத்தில் தானே இருக்கிறது. ''அவருடைய குமாரனாகிய இயேசுவின் இரத்தம் நம்முடைய எல்லாப்பாவங்களையும் சுத்திகரிக்கும்.'' [1 யோவான் 1:7]

இரத்தம் எவ்வாறு நச்சுத்தன்மைகளையும் மேற்கொள்ளுகிறதோ அவ்வாறே ''ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே அவர்கள் அவனை ஜெயித்தார்கள்.'' [வெளிப்படுத்தின சுவிசேஷம் 12:11] என்று வேதம் கூறுவதையும் இங்கே நாம் இணைத்து உணரவேண்டும்.

அவரது இரத்தம் நம்மை வெற்றிகொள்ளச் செய்கிறது. ஏனெனில் அவர் சிந்திய இரத்தம் ஏற்கனவே நமக்கு ஜெயம் கொடுத்திருக்கிறது.'' நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்''. [யோவான் 16:33]

அவருடைய இரத்தத்தின் அடையாளச் சின்னமாக திராட்சை ரசத்தை குடிக்கிறோம். ஏனெனில் நமது சரீரத்திலுள்ள இரத்த ஓட்டம், சரீரத்திற்கு என்ன விளைவுகளை, நன்மைகளை ஏற்படுத்துகிறதோ அவ்வாறே சிலுவையில் சிந்தப்பட்ட அவரது இரத்தமும் அப்பணியைச் செய்கிறது.

1. ஞானஸ்நானம் என்பது இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நினைவு படுத்திக்காட்டும் விளக்கமாகும். அவர் எவ்விதமாக உலகப்பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டு, நமக்காக மரித்தாரோ அவ்விதமாகவே நாமும் செய்கிறோம் என்பதை உறுதிபடக் காட்டுவதாகும். ஞானஸ்நானம் என்பது உண்மையிலேயே மரணம் என்பதையும் தாண்டி புதிய சிருஷ்டி என்ற அளவுக்கு ஆகிறது. [யோவான் 3:35] சரீரப் பிரகாரமான பிறப்பு என்பது தண்ணீர், இரத்தம், ஆவி ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்தக் கருத்தொற்றுமையை 'யோவான் 5:8 ஆம் வசனம் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. அது, இதோ ''ஆவி ஜலம் இரத்தம் என்பவைகளே இம்மூன்றும் ஒருமைப் பட்டிருக்கின்றன.''[யோவான் 5:8]

ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுவது என்பது ஆவிக்குரிய பிறப்பை நடத்திக் காட்டுகிறது. தேவ ஆவியானது மறைபொருளாக இருந்து நமக்குள்ளான ஆவிக்குரிய வாழ்க்கையை புதுப்பிக்கிறது.

கிறிஸ்துவின் இரத்தம் நமது பழைய பாவங்களைச் சுத்திகரித்து, நமக்குள் பாய்ந்து போஷித்து பாதுகாத்து புதிய வாழ்க்கையை தொடர்ச்சியாக புதிப்பித்துக் கொண்டேயிருக்கிறது.

2. கர்த்தரின் பந்தி [இராப் போஜனம்] என்பது வாரத்தின் முதல்நாள் தோறும் அவரது மரணத்தையும், உயிர்தெழுதலையும் நினைவு கூறும் அடையாளமாகும். நமது ஜீவியத்தையும், அவர் மீண்டும் வருவதையும் நாம் மறுரூபமாவோம் என்பதையும் உள்ளடக்கியது.

நமது இரட்சிப்புக்கு அடையாளமாகவுள்ள இந்த முக்கியமான இரண்டு அனுசரிப்புக்களையும் அடிக்கடி நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இல்லையென்றால் இந்த இரண்டு காரியங்களைப் பற்றி இவ்வளவு வற்புறுத்திச் சொல்லியிருக்க மாட்டார்.

ஆகவே, ஞானஸ்நானத்தையும், கர்த்தரின் பந்தியையும் மிக மேன்மையானதென்றே எண்ண வேண்டும். குறைத்து எண்ணுதல் கூடாது. அவைகளை நிறைவேற்றுவதற்கு அதிக நேரமோ, காலமோ பிடிப்பதில்லை. மனச் சோர்வடையச் செய்வதுமல்ல. இவற்றை மிக ஜாக்கிரதையோடு கடைப்பிடிக்கும்போது நாம் ஆவிக்குரிய வகையில் நலம் பெறுகிறோம்.

கர்த்தரின் பந்தியில் பங்குபெறுவதற்கு நம்மை நாமே தயாராகித் தகுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். தகுதியை நிதானித்து அறிந்து கொள்ள வேண்டும்.

அ. இந்த நினைவுச் சின்னமானது வெறும் சடங்காச் சாரங்களுக்கு மேலானது என்பதை முழுவதுமாக நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆ. இவைகள் பழையேற்பாட்டில் நிழலோட்டமாய்க் காணப்பட்டன. எனவே இவைகள் பயபக்தியுடன்கடைப்பிடிக் கப்படுகிறதா?

மிகத் துல்லியமான கற்பனைகளைக் கொடுத்தார். அவை தவறாது பின்பற்றப்பட்டன. லேவியராகமத்தில் கூறப்பட்ட காட்சியின் அப்பம் [லேவியராகமம் 24:5-8]வாரந்தோறும் திட்டமான அளவுகளோடு செய்யப்பட்டது. எகிப்து தேசத்தில் யூதமக்கள் இந்த விருந்துக்காக சிந்தனையின்றி அருகில் வசித்த எகிப்தியரிடம் அப்பத்தை வாங்கியிருப்பார்கள் என்று நினைக்க முடியுமா?

பவுல் சொன்னவைகள் தற்காலத்திற்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில்: :''இதினிமித்தம் உங்களில் அனேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறீர்கள் அனேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.'' என்று கூறியிருக்கின்றார்கள்.

இந்த அனுசரிப்பைக் குறித்து எந்தச் சட்ட நியதியுமில்லை. இது நமது மனப் பக்குவத்தைக் பொறுத்திருக்கிறது. இந்தக் காரியங்களில் கருத்துள்ளவர்களாயிருந்தால் வேத வசனங்களில் கூறப்பட்டவைகளைப்பின்பற்றுபவர்களாக இருப்போம்.

மரியாளும், மார்த்தாளும் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் சாதாரணமாக நினைத்து கடைகளில் வாங்கியிருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க முடிகிறதா, அப்பம் செய்ய எங்களுக்குத் தெரியாது, அது கடினமான காரியம் என்று ஒதுங்கியிருந்திருப் பார்களோ, நாமாயிருந்தால் அப்படிக் கூடச் செய்திருப்போம்.

ஆனால் அந்தப் பெண்கள் [மரியாள், மார்த்தாள்] ஒருவரோடுடொருவர் போட்டியிட்டுக் கொண்டு, அந்தக் காரியத்தைத் தங்கள் சொந்தக் கைகளினாலே செய்து ஆராதானைக்கு வழங்கினார்கள். மாவை எடுத்து, எண்ணெய் சேர்த்து, பிசைந்து, அப்பத்தைச் செய்யும்போது, முணுமுணுப் புடனோ,வெறுப்புடனோ அவர்களது மனம் இருந்திருக்காது. அதேநேரம், அதைச் செய்வதும் ஆராதனைக்கு ஒப்பான காரியம் என்றே எண்ணியிருப்பார்கள். அப்பொழுது ஆண்டவரின் திவ்ய பிரசன்னத்தையும் கண்டிருப்பார்கள்.

அப்பமும் ரசமும் முக்கியத்துவமுடையதாயிருக்க, அப்பம் கையினால் கருத்துடன் செய்யப்படவேண்டும் என்றும், ரசம் மாத்திரம் வெளியில் வாங்கப்படலாம் என்று கூறுவது எப்படியென்று கேட்கலாம். இரண்டையும் நாமே செய்வது மிக மிக நல்லது. ஆனால், சீதோஷ்ணம், அல்லது போதிய நிலம் ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் இல்லாமலிருக்கலாம். அதனால் ரசம் தயாரிப்பது முடியாத ஒன்று. எனவே ரசம் வெளியிலிருந்து வாங்கப்படலாம். அதுமட்டுமல்ல, இவ்விரண்டையும் நாமே செய்தாக வேண்டு மென்று கட்டளை எதுவும் கொடுக்கப்படவில்லை.

இ. பந்தியில் பங்குபெறும்போது சபையாக அதிக நேரம் மனதை ஆயத்தம் செய்து பின்னர்தான் பங்கு பெற வேண்டும். நம்மைச் சோதித்துப் பார்க்க வேண்டும். ''எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன்.'' [1 கொரிந்தியர் 11:28]

தவறுகளை அறிக்கையிட வாய்ப்புத் தர வேண்டும். யாருக்குத் தவறிழைத்திருந்தாலும் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்விதமாக அனுசரிக்கப்படவேண்டும்.

ஈ. பிறகு இது தொடர்பான வேதவசனங்களை, சிந்தனை விளக்கங்களை இது எந்தப் பின்னணியில் உருவானது போன்றவற்றை ஆராய்ந்து இந்த நினைவு கூறுதலைப் பற்றி அறிய வேண்டும். நோக்கத்தை மறந்து விட்டு சடங்குகளில் மூழ்கிவிடலாகாது. சபையில் கூடுவதும் ஆராதிப்பதும், அனுசரிப்பதும் ஏதோ ஒரு கடன் என்று எண்ணிவிடலாகாது.

நாம் சில சமயங்களில் கர்த்தருடைய நாளில் சபையோடோ, கிறிஸ்தவர்களோடோ இல்லாமல் தனித்திருக்க நேரிடலாம்.

அவ்வாறு ஒரு சமயம், கர்த்தருடைய பந்தியில் இணைய வேண்டிய நாளில் நாங்கள் ஒரு பாழடைந்த பழங்கால ரோம கட்டிட அரங்கின் நிழலில் உட்கார்ந்திருந்தோம். கர்த்தருடைய பந்திக்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தபோது, ரோம ராஜ்யத்தின்

பழங்காலச் சிந்தனைகள் வந்து எங்களை பிரமிக்கச் செய்து கொண்டிருந்தது.

அன்று அந்த நாட்டின் முதன்மையான நோக்கம் என்னவாக இருந்தது என்றால், எவ்வாறாகிலும் கிறிஸ்தவ மதத்தைஇல்லாமல் ஆக்கிவிட வேண்டும் என்பதுதான் அதன் நோக்கமாக இருந்தது.

அதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர்களுக்கென்று ஒரு படையோ ஆயுதங்களோ, வழிநடத்த ஓர் அமைப்போ இருக்கவில்லை. அது மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள் தொழுது கொள்ளும் தேவனுடைய மகிமையைக் கூறி அறிவிக்க கல்வெட்டுகளோ, நினைவுச் சின்னங்களோ கிடையாது. ஆனால், அவர்களிடமிருந்த எளிதான நினைவுச் சின்னம் ஒன்றுதான், அதுதான் இந்த அப்பமும்,திராச்சை ரசமும்.

நூற்றாண்டுகள் நகர்ந்து விட்டன. ரோம ராஜ்யம் தகர்ந்துவிட்டது. ஆனால், இந்த அப்பமும் ரசமும் வரலாற்றிலும், கிறிஸ்தவ வாழ்விலும் நிலைத்து நின்றிருக்கிறது. இதை எவரும் எண்ணிக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். ஆனாலும், பலபல நூற்றாண்டுகள் உருண்டோடி விட்டன.

வரலாற்றில் எந்த ஒரு நினைவுச் சின்னமும் நிலைத்திருக் கவில்லை. காலப்போக்கில் கலைந்து போனதையே பார்க்கிறோம்.

ஆனால், வரலாறு கடந்த ஒரு நினைவுச்சின்னம் இன்னும் நம்மத்தியில் அனுசரிக்கப்படுகிறது.

இவைகளெல்லாம் எங்கள் மனதில் அலைபாய்ந்து கொண்டிருந்தது. அந்த ரோம சின்னத்தின் இடிபாடுகளுக் கிடையிலே நாங்கள் எங்கள் கரங்களில் எந்தவொரு இடிபாடுகளுக்கும் ஆட்படாத நினைவுச் சின்னங்களான அப்பமும் ரசமும் இருந்தது.

## அப்பம்

ஒரு கோப்பை சாதாரண மாவு

மூன்று தேக்கரண்டி ஒலிவ எண்ணெய்

கொஞ்சம் உப்பு

எண்ணெயை மாவில் ஊற்றி இரண்டு தேக்கரண்டி தண்ணீர் சேர்த்து, ஒன்று கூட்டிப் பிசைந்து தட்டையான ஒரு பரப்பின் மீது வைத்து சிறு சிறு துண்டுகளாக்கி, அடுப்பில் வைத்து 450 டிகிரி சூடாக்கி பழுப்பு நிறமாகும் வரை வைத்து இறக்க வேண்டும்.

## அரசாட்சி செய்யும் தேவன்

தேவன் ஆவிக்குரிய உலகில் ஆளுகை செய்கிறார் என்பதையறிவோம். பாவம் நிறைந்த இந்த உலகை ஆளுகை செய்கிறாரா என்று அனேகர் உள்ளத்தில் கேள்வி எழுகிறது. தேவ வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இங்கு தேவ ஆளுகையை உறுதி செய்வதோடு மட்டுமல்ல. இயேசு இந்த பூலோகத்திற்கும் பரலோகத்திற்கும் ஆண்டவர் என்று உயர்த்திக் காட்டுகிறது.

''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது''[மத்தேயு 28:18]

''நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம் மட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத் துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும் ''[தானியேல் 7:13,14] என்றும்

''ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதிராஜாவு மாயிருக்கிறார்''[வெளிப்படுத்தின விசேஷம் 17:14] என்றும் வாசிக்கிறோம்.

இயேசுக் கிறிஸ்து மனிதரூபத்திலிருந்த போது, '' ஜீவனுக்குப் போகிறவாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.'' என்று கூறியிருக்கிறார். [மத்தேயு 7:14]

## தேவன் இயற்கையின் மீது ஆளுகை செய்கிறார்.

தேவன் உலகத்தோடு உறவாடிய வரலாறுதான் வேதம் என்பதை அறிய வேண்டும்.

கர்த்தரையோ சாத்தானையோ யாரை நேசித்து கீழ்ப்படிவது என்பதை சிந்தித்து முடிவெடுக்கும் உரிமையையும் சுதந்திரத் தையும் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும் பான்மையான மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதை விட தன்னைப போலுள்ள ஒருவனைச் சேவிப்பதையே வசதியாகக் கொண்டிருக் கின்றனர்.

இருந்த போதிலும், இந்த அண்டசராசரம் முழுமைக்குமான அதிகாரத்தைக் கர்த்தர் தன் கையில் வைத்திருக்கிறார். இயற்கை யின் சட்டதிட்டங்களை வகுத்தவரும் அவரே. அவரே கடல்களுக்கு எல்லை வகுத்தவர். கடலே நீ இதுவரை வரலாம் மேற்கொண்டு வராதே என்றும் உனது வீம்பான அலைகளை நிறுத்து என்று கூறுகிறவரும் அவரே.

''சர்வத்தையும் தம்முடைய வல்லமையினாலே தாங்கு கிறார்'' என்று எபிரெயர் 1:1-3 வசனங்களில் பார்க்க முடிகிறது.

## அரசாங்கங்களின் மேல்அதிகாரம் செலுத்துகிறார்

உலகில் நல்ல தலைவர்களையோ, தீயவர்களையோ உருவாக்குவதில் தேவன் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், உலக சம்பவங்களில் தமது அதிகாரத்தைச் செலுத்தி, நற்காரியங்கள் நடைபெறச் செய்யவும், தீய சக்தியுள்ளவர்களை பயன்படுத்தி

தேவையான நேரத்தில் மனிதர்களை ஒழுங்கு படுத்தவும், தண்டிக்கவும் செய்கிறார்.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாக இருந்தபோது, கர்த்தர் ராஜாவாகிய பார்வோனிடம் பேசி, ''என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும் படியாகவும் என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலை நிறுத்தினேன். நீ என் ஜனங்களைப் போக விடாமல் இன்னும் அவர்களுக்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயா'' என்று கேட்கிறதைப் பார்க்கிறோம். [யாத்திராகமம் 9:16,17]

இஸ்ரவேலர்களைப் பார்த்து ''இதோ இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசிர்வாதத்தையும் வைக்கிறேன். இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரில் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசிர்வாதமும் எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியை விட்டு விலகி நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்''

இஸ்ரவேல் கீழ்ப்படியாமல் விலகி விலகி போனது. அதனால் திரும்பத் திரும்பத் தம்மைச் சுற்றியுள்ள போர்புரியும் நாடுகளின் மூலமாக இஸ்ரவேலைத் தண்டித்தார். இறுதியாக கொடூரமான அசீரியா ராஜ்யத்தை எழும்பி வரப் பண்ணி இஸ்ரவேலரை மேற்கொண்டு மீதியானவர்களை சிறைப்பிடித்துச் செல்ல அனுமதித்தார்.

''என் கோபத்தின் கோலாகிய அசீரியனுக்கு ஐயோ, அவன் கையிலிருக்கிறது என் சினத்தின் தண்டாயுதம். அவபக்தியான ஜனங்களுக்கு விரோதமாய் நான் அவனை அனுப்பி, எனக்குக் கோபமூட்டின ஜனங்களைக் கொள்ளையிடவும், சூறையாடவும், அதை வீதிகளில் சேற்றைப் போல் மிதித்துப் போடவும் அவனுக்குக் கட்டளை கொடுப்பேன். அவனோ அப்படி எண்ணுகிறதுமில்லை...அவன் இருதயம் அப்படிப்பட்டவைகளை

நினைக்கிறதுமில்லை; அனேகம் ஜாதிகளை அழிக்கவும், சங்கரிக்கவுமே தன் மனதிலே நினைவு கொள்ளுகிறான். ஆதலால் ஆண்டவர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் தமது செயலை யெல்லாம் முடித்திருக்கும்போது, அசீரிய ராஜாவினுடைய பெருமையான நெஞ்சின்வினையையும், அவன் கண்களின் மேட்டிமையான பார்வையையும் நான் விசாரிப்பேன் என்கிறார். அவன் என் கையின் பெலத்தினாலும், என் ஞானத்தினாலும் இதைச் செய்தேன்; நான் புத்திமான், நான் ஜனங்களின் எல்லைகளை மாற்றி, அவர்கள் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டு வல்லவனைப்போல் குடிகளைத் தாழ்த்தினேன்.

கோடாரியானது தன்னை வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமா? வாளானது தன்னைக் கையாளு கிறவனுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டலாமோ, பாராட்டி னால் தடியானது தன்னைப் பிடித்தவனை மிரட்டினாற் போலவும், கோலானது நான் மரக்கட்டையல்லவென்று எழும்பினாற்போலவும் இருக்குமே.

ஆகையால் சீயோனில் வாசமாயிருக்கிற என் ஜனமே அசீரியனுக்குப் பயப்படாதே, அவன் உன்னைக் கோலால் அடித்து, எகிப்தியரைப் போல் தன் தண்டாயுதத்தை உன்மேல் ஓங்குவான். ஆனாலும் இன்னுங் கொஞ்சங்காலத்துக்குள்ளே என் உக்கிரமும் அவர்களை சங்கரிக்கப் போகிறதினால் என் கோபமும் தீர்ந்து போம் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். ஓரேப் கன்மலையண்டையிலே மீதியானியர் வெட்டுண்டது போல் சேனைகளின் கர்த்தர் அவன் மேல் ஒரு சவுக்கை எழும்பி வரப்பண்ணி, எகிப்திலே தமது கோலை கடலின் மேல் ஓங்கினது போல் அதை அவன்மேல் ஓங்கினான்'' என்று கர்த்தரின் தண்டிக்கும் கரத்தின் சினத்தைக்குறித்தும், அதன் காரியத்தைக் குறித்தும் வாசிக்கிறோம்.

இந்தப் பகுதிகளிலிருந்து அநேக காரியங்களை அறியலாம்.

1. கர்த்தர் தம் மக்களுக்குத் தெரிவு செய்து கொள்ளும் சுதந்திரத்தை அளிக்கிறார். கீழ்ப்படிகிறவர்களை ஆசிர்வதிக்கவும், கீழ்ப்படியாதவர்களை தண்டிக்கவும் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

2. மனிதன் தேவனோடு எவ்வகையான உறவை வைத்திருக்கிறானோ என்பதைப் பொறுத்தே தேவ நடவடிக்கையும் அமையும்.

''என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்புதமாக எண்ணாதே, அவரால் சோதிக்கப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ. அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். என்று பிள்ளைகளுக்குச் சொல்லியிருக்கிற புத்தி மதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களா யிருந்தால் தேவன் உங்களை புத்திரர்களாக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ'' [எபிரெயர் 12:5,6,7] எனவே,கீழ்ப்படியாத இஸ்ரேவேலரைப் போலிருந்தால் தேவ தண்டனைக்கு ஆளாக நேரிடும். அவன் தேவ குடும்பத்திலிருந்து விலக்கப்படநேரிடலாம்.

3. தேவகுடும்பத்திலில்லாதவர்கள் தம் இஷ்டம்போல் நடக்க விட்டு விடுவதைப் போல் காணப்படலாம். அல்லது, அவர்கள் அதிகாரத்தில் வலுத்து தீமை கலகம் செய்தலின் பாத்திரம் நிரம்பி வழியும்போது தேவதண்டனைக்குள்ளாகலாம்.

4. ஒரு நாடோ, ராஜாவோ அதிகாரமுடையவர்களாகத் தோன்றினாலும் உண்மையிலேயே அதிகாரமுடையவர் தேவனே. அவர் அனுமதிக்கிறார், பலப்படுத்துகிறார் அதிகாரத்திற்கு முடிவும் கட்டுகிறார்.

சரித்திரத்தில் வேறு ஒரு காலகட்டத்தில் பாபிலோன் மிக பலமிக்கதாக விளங்கியது. ஆனால் தேவனை விட்டு விலகியிருந்தது. அதை இஸ்ரவேலர்களில் மீதியாயிருந்தவர்களை

சீர்படுத்தி மீண்டும் தம்மிடம் திரும்பி வரச் செய்தார். நேபுகாத் நேச்சர் என்பவனை இப்பணிக்கு தேவன் எழும்பி வரப் பண்ணினார். ஆனால் நேபுகாத்நேச்சர் பெருமையடைந்து தன்னை உயர்த்தி ''இது என் வல்லமையினாலும், பராக்கிரமத்தினாலும் என் ராஜ்யத்தின் பிரதாபத்தை வெளிக்காட்ட நான் நிர்மாணித்த மகா பாபிலோன் அல்லவா'' என்று தள்ள பெருமைபடுத்திக் கொண்டான். [தானியேல் 4:30]

தேவன் அவனது குணத்தைக் கண்டிக்கும்படியாகத் தண்டித்தார். அதன் பின்னர் அவன் உணர்ந்து நேபுகாத்நேச்சராகிய நான் என் கண்களை வானத்திற்கு ஏறெடுத்தேன். என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது. அப்பொழுது நான் உன்னதமான வரை ஸ்தோத்திரித்து என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப் படுத்தினார். அவரது கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம். அவருடைய இராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் மக்களெல்லாரும் ஒன்றுமில்லையென்று எண்ணப் படுகிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியையும் நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி என்ன செய்கிறீர் என்று சொல்லத் தக்கவன் ஒருவனும் இல்லையென்றேன். [தானியேல் 4:34,35]

இயேசுவானவர் சிறைப்பிடிக்கப்பட்டு பிலாத்துவினால் விசாரிக்கப்படும்போது, பிலாத்து இயேசுவைப் பார்த்து,''நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலை செய்யவும் என்க்கதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா'' என்று கேட்டான். அதற்கு இயேசு''உமக்குக் கொடுக்கப்படாமலிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமிராது'' என்று கூறியதைப் பார்க்கிறோம். [யோவான் 19:10,11]

மீண்டும் இந்த அதிகாரம் பற்றி ஏரோதின் வாழ்க்கையில் காண்கிறோம். ''குறித்த நாளிலே ராஜவஸ்திரந்தரித்துக் கொண்டு சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து அவர்களுக்குப் பிரசங்கம்

பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல. இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான் அவன் புழுப்புழுத்துச் செத்தான்.

தொடர்ந்து ரோமர் 13:1-7 வசனங்களை வாசிக்கும்போது தேவ அதிகார இயக்கங்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

''எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன். ஏனென்றால் தேவனாலேயன்றி ஒரு அதிகாரமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமித்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்கு தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்கிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக் கிறார்கள். ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி யுண்டாகும்.

உனக்கு நன்மையுண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய் பிடித்திருக்கவில்லை. தீமை செய் கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால் நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல; மனசாட்சியினி மித்தமும் கீழ்ப்படிய வேண்டும்.

இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரர்களா யிருக்கிறார்களே. ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்.

எவனுக்கு பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள் எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்.''[ரோமர் 13:1-7] என்று இந்தப் பகுதியில் கண்டோம்.

ஆதியிலிருந்து மனிதன் தனது வட்டத்திற்குள் ஆளுகை செய்ய அனுமதிக்கவேபட்டிருக்கிறான். ஆனால் அவன் யாருக்கும் கீழ்ப்பட்டவன் என்பதையும் உணர வேண்டுமல்லவா. மனிதன் கீழ்ப்படிந்தாலும், எதிர்த்து நின்றாலும் தேவச் செயல்பாடுகள் வெளிப்பட அவன் ஒரு கருவியாகவே பயன்பட்டு வருகிறான். உண்மையான அதிகாரம் தேவனிடம்தான் உள்ளது.

## *ஆவிக்குரிய உலகிலும் தேவன் ஆளுகை செய்கிறார்*

நாம் கண்ணால் காணமுடியாத ஆவிக்குரிய உலகிலும் தேவ ஆளுகை இருக்கிறது.

தேவதூதர்களின் சேனையைக் குறித்து வேதம் கீழ்க் கண்டவாறு கூறியுள்ளது.

''பின்னும் நான் பார்த்தபோது சிங்காசனத்தையும், ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர் களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம், பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவும் இருந்தது'' [வெளிப்படுத்தின விசேஷம் 5:11]

இதேபோல் கீழப்படியாத தேவதூதர்களைப் பற்றியும் 2. பேதுருவில் கூறப்பட்டுள்ளதைப் பார்ப்போம்.

'' பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்தில் தள்ளி நியாயத் தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களால் ஒப்புக்கொடுத்து...என்று [2 பேதுரு 2:4] கூறுகிறது.

நமது ஆண்டவராகிய கிறிஸ்து, மரணத்திற்குப் பின்பு வரும் வாழ்வு குறித்தும், நிலை குறித்தும் ஓர் பட விளக்கம்போல்

லூக்காவில் கூறுகிறார். [லாசரு ஐசுவரியவான் உதாரணத்திலிருந்து]''அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.

மேலும், ''அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் பலி பீடத்தின் கீழே கண்டேன். அவர்கள் பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தை குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவர்கள் தங்களைப போலக் கொலைசெய்யப்படபோகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக் காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னும் கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. [வெளிப்படுத்தின விசேஷம் 6:9-11]

மேலும் வெளிப்படுத்தின விசேஷம் 7:9 ஆம் வசனம் கீழ்க்காணும் விதமாகக் கூறுகிறது. ''இவைகளுக்குப் பின் நான் பார்த்தபோது இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடிதது, சிங்காசனத்துக்குமுன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.

# உலகில் இரண்டு ராஜ்யங்கள்

இப் பிரபஞ்சத்தில் இருவேறு ராஜ்யங்கள் உள்ளன. இவை தேவனுடைய சகிப்புத் தன்மையினாலும், மனிதனுக்கு அவர் தந்த சுயாதீன சுதந்திரத்தினாலும் உண்டாயின.

அவைகளில் ஒன்று சாத்தானுடைய ராஜ்யம். கலகம் செய்த ஆவிகளின் காலம் தொடங்கி, பின்னர் ஆதாம் ஏவாள் நீதிக்குத் தலைவணங்குவதற்குப் பதிலாக கீழ்ப்படியாமையைத் தெரிந்து கொண்டது வரையிலுமானது. இந்த ராஜ்யத்தில் விழுந்துபோன தூதர்கள், பிசாசுகள், கீழ்ப்படியாமல் மரித்துப்போன மக்கள், கீழ்ப்படியாமல் உயிர்வாழும் மக்கள் என்று அனைவரும் அடங்குவர்.

மற்றொரு ராஜ்யம் கடவுளுக்குரியது. இதில் கடவுளின் பாதத்தில் ஆராதனை செய்கிறவர்களும், அவரது ஏவல்களைச் செய்கிறதுமான தேவதூதர்களும், மரித்த நீதிமான்களும், உயிருடன் வாழும் நீதிமான்களும் அடங்குவர்.

இந்த ராஜ்யத்தில் ஆபிரகாம் இருந்தார். இன்றும் வாழ்கிறார். ஏனோக்கு, எலியா, தானியேல் ஆகியோர்களும்கூட இருக்கிறார்கள்.

கிறிஸ்து தமது சபையின் மூலம் இந்தக் கர்த்தருக்குரிய ராஜ்யத்தைச் செழிக்கச் செய்வதற்காக மாம்சத்தில் பிறந்து வந்தார். இந்தக் குடும்பத்தில் நாம் பிறக்கும்போது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறோம். நாம் அந்தகார உலகிலிருந்து ஒளியின் ராஜ்யத்துக்குள் வந்து வாழ்ந்து வருகிறோம். அந்த ராஜ்யம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை.

''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜியத்திற்கு உட்படுத்தினார். அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்'' [கொலோசெயர் 1:13,18]

''கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்'' ரோமர் 16:16 இவ்வுலக வாழ்வை முடித்தபின் நமது ஆவி ஆவியுலக ராஜ்யத்தை அடைகிறது.

கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கி சிலுவை மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்திய காரணத்தினால், தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர்,பூமியின் கீழானோர் ஆகிய அனைவரின் முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக 'இயேசுக் கிறிஸ்து' என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கும் கொடுத்தார்.

தெய்வத்துவத்தில் ஒருவராகிய வார்த்தையானவர், ஆதிமுதல் ஆளுகை செய்கிறார். அவர் தம்மை வெறுமையாக்கினதினாலும், தேவனுக்கே உரியதான அதிகாரங்களை விட்டு விட்டபடியினாலும், மாம்சத்தில் பிறந்து தம்மை ஒடுக்கிக் கொண்டதினாலும், மனிதர்களுக்காக தாமே பாவமாகியதினாலும், மரணபரியந்தம் தம்மை தாழ்த்தியதினாலும் கர்த்தரால் மேன்மைப்படுத்தப்பட்டார். எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் இயேசு என்ற திரு நாமத்திற்கு முன்பு எல்லா முழங்கால்களும் ஒரு நாள் முடங்கும்.

அவர் மரணத்தை மேற்கொண்டு தாம் ஆதிமுதல் தமது மகிமையான நிலைக்குள் பிரவேசித்தார். மீண்டும் அந்த உரிமைகளையும், குணப்பண்புகளையும் திரும்பப் பெற உரிமை கொண்டாடுவதில்லை. பதிலாக, கர்த்தரே அந்த மகிமைகளைக் கொடுப்பதால் நாம் மகிமைப்படுகிறோம். தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. [மத்தேயு 28:18] கர்த்தர் அதைத் தருகிறார். அவர் ராஜாதிராஜா. பிரபஞ்சம் முழுமைக்கும் அவர் ஆளுநர். காணும் உலகம், பரலோகம் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.[தானியேல் 7:13,14]

அவரே ஆட்டுக்குட்டியானவர்.... கர்த்தாதி கர்த்தரும் ராஜாதிராஜாவுமானவர்[வெளிப்படுத்தின சுவிசேஷம் 17:14]அவரே இயேசுக்கிறிஸ்து. உலக அதிபதிகளுக்கு மன்னர். [வெளிப் படுத்தின சுவிசேஷம் 1:5] அவர் ஆளுகிறவரானதால் அவரைப் பற்றி கீழ்க்குறித்த விவரம் சொல்லப்படுகிறது.

வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களை வானத்தின் ஒரு முனை தொடங்கி மறுமுனை மட்டும் நாலு திசைகளிலும் கூட்டிச் சேர்ப்பார்கள். வானத்திலும் பூமியிலும் உள்ளவர் யாவரும் அவரது ஆளுகைக்குட்பட்டவர்களே.

"சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப் படுத்தினாரே ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப் படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லை என்பது வெளியரங்க மாயிருக்கிறது."[1 கொரிந்தியர் 15:27]

கர்த்தரிடமிருந்து பெற்ற அதிகாரத்தினால் கிறிஸ்து ஆளுகை செய்கிறார்.

## நித்திய குமாரன்

இயேசுவின் உயிர்த்தெழுதலினால் மனுக்குலத்துடனான சகோதர உறவையும் பெற்று கீழ்ப்படிதலினால் கர்த்தாதிகர்த்தரும் ராஜாதி ராஜாவாயுமானார். அந்த நிலைக்கு உயர்த்தப்பட்டார்.மனித ரூபமெடுத்து வெறுமையாக்கின தியாகத்தால் பெறப்பட்ட அதிகாரத்தில் ஆளுகையில் ஈராயிரமாண்டுகள் தொடர்ந்து வருகிறது.

### அடுத்த கால கட்டத்தில் என்ன நடைபெறப் போகிறது?

இந்த உலகக் காலம் முடிவடையும்போது நீதிமான்கள் புதிய வானத்திலும், புதிய பூமியிலும் வாசம் செய்யும் காலத்தில் நமது உறவுகள் எப்படியிருக்கும்?

வெளிப்படுத்தின சுவிசேஷம் 19:11-16 வசனங்கள் வார்த்தையானவர் நீதி செய்து ஆளுவதை விளக்குகிறது.

''பரலோகம் திறந்திருக்கக் கண்டேன், இதோ,ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது. அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர், அவர் நீதியாய் நியாந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினி ஜ்வாலையைப் போலிருந்தன. அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது.

இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே பரலோகத் திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.

புற ஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இரும்புக் கோலால் அவர்களை அரசாளுவார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதிராஜா, கர்தாதிகர்த்தர் என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது

''..தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்''. [2.தெசலோனிக்கேயர் 1:7,8]

தொடர்ந்து ''மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும்

திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப் பட்டவைகளின் படியே மரித்தோர் தாங்கள் தங்கள் கிரியை களுக்குத்தக்கதாக நியாயத் தீர்ப்படைந்தார்கள்''. [வெளிப்படுத்தின சுவிசேஷம் 20:12]

'' பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்தார்.''[யோவான் 5:22]

''கீழ்ப்படியாதவர்கள் நித்திய ஆக்கினை அடையும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்''[மத்தேயு 24:41,45]

''அதன்பின்பு முடிவுண்டாகும் அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜியத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாகிப் போகும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது பரிகரிக்கப்படும். கடைசி சத்துரு மரணம்.''[1கொரிந்தியர் 15:24-28]

மேலே சொல்லப்பட்ட இந்த வசனங்கள் இக்காலம் முதல் நியாயத்தீர்ப்புக் காலம் வரை என்ன நடைபெறும் என்று வெளிப்படுத்துகிறது. கடைசி சத்துருவான மரணத்தை வென்று நீதிமான்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டபின் மனிதரோடு சகோதரத்துவ உறவில் பிணைக்கப்பட்டவராகிய வார்த்தையானவர், தமது அழிவில்லாத நித்திய சரீரத்தை தள்ளி விடுவதில்லை. அதற்குப பதிலாக புதியவகையில் கர்த்தரே எல்லாவற்றிலும் எல்லாமாயிருக்க புதிய வகையில் இன்றும் ஆழமான வகையில் தம்மைக் கீழ்ப்படுத்துகிறார்.

எதிர்காலத்தில் காரியங்கள் எப்படியிருக்கும் தேவனுக்கும், மகன் வெளிப்படுத்தி அமைவதை விளக்குகிறது.

கலாத்தியர்[4:4-7] மனிதனுக்கும் தேவனுக்கும் மகன் தந்தை உறவு ஏற்படுகிறது என்பதை விளக்குகிறது.

''தாம் புத்திர சுவீகாரமடையும்படி, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது,ஸதிரீயினிடத்தில் பிறந்தவரும், நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தம்முடைய குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறார். நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்திரனாயு மிருக்கிறாய்.

இந்தப் பகுதியில் கடைசி வார்த்தை கிறிஸ்து. கிறிஸ்து என்பது நித்தியகாலமாக இருந்தவராகிய தெய்வத்துவத்தைக் குறிக்காமல் தேவகுமாரனும், மனித குமாரனாகவுமானவரையே குறிக்கிறது. வார்த்தையானவர் தம்மை வெறுமையாக்கி மனித ரூபமான பின்னானவரையே குறிக்கும். இவரே மனுக்குலத்துக்காக மரித்தவர்; உயிர்த்தவர். பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து சகோதரர்களுக்காக மன்றாட்டுச் செய்கிறவர்.

இந்த வார்த்தைகள் கிறிஸ்துவாகிய இந்தப்புதியவரைக் குறித்து என்ன சொல்லுகிறது? அவர்மூலமாக ஒரு தொடர்பு ஏற்படுகிறது என்று காட்டுகிறது. பிதாவாகிய தேவன் ஒரு மகிமையான சுதந்திர நிலையைக் கையில் ஏந்தியவராக இருக்கிறார். மனிதனும் அந்த மகிமையான சுதந்திரத்தைப் பெற இருக்கிறான். கிறிஸ்து தேவகுமாரனாகவும், மனுக்குலத்தின் சகோதரனாகவு மிருந்து கீழ்ப்படியும் மனிதனுக்கு நித்திய சுதந்திரம் மெய்யாகும்படி கிறிஸ்து இணைப்புப் பாலமாகிறார்.

நமது சிந்தனைப்படியில்லாமல் கிறிஸ்துவை தம்மிடத் திலிருந்து எடுத்துப்போட்டுவிட்டு அவர் ஆதியிலிருந்த தெய்வத்துவத்தில் சேர்க்கப்பட்டுவிட்டால், பிதாவிற்கு குமாரன்

என்ற உறவும், முதற்பேறானவர் என்ற நிலையும் இல்லாமல் போய்விடும். தேவ குடும்பத்தில் பிறந்தவர்களின் நிலை என்னவாகும். முதற்பேறானவர் இல்லையென்றாகும் போது சகோதர சகோதரிகளும் இல்லையே.

வேத வாக்கியங்கள் கூறுகிறபடி, நமது இருதயங்களில் அவருடைய ஆவியிருப்பதினால்தானே பிதா–குமாரன் என்ற உறவு ஏற்படுகிறது. இந்த உறவு நீடித்தால் மட்டுமே குமாரன் என்ற உறவு நீடிக்கும். நமது மூத்த சகோதரனாகிய கிறிஸ்துவின் மூலமாகவே பிதாவின் வாரிசுகளாகிறோம்.

வேறொரு தேவ வசனம் கிறிஸ்துவின் குமாரநிலை எவ்வளவு காலத்திற்கு என்பதை விளக்குகிறது. ‘‘நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களை பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது. நியாயப் பிரமாணத்திற்குப் பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்னென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது. [எபிரெயர் 7:28]

அதேபோல, ‘‘குமாரன் தமது பாடுகளினால் பூரணப் பட்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகிறார்‘‘[எபிரெயர் 5:8,9] என்று வசனங்கள் கூறுகின்றன.

எனவே, மனிதகுல பாவத்தை ஏற்பதினால் மரணத்தை ஏற்றுக்கொள்வதும், இரட்சகர் என்ற நிலைக்கு பாத்திரமாகுதலும், பூரணப்படுதலும் குமார நிலைக்கு ஏற்றதாகும். அவர் இவ்விதமாக என்றென்றைக்கும் பூரணராகிறார். வேறு வகையில் கூறுவது என்றால், குமாரன் என்ற உறவு நித்திய கால உறவு ஆகும்.

அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்தில் உள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளும் ஆன சகல வஸ்துகளும்... அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

ஆகவே வார்த்தையானவர், எல்லாருடையவராகிறார். பெறுகிறவராகவல்ல; சுதந்திரத்தை அளிக்கிறவராயிருக்கிறார்.

மனிதர்களின் சகோதரனாகிய கிறிஸ்து சுதந்தரமாகிறார்.

''இந்த கடைசிநாட்களில் குமாரன் மூலமாய் நமக்கத் திருவுளம் பற்றினார். இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்''. [எபிரெயர் 1:2]

ரோமர் 8ம் அதிகாரம் நாம் பிதாவுடன் அனுபவிக்கும் குடும்ப உறவுகளைக் குறித்து விளக்கமாகக் கூறுகிறது.

''திரம்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோ மென்று அவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச்சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தருமாமே. தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுடனேகூட உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனே பாடுபட்டால் அப்படி ஆகும்''.

இந்த வசனங்கள் கலாத்தியர் 4ல் கூறப்பட்டிருப் பவைகளை விட ஒரு படி மேல் சென்று, நாம் பிதாவின் சுதந்தரர் மட்டுமல்ல கிறிஸ்துவுடனேகூட சுதந்ரருமாகிறோம் என்று கூறுகிறது.

கிறிஸ்து பிதாவின் சுதந்தரர். அவருடைய சகோதரர்களாகிய விசுவாசிகள் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரவாளிகள் என்றால் அவர் உரிமையாகப் பெறுவதுதான் யாது என்று காண்போம்.

1. புதிய வானம் புதிய பூமி [வெளிப்படுத்தின விசேஷம் 21:22] ''ஜெயங் கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன் அவன் என் குமாரனாயிருப்பான்''. [வெளிப்படுத்தின விசேஷம் 21:7]

2. கிறிஸ்துவுடனே கூட மகிமைப் படுதல். ''நாம் பிள்ளைகளானால் சுதந்தருமாமே, தேவனுடைய சுதந்தரரும்,

கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும். [ரோமர் 8:17]

3. கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் அமரும் பாக்கியம். ''நான் ஜெயங் கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவ னெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும் படிக்கு அருள் செய்வேன்''.

கிறிஸ்துவின் சகோதரர்களாகிய ஜெயங்கொள்ளு கிறவர் களுக்கு என்னென்ன மகிமைகளும், உயர் பொறுப்புகளும் காத்திருக்கின்றன என்று யாரே அறிவார்? நித்தியத்தின் இந்தப் பக்கம் இருந்துகொண்டு அந்த உலகம் எப்படி இருக்குமென்று அளவிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் ஜெயங்கொள்கிறவனுடன் இயேசு தாம் பெற்ற யாவையும் பகிர்ந்து கொள்வார் என்பது வாக்குத்தத்தம்.

## முடிவுரை

மனிதகுலத்தை தம்முடன் ஒப்புரவாக்குவதற்காக தெய்வத்து வத்தில் நடைபெற்ற யாவையும் நினைவு கூறுவோம். இந்த வசனங்களை அறிந்தவர்கள் கர்த்தர் செய்த அன்பு, தியாகம் ஆகியவற்றை ஐயமறப் புரிந்து கொள்வார்கள்.

நாம் நமது ஆய்வுகளில் ஒரு கேள்வியைக்கேட்டோம். சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய வகையிலும் கர்த்தரிலிருந்து தூரப்படுத்தப்பட்ட மனுஷனை கிறிஸ்துவின் சரீரப்பாடு மரணத் தினால் மட்டுமே மீட்டுக்கொள்ள முடியுமா?

கிறிஸ்துஇயேசு சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய வகையிலும் செய்த தியாகத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது என்று முன்னர் பார்த்தோம். அவரின் தியாகப் பொறுப்பு மனிதனின் மீட்பு எவ்வளவு நீடிக்கிறதோ அவ்வளவு நீடிக்கும். நித்தியகாலமாக

கிறிஸ்து ஏசுவின் இரத்தம் நமக்கும் தேவனுக்குமிடையே பாய்ந்து நம்மை கர்த்தரின் பிள்ளைகளாக்குகிறது. எனவே, நித்திய காலமாக இந்த ஆசிர்வாதங்களை நாம் அனுபவிக்க ஏதுவாகிறது.

அதனால்தான் இன்றும் தேவ குடும்பத்தில் உறுப்பினார்கள் என்ற முறையில் நாம் தைரியத்தோடே தேவனைக் கிட்டிச் சேர்கிறோம். [எபிரெயர் 4:16] அவருடைய அன்பின்மேலும் நம்மை ஏற்றுக்கொள்ளுவார் என்ற எண்ணத்தின் மேலும் நாம் நம்பிக்கை வைக்கிறோம். ஏனெனில் நமது சகோதரனாகிய கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்திலிருந்து நமக்காய்ப பரிந்து பேசுகிறார். நமது ரட்சிப்பும், நம்மீது அவரது கண்காணிப்பும், அக்கரையும் உறுதியாகிறது.

''இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக் காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

தேவன் தெரிந்து கொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக் குள்ளாகத்தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்து மிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப் படும் ஆடுகளைப்போல் எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக் கிறபடி, நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார். உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிற வராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். மரண மானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்

களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்த கிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்ட நம்மைப்பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்''. [ரோமர் 8:31-39]

இந்த மகாப்பெரிய அன்புக்கு ஈடாக நமது அன்பும் பூரண வளர்ச்சி கண்டு நம்மையே கொடுக்குமளவுக்கு முன்வர வேண்டாமா? மேலும், இந்த உன்னதமான அன்பின் வரலாற்றை இன்னும் அறியாதவர்களுடன் இப்பேரின்ப அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டாமா?

